அனகை நா. சிவன்

எண்ணாத எண்ணமெல்லாம்



அனகை. நா. சிவன்

எண்ணாத எண்ணமெல்லாம் ...

காணிக்கை

என்னைப் பள்ளிக்கு அனுப்பி வைக்க முடிவெடுத்த
என் தந்தையின் நல்லெண்ணத்திற்கு.



பொய்யாமொழிப் பதிப்பகம்
66, காமராசர் சாலை,
அனகாபுத்தூர்,
சென்னை - 600 070.

ஆசிரியர் இயற்பெயர்	:	நா. சிவலிங்கம்
ஆசிரியர் புனைபெயர்	:	அனகை. நா.சிவன்
கல்வித் தகுதி B.Sc., D.B.M., C.I.S.,	:	அறிவியல் இளையர்; வணிகமேலாண் பட்டயம்; காப்பீடு விற்பனையாளர் – சான்றிதழ்
தாள் விவரம்	:	10.5 Kg வெள்ளை அச்சுத்தாள்
மொத்த பக்கங்கள்	:	128
முதற்பதிப்பு	:	செப்டம்பர் 1998
உரிமை	:	அனைத்து உரிமைகளும் ஆசிரியருக்கே.

விலை : ரூ.25.00

அச்சிட்டோர் : கடலோசை அச்சகம், சென்னை - 24.

ஒளி அச்சு : கிராபிக் ஆக்ஸஸ், சென்னை - 94.

முன்னுரை

இன்று நம்மைச் சுற்றி நாம் காணும் பலவகைக் காட்சிகள் என்னென்ன?

நாட்டின் சொத்தைப் பாழாக்கும் நாசக்காரர்களை வளர்த்து விட்டிருக்கிறோம். மோசடிக் கும்பல்கள் கொழுப்பதைத் தடுக்கவில்லை. பேருந்துப் போக்குவரத்துப் பெருஞ்சாலைகள் செப்பனிடப்படுகின்றன. ஒப்பந்தக்காரர்கள் ஓரிரு நாட்களில் வேலையை முடிக்கிறார்கள். அடுத்த மூன்று மாதங்களுக்குள் சாலை முழுவதும் பெயர்ந்து குழிகளும் பள்ளங்களும் சேறும் சக்கடையுமாக அந்தச் சாலை சிதைந்து விடுகிறது. சாலை போட்டதற்கான செலவுக் கணக்கு காட்டியாகி விட்டது. அடுத்து வரவு-செலவு திட்டத்தில் இன்னும் சில கோடிகள் அதே சாலையை மீண்டும் புதுப்பிக்கச் செலவு. ஈனத் தனங்களின் இடுப்பொடிக்க யாரேனும் செயல்படுகிறார்களா? சாலை போட்டவுடனே மழை பெய்தால் அப்போதே வாயைப் பிளந்து கொள்ளும் அந்தச் சாலை. நம்பத் தகுந்தவனா அந்த ஒப்பந்தக்காரன்? மக்கள் நலத்தில் அக்கரை உள்ளவனா? பொறுப்பாளியா அந்தப் பணியை மேலாண்மை, மேற்பார்வையிட்ட அதிகாரி? கடந்த ஐம்பதாண்டு களில் இந்த நிலை மாறியிருக்கிறதா? இனியேனும் மாறும் என்று எதிர்பார்க்கலாமா?

மனித மனங்களின் மாசு துடைக்கப்படாத வரையில் சுற்றுப்புற மாசுகள் துடைக்கப்பட்டு விடுமா? திட்டமிட்டுச் சதிகாரர்கள் திருடிக் கொண்டிருக்கும் வரை தெருவில் வதைகின்ற திக்கற்றோர் நல்வாழ்வு காண்பார்களா? இல்லங்களிலே இழிவுக் காட்சிகளை வழிந்தோட விட்டு, காமுகக் கயவர்களை மெச்சும் கறைபட்ட உள்ளங்கள் சுற்றுப்புறச் சூழல் மாசடைந்து (சுகாதாரம் = சுக+ஆதாரம்) நன்னல அடிப்படை கெடுவதை எவ்வாறு உணரும்?

அன்றாட உழைப்பில் அங்கம் குலைந்து மாலையில் உதிர்ந்த மாலையாய் இல்லந்திரும்பும் இரக்கத்திற்குரிய ஏராளமான நம் நங்கையர் நலியத் தேவைதானா? புதுமணப்பெண் தாலியோடு மீண்டும் தன் அலுவலகத்தில். 800-1000 இதற்குமேல் தாண்டாத இருபதாண்டு அடிமை ஒப்பந்தம். இரண்டு பேரும் உழைத்தால்தான் ஏதாவது ஒழுங்காகச் சாப்பிட முடியும். குடும்பம் நடத்துவதே பெரிய கொடுமையப்பா இந்த விலைவாசியில். ஒருவர் வருமானம் உப்புக்கும் போதாது என்கிறீர்களே. இந்த நிலையை ஏற்படுத்தியவன் யார்? பெண்களை மதிக்கத்தக்க மாணிக்கமாக, இல்லத்தின் எழிலோவியமாக, வியர்வை கசியாத வெங்கலச் சிலையாக, வைத்துக் காக்கும் வழக்கத்தை மாற்றி வைத்தவன் எவன்? ஏன்? கொள்ளைக்காரர்களின் கொடிய பொருளாசைக்குக் குடும்பப் பெண்களின் மானம் கொள்ளை போகிறதே. ஒரு பெண் வீட்டை விட்டு வெளியே வரத் தேவை ஏற்பட்டால், கட்டாயச் சூழ்நிலை உருவாகுமானால் தன் குடும்ப மானமே குலைந்ததாகக் குறுகிப்போன மான இனம் அல்லவா நீ?

வெறுமைகளில் வேதனைகளில் விவரமற்றுச் சிக்கித் திணரும் வெற்றுக்கூட்டமாக மாந்த இனம். இந்த வீழ்ச்சி தடுக்கப்பட வேண்டாமா? தீர்வுகள் உள்ள உறுதியில். சேர்ந்து செயல்படலில். எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியர் ஆகப்பெறின். முயற்சி மெய்வருத்தக் கூலி தரும். உலக வாழ்வின் உயர்வுக்கு ஒரே வழிகாட்டி உலகப் பேரறிஞர் வழங்கிய ஒப்பற்ற அறநூல். நலவாழ்வின் நன்னம்பிக்கை 'மக்கள் ஒன்றியம்'. அன்பால், அறிவால், ஆற்றலால் அடைய முடியாத வெற்றியா?... சிந்திப்பீர்! உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும். வெல்லும் வழி குறள்நெறியே. அறிவோம், மேன்மையுறுவோம்.



அணிந்துரை

பாவலர். பொன்.செல்வராசு, எம்.ஏ.,
பாங்க் ஆஃப் இந்தியா.
சேவைக்கிளை, சென்னை - 2.

கெழுதகை நண்பரும் பாவலருமான திரு. அனகை.நா.சிவன் அவர்களின் ''எண்ணாத எண்ணமெல்லாம்'' என்னும் செய்யுள் நூலின் கையெழுத்துப் படியைக் கண்ணுற்றேன். அருந்தமிழுக்கு அணிசேர்க்கும் இவரது இரண்டாவது நூலுக்கு அணிந்துரை அளிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஆழ்ந்த புலமை, அடக்கமான போக்கு, உயர்ந்த குறிக்கோள், ஓயாது உழைக்கும் திறன் கண்டு பேருவகை அடைவதோடன்றி, நயம்செறிந்த நறுங்கவிதைச் சோலையிலே - மலர்ப்பூங்காவிலே உலவினேன். தமிழ்மரபு, தமிழ்ப்பண்பு ஒளிர்ந்திடும் பாடல் பொழிவில் நனைந்து எல்லையில்லா மகிழ்வெய்தினேன்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் சாரலும், பாவேந்தர் பாரதிதாசனின் வேகமும், வேட்கையும், கவிமணியின் ஆற்றலும் செய்யுள் இலக்கியமாக உருவெடுத்திருப்பதே இச்செய்யுள் நூலாகும்.

உள்ளத்தில் ஊறிக்கிடக்கும் உணர்ச்சி பீறிட்டெழும்போது கவிதை தோன்றுகிறது. அறியாமலேயே ஒலி நயம் துணைக்கு வருகிறது. சொற்கள் பாய்கின்றன; சொல்லோவியமாக அழகுக் கவிதைகள் உருவெடுத்து நம் உள்ளமெங்கும் ஊடுருவுகின்றன.

உண்ணுதலை விட உணர்வது சிறந்த பயனைத் தரும். உணவின் சுவை ஆறு ஆனால் பாட்டின் சுவையோ ஒன்பது. பாட்டின் (கவிதையின்) குறிக்கோள் இன்பம் ஊட்டி, இடித்துக் கூறி நன்னெறிச் செலுத்துவதே ஆகும். அந்த வகையில் விஞ்சி நிற்பது அனகை.நா.சிவன் அவர்களின் கவிதை மலர்களாம்.

மனித குலம் தழைத்தோங்க, பாரெங்கும் அன்புநெறி பெருக, தீயன சுட்டி அதன் அழிவைக் காட்டி, செத்துக் கொண்டே வாழும் நடைபிணங்களை உயிர்த்தெழச் செய்கிறார் கவிஞர்.

பல்லாண்டுகள் மாணவர் மனங்கொள பாடம் நடத்தி, அதன் பயனாய் - விளைவாய் - விடைகாண வேண்டும் என்ற வேட்கையால் எழுந்ததே இந்த விழுமிய - நீடித்து நிலைத்த உயர் இன்பம் தரும் ''எண்ணாத எண்ணமெல்லாம்'' என்னும் கவிதை நூலாகும்.

கற்பனை, உணர்ச்சி, ஒலிநயம, வடிவம், உணர்த்தும் பாங்கு, மரபு, அமைப்பு, நடை அனைத்தும் கவினுறக் காட்டி, பழந்தமிழ்ச் சுவைச் சாற்றின் பருக வைக்கிறார் கவிஞர். அவ்வப்பொழுது எழுதிய கவிதைச் செண்டுகளைச் சேகரித்து, தொகுத்துத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தீர்வாக அளிக்கிறார்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து கிடக்கும் ஊழலைக் கவிஞர் அழகாகச் சுட்டிக்காட்டி,

''விதைப்பது விளையும், விரும்புவது கிடைக்கும், விதைத்தது ஊழல் வேறெது விளையும்?

பதைப்பவர் பல பேர் பசப்பினில் தோர்ந்தோர்'' எனச் சாடுகின்றார்.

''கட்சிகள் யாவும் கயமையின் இருப்பிடம்'' என்று உற்றறிந்து உண்மையை உரைக்கின்றார்

மூடநம்பிக்கையை வேரறுக்கும் இக்கவிஞர் பெருமகன், கடவுள் ஏன்? என்னும் தலைப்பில்

''தொலைவினில் அறிவை வைத்துத் தொழுவதால்

மடமைகள் அணிவகுத்து - வருவதோடன்றி

''தெருக்கள் தோறும் கோயில்களா
தெண்டச் சோற்றுச் சாமிகளா
வாய்மை அறங்கள் வளர்க்காமல்
வணங்கும் கோயில் சாமிகளால்
கீழ்மைச் சேறு வன்முறைகள் பெருகும்'' என்று உறுதியாகக் கூறுகிறார்.

காதலுக்கு உரம்போடும் இக்கவிஞர் ஈட்டி ஒன்றை எடுத்து, தீட்டி ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு வித்திடாத

''ஒழுக்கமில்லா மானிடனை
ஊழலுக்கு உரம் போடும் வஞ்சகனை
மடமைதனை கடமையாகக் கொண்டவனை
தன்மானம் இல்லாத ஈனப்பிறவிகளை

சுட்டிக் காட்டுவதிலே குறியாக இருப்பதோடன்றி அவர்கள் இருப்பதை விட இறப்பதே மேல் என்றுரைக்கின்றார்

இறுதியாக, கொடுமைகளைச் சாடுகின்ற இவரது கவிதைகள் கனமான உள்ளடக்கம், மயங்காத நீதி கொண்டு விளங்குவதால் ''புதிய விடியலுக்கு விதை'' என்பதில் ஐயமில்லை.

தொடரட்டும் தமிழ்ப்பணி!

18.9.98 வாழ்த்துகளுடன்
அளகாபுத்தூர், சென்னை - 70. **பொன். செல்வராசு**

அறிவாற்றல், அன்பு, பொதுநல வேட்கை, தொண்டுள்ளம் மிக்க பாவலர் பொன். செல்வராசு, எம்.ஏ., அவர்களது அணிந்துரைக்கு என் உள்ளார்ந்த நன்றியுரித்தாகுக.

– அளகை. நா.சிவன்

ஆதலின், நல்லீர்!

புதினம் கதைகள் போக்கும் நேரம்
அதிக மல்லவா? அறிவீர் செய்யுள்
திரண்ட கருத்தின் தீர்ப்பாய் வடிப்பாய்
நிரம்பி யிருத்தலின் நினக்கே பெரும்பயன்
நேரம் உழைப்பு சிறிதே போதும்

படிக்கப் பழகு பாட்டே எளிது
செய்யுள் வடிவம் சிறப்பு சிக்கனம்
நீட்டிச் சொன்னால் நிகழ்வது உரைநடை
பாட்டாய்ச் சொன்னால் படியும் மனதில்
எல்லாப் பேச்சும் எழுத்தும் செய்யுளாய்
இருந்தன பண்டைத் தமிழகத்து என்பர்
வெல்லச் சுவையாய் விரும்பி மாந்தர்
ஓத உணர்த்த உதவும் செய்யுளே
ஆதலின் நல்லீர்! ஆற்றல் பெறுவீர்
தீதறு பாங்கின் திறம்பெற நாடுவீர்! (11.7.97)

நல்ல நூல் களைத் தேடுவோர் நாட்டின் பெருமையை நாடுவோர்

குப்பைக் கதைகளைத் தூக்கி எறி கொள்கை ஒன்றின் நோக்கம் அறி

எழுதுகோல் வன்மை எண்ணத்திண்மை பழுதிலா வாழ்வைப் படைக்கும் உண்மை.

நுகர்வோர் காட்சி

திருத்தந் தோறும் பலகை யில்லை
　　நிற்கும் பேருந் தெண்கள் இல்லை
வருத்தும் நிலையிதை மாற்றுவார் எவரே?
　　மாநக ரிதனில் வளர்ச்சி மரணம்
பெருத்த நகரம் பெறும்வரு மானம்
　　பிழைகள் பெருகும் பெருமை அருகும்
கருத்தொடு முறைப்படி கடமை யாற்றார்
　　கவலை நுகர்வோர் காட்சி தொடர்கதை

நுகர்வோர் உரிமை நூல்கள் சட்ட
　　நுணுக்கம் அறிந்து நோக்கம் புரிந்து
நகர்நா டுர்கள் நலம்பெற லின்றி
　　நலிவு நடுக்க நயந்து வாணிகப்
பகைவர் இடத்துப் பணிந்து பயந்து
　　பயன்கள் இழந்து பணத்தைக் கொடுத்துத்
திகைக்கும் மாந்தர் திரளாய்க் கிடப்போர்
　　திருடும் ஆட்சியைத் திருத்திட வேண்டும்.

தொடர்கதை

பஞ்சாங்கம் தொடர்கிறது பழியாய் என்னே!
　　பணவணிகம் அச்சடித்துப் பரப்பு வோர்க்கு
பஞ்சாகிப் பகுத்தறிவு பறக்கும் இன்றும்
　　படிப்பறிவு கொண்டோரும் பார்க்கின்றாரே
எஞ்சாமல் மூடமைகள் இறந்தவாக
　　எல்லாரும் கொண்டாடும் இன்ப நாளை
நெஞ்சார வரவேற்பீர் விருப்பமுண்டேல்
　　நிகழாதோ மிக விரைந்தே நினைப்பீர் செய்வீர்.

அறிவிருந்தால் ...

மெச்சும் படியாய் மேன்மை புரியார்
அச்சமில்லா அரக்க ஆணவக்
கொச்சைக் கீழோர் பச்சைப் புளுகர்
எச்சில் கட்சிகள் ஈனர் தலைவர்

வெறிநாய்க் கூட்டம் வேட்டையாடும்
குறியாய்ச் சிலரைக் கொலை செய்து ஓடும்
அறியாப் போலி நாடக மாடும்
அறிஞன் தமிழன் ஆணவம் பாடும்

ஒட்டுற வில்லா ஓநாய்க் கூட்டம்
சட்டிக் கறிக்குச் சண்டை யடிதடி
வெட்டு குத்து வீம்பு வஞ்சம்
கட்சிகள் யாவும் கயமை யிருப்பிடம்

எல்லார் நலனும் எவர்கவனித்தார்
பொல்லா வீணர் பொறுப்பில் அமர்ந்தார்
கொல்லை பாழாய்க் குடும்பங் கீழாய்
எல்லாப் பயனும் எத்தர் நுகர்ந்தார்

ஈனப் பிறவிகள் ஏற்றம் பெற்றார்
மானப் பிறவிகள் மறுகித் தவித்தார்
கூனப் பிறவிகள் கொள்ளைக் கூட்டம்
ஏனிப் படியெனில் எண்ணம் கீழ்மை.

மரபு மேன்மையும் மனத்தின் தூய்மையும்
தரமும் தகுதியும் தம்முயிராக
உரமும் அறிவும் உடையரேல் இந்நாள்
காவுகட்சிகள் காணப்படுபவோ?

கொடிய போக்கு

வெறியர் செல்வரை வீழ்த்தி விடிவுற
வறியோர்க் கெல்லாம் வழியொன்றேதான்
குறிக்கோள் ஒன்றால் கூடி வாழ்தல்
நெறிமுறை உறவால் நிம்மதி தேடல்

கோடி கோடிகள் கொழிக்கும் நாட்டில்
கூடி வாழாக் கொடிய போக்கால்
ஓடி ஓடி உழைத்துருக் குலைவர்
வாடி வதங்கி வறுமையடைவர்

திங்கள் பலவாய்த் தெருவில் கிடக்கும்
அங்கிங்கு எனப்பல ஆலைகள் தொழிலர்
இங்கெவர் இவர்க்காய் இரங்கி நொடிக்குள்
மங்கல வாழ்வாய் மாற்றிக் காட்டினார்?

தேடும் யாவும் திருடர் பிடிக்குள்
கேடும் தாழ்வும் கீழ்மையும் நிறைந்தன
கூடிச் சுரண்டக் கொடியவர் இணைந்தார்
ஆடு நாடகம் அவனி முழுதும்.

கேடர் ஒற்றுமை கீழோர் கூட்டு
வணிகச் சந்தை வளர்தொழில் செல்வம்
அணிமணி யாடை ஆக்கம் உலகுள
சொத்துகள் யாவும் சூழ்ச்சி யாளர்க்கைப்

பிடிக்குள் கமுக்கப் பேச்சுகள்; ஆணவ
அதிகா ரங்கள் அடிதடி அரசுகள்
இவைகள் யாவும் இல்லாதொழிய
அவைகள் தோறும் அறிவின்தெளிய
ஒவ்வொரு வரும்வந் தொன்று சேர்க
செவ்வையாய்ச் சிறப்பாய்ச் சேர்ந்துமே லுறவே. (10.6.97)

கொள்கை?

கைகளை நசுக்கிக் காலுக்கு மருந்திடும்
பொய்வழி யரசுகள் புரட்டுக் கொள்கை
ஆலை கள்தொழிற் சாலைகள் மூடி
ஆண்டுகள் கழிய அலைக்கழித் தாயிர
மாயிரம் குடும்பங்கள் அழுதலைந்து அழிய

புதிய தொழில்களாம் பொழியுமாம் பொன்மழை
பெரம்பூர் வண்டலூர் பிச்சையெடுக்கையில்
வண்டலூர் பெருமந்தூர் வளங்கொழித்திடுமாம்
இருக்குந் தொழில்களை இழுத்து மூடி
பெருக்கு வான்தொழில் பிச்சையெடுத்து

முரண்கள் ஈட்டம் முட்டாள் முடிவு
பத்தாண்டு உழைத்தும் பணிநிலை யில்லா
சொத்தாள் கொள்கை சுரண்டல் ஆணைகள்
உழைப்பவர் உலகம் உருக்குலைந்து அவலமும்
இழப்பும் தொடர்கதை ஏன்மா றாதோ?

நலமுற வாரீர்!

கட்சிகளை விட்டுக் கவிஞரெலாம் ஒன்றாகி
நட்புறவைப் பேணி நலமுறுக – திட்டமுடன்
ஆழிசூழ் ஞாலமெலாம் ஆளும் கவிவளந்தான்
பாழுறுமே கட்சிக்குட் பட்டு.

கொடுமை

கொள்கையினால் உயர்ந்தோரைக் கொன்று விட்டுக்
குடிகெடுப்போர் அரசாளும் கொடுமையிங்கு
கொள்ளையரை வென்றறஞ்சூழ் குடிமை யாக்கும்
கொள்கையினார் கூடுதற்குக் கூடாமை யேன்?
வெள்ளையரை விரட்டி; யிழி வீணர் கையில்
விடுதலையைப் புதைப்பதற்கு விட்டு விட்டீர்
நொள்ளையராய் நோயினராய் நொந்து நொந்து
நூறு குறை பேசிடுவீர் நோக்கம் உண்டோ?

நுட்பமிலா வெறும்பேச்சு நொடியில் சண்டை
நூலறிவும் பொதுஅறிவும் நுனிப்புல் வேகம்
திட்பமிலா ஊருறவு தெளியா நட்பு
தீங்கின்ரே கூட்டுறவில் திளைத்தார்; நல்லோர்
ஒட்டுறவை யார் விரும்பி உழைத்தார் சேர்த்தார்
உண்மையெனும் பெருஞ்செல்வம் உள்ளோர் யார் யார்?
கெட்டவரைச் சேர்ந்திழியும் கீழோர் கூட்டம்
கெடுதிகளை மாற்றுதற்குக் கீழ்மேல் பார்க்கும்.

தூயோரை விரும்பாது துடுக்குப் பேச்சால்
சூதுகளை வம்புகளைச் சொந்த மாக்கும்
வாயோடு வளர்கயமை வஞ்சம் ஈனம்
வாய்மையினை மெச்சாத மானக் கேடு
தாயோடு சூதாடும் சள்ளை நொள்ளை
தமிழுறவோ தன்மானத் தருக்கோ யில்லா
நாயோடு நாட்டாண்மை நடத்தும் வீணர்
நரிக்கூட்டம் நாட்டோர்க்கு நாமம் சாற்றும்.

வாயடித்துக் கையடித்து வளமை காணும்
வழியின்று நிலை பெற்று வன்முறை சூழ்
தீயரடி பணிந்தவரைச் சிறப்பிக்கின்ற
தில்லுமுல்லு தீங்குகளே திறமை யென்னக்
காயடிக்கப் பட்டவர்கள் கட்சி யாகிக்
காட்டாட்சிக் கூட்டாட்சிக் கள்வர் ஆட்சி
நோயழிக்கப் புறப்படவோர் நோக்கம் கொள்வீர்
நொந்திருக்கும் நிலைமாற்றும் நுட்பம் கற்பீர்.

பகைமை மேலானது

அறிவின் வழியை அடைத்துப் பொருள் பெறும்
குறும்பர் காமுகர் கோமாளிக் கூத்தர்
வழங்கும் மகிழ்ச்சி வரவினைக் காட்டிலும்
பகைவரால் துன்பம் பத்துக் கோடி
மடங்கு நல்லதாம் மறையவன் கூற்றே
''நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி யுறும்'' (816) எனல் காண்பாய்
எத்தனை கூத்து கும்மாள ஈனம்
அத்தனையும் உன் அறிவை வளர்க்கவா?
இத்தனையும் நீ இரவும் பகலும்
பித்தனைப் போலப் பெருவிருப்புற்று
மெத்த யிழிந்தனை 'மெய்'யென மறுப்பாய்
சத்திலாச் சருகே! சற்றேனும் தெளி
வுற்றா யானால் உள்ளம் மகிழுமே.

எதற்கு?

திட்டங்கள் தீட்டு கின்றார்
தெரிந்ததா சென்ற பாதை?
சட்டத்தால் திருடு கின்றார்
தலைவராம் ஈனர் கட்சி
வட்டங்கள் கயமை கேடு
வழிப்பறிக் கூட்டம் எந்தப்
பட்டங்கள் பெற்ற பேரும்
பயல்களை அடக்க வில்லை;

அறம்படை ஆட்சி செல்வம்
அரண்மனை அமைத்துக் கொண்டு
புறம்பட உன்னை வைத்துப்
புகழ்படப் பொசுக்கு கின்றான்
திறம்படச் சிக்கிக் கொண்டு
சீரழி தொண்டன் மானம்
பறந்திடத் தண்டல் உள்ளூர்
பழித்திட வசதி வாய்ப்பு;

ஈனத்தால் கொழிக்கிறானே
எள்ளளவு அச்ச மின்றி
மானத்தார் அவனுக்கெல்லாம்
மாந்தராய்த் தோன்ற வில்லை
தானைக்குத் தலைவ னாமே
தனிமரி யாதை யாமே
வானத்துக் கேடு மண்ணில்
வளரவா கட்சி யாட்சி?

பெரும்பான்மை

நன்றியிலார் ஈனர்மிகு நஞ்சு நெஞ்சர்
  நாட்டாண்மை வீழ்ந்துபட நல்லோர் கூடி
ஒன்றுபட, சேர்ந்திருக்க உண்மை ஓங்க
  உலகமெலாம் ஓர் குடும்ப உறவாய் வாழ
அன்றுயர்செந் தமிழறவாழ் வமைந்த தைப்போல்
  அன்புடைமைப் பொருள்பொதிந்த அருமை யுள்ளம்
இன்றுடைமை யாய்ப்பயிலும் இணக்கம் மேன்மை
  ஈடேறும் படியெழுக இன்றே நன்றே.

மக்களற மதிப்பழித்து மகிழ்ச்சி காணும்
  வன்நெஞ்சம் வாணிகத்தில் வளர்த்து கேடு
மிக்கபெருஞ் செல்வத்தில் மிதந்திருத்தல்
  மேன்யெனும் கயமையினை மெச்சு கீழோர்
எக்கணமும் விழிப்புடனே ஏய்துக் கொண்டே
  இணைந்துலகச் சந்தையிலே இன்பங்காண
மக்குகளாய்ப் பெரும்பான்மை மறுகும் ஆண்மை
  மனந்திறந்து பொதுவுடைமை மலர்விக்காதே.

பணத்தேவை மறுப்பதிலை பணத்தின் மீது
  பற்றியெரி பேராசை படைத்த தில்லை
குணத்தேவை கொள்கையது குன்றா வண்ணம்
  குவலயத்தார் உயிராகக் கொண்டுள்ளாரா?
உணத்தேவை உடைத்தேவை உயிர்மானத்திற்கு
  உதவுவது பெருஞ்செல்வர் உணர்ந்திருந்தால்
பணத்தாசைப் பலகுடும்பம் பகட்டிலாது
  பண்புநலம் பொதுவுடைமை பரவி டாதோ?

உன் மூளையை ...

கையைக் காலை ஆட்டினான்
கணக்கில்லாமல் வாங்கினான்
ஐய! பார்க்க ஓடினாய்
அறிவுக்கென்ன நாடினாய்?
பையைத் தடவிப் பதறினாய்
பணமில்லாது கதறினாய்
ஐயகோ! உன் மூளையை
அலசி மாற்றிப் போடடா!

பொழுதுபோக்குப் புலைநடை
போதை யேற்றும் இழிநடை
கழுதை பன்றி கழிசடை
கலையின் பெயரில் களிநடை
பழுதுபட்டு மொழிநடை
பண்புகெட்டு வழிநடை
தொழுது கூடும் பழிநடை
சூது மாய்க்க விழிப்படை

வேண்டும்

ஒற்றுமை வலிமை யென்னும்
உண்மையைப் பயில வேண்டும்
சுற்றிலும் உள்ளோர் காக்க
தூய்மைகள் அறங்கள் வாய்மை
கற்றலும் கற்றோர் மேன்மை
கடமைகள் யாவ ருக்கும்
பற்றொடு பரப்பல் வேண்டும்
பயன் முறை படைப்பதற்கே!

கடையரிடம் சிக்குவதா ..?

இடையிடையே எல்லாரும் இழிவு கண்டார்
இருந்துபழி ஏற்பதற்கா எல்லாம் செய்தோம்?
கடையரிடம் கட்சியிவர் கலைகளெல்லாம்
கருதுபொருள் பெருங்கொள்ளைக்கயமைக் கேயாம்
படைநடத்திப் பகைமையெனும் பயிர் வளர்த்துப்
பதவியெனும் அறுவடைக்கே பாயும் வேங்கை
கடைவிரித்த கண்ணியத்தைக் காணவில்லை
கடையரிடம் சிக்குவதா கருத்து வேள்வி?

இருட்குகையுள் பொதுநலத்தை இறுகப் பூட்டி
இரவு பகல் தன்னாட்சி எழுச்சி பேசி
குருட்டுகுணம் கூட்டமைப்பு கொச்சையாட்சிக்
கொடுமையினால் மக்களாட்சி கொல்லப் பட்டுத்
திருட்டரசு திறமையெனச் சீரழித்துத்
தீராத கேவலங்கள் திரண்ட ஈனம்
விரட்டுவதார்? மானமுள வீர மைந்தர்;
விளம்புவதார்? நல்லோரே; வேகங் கொள்வீர்

அருட்கொடையால் இணைக்கின்ற அமைப்பு வேண்டும்
அன்புடையார் பயன்கருதா ஆர்வத் தொண்டர்
பொருட் குவியல் பொன்னணிகள் பொதுநன்மைக்கே
புரிந்தளிக்கும் புகழ்மனத்தர் பொழுதும் வேண்டும்
மருட்டுபகை மாமமதை மன்னர் போலி
மக்களினத் தலைவரெலாம் மறைய மானம்
உருப்படவே உயிர்த் துணையாய் உயர்ந்தவுள்ளம்
உள்ளோரே ஊரெங்கும் உதவ வேண்டும்.

மீண்டு வரும் கீழ்மைகளே .....

புலனாய்வு செய்தாலும் புரியா வண்ணம்
　　பொய்யர்அர சாட்சி செய்யும் புதிய பூமி
கலனாகும் நடுவணரசாட்சி பொல்லாக்
　　கயமைகளில் முழுத்திறமை காட்டக் கற்றோர்
நிலமாளப் படுமுறைமை தெரியா மூட
　　நெடுமரங்கள் வாக்களித்து நிலைமை கெட்டு
பலகோடி பலகோடி பதுக்கல் கொள்ளை
　　பழிநாணாப் பாதகர்க்கீழ்ப் பரத நாடே

குறைமலிந்து கறைமிகுந்து கூட்டு பேரம்
　　கொலைக் குற்றக் கயவருடன் கொழுக்கும் கொள்ளை
உறைவிடமே அரசியலாம் ஊழல் ஊற்றாய்
　　ஒன்றுபல ஆயிரமாய் ஊர்நாடெங்கும்
நிறைய வரும் கீழ் மக்கள் நிலைப்பதற்கு
　　நீநானென் றெவரெவரோ நெடிதுழைத்தார்
சிறைபுகுந்து விடுதலையைச் சேர்த்தோர் போனார்
　　திரைபுகுந்து கெடுதலைத்தாம் சேர்க்கின்றாரே
இந்திய நாடெங்கும் மாநிலங்கள் தோறும்
　　இழிதொழிலர் கண்ணியங்கொல் ஈனர் கூடி
முந்துறவே சான்றோர்கள் முடங்கினாரோ
　　முழுவீச்சில் சால்புக்கு முடிசூட் டாமல்?
வெந்துமனம் நொந்துமற வேங்கை மைந்தர்
　　வீழ்ந்திருக்க வீணர் செயல் வெற்றிதானோ?
செந்தழலாய்ச் சீறியெழு சிறப்பு நாட்டு
　　செல்லரித்த ஆட்சிகளைத் தீர்த்துக் கட்டு
ஆண்டுபல வாகுமொரு வழக்கெடுத்தால்

அதற்குள்ளே ஆட்சிகளும் மாறிப்போகும்
தீண்டுதற்கு முடியாமல் திசை தப்பிப்போய்த்
தீர்ந்து விடும் நிகழ்ச்சிகளும் நினைவிலின்றி
மீண்டு வரும் கீழ்மைகளே மேலிருக்கும்
மெச்சு இழிஞர் கொத்தடிமை மிகுந்த நாடு
மாண்டொழிந்த மாட்சிமைக்கு மறுபிறப்பு
மாந்தர்தரும் மதியொளிநாள் வருதல் என்றோ?

(27.1.97) ●

செயலிதுவா?

அரசிய லரங்கி லிந்நாள்
அறிவிலா ரதிகம் உள்ளார்
முரடரை வளர்த்து விட்டு
முறைகெட முன்னேற்றங்கள்
விரைவினில் காண எண்ணும்
வீணரைக் காணக் காண
கரைவது நெஞ்சம் அந்தோ
காடிது நாடே அல்ல.

உயிருட னெரிக்க வெண்ணும்
உன்மத்தம் மாந்தர் நெஞ்சில்
பயிலுதல் பண்போ கட்சிப்
பாடமோ? பயனோ? பாழாம்
வயிறிது வளர்க்க, வாய்ப்பு
வளமிகச் செழித்து வாழச்
செயலிது வென்று சொன்னால்
சீச்சீயிவ் வுலகம் வீழ்க.

நிமிர்த்த வல்லார்

சட்டத்துக் குட்பட்டுத் தவறு செய்தால்
சரியென்றா ஆகிவிடும்? தவறே யில்லா
திட்டத்துக் குட்பட்டுத் திருத்தமுள்ள
செயலெல்லா நிலைகளிலும் சிறந்தாலன்றிச்
சட்டத்தைப் பயன்படுத்தித் தகுதி கூட்டத்
தலைகீழாய் நின்றாலும் தரம் வராது
பெட்டிப்பொய்க் கயவர்செய் பிழைசட்டங்கள்
பெருங்கேடர்க் கரணாகும் பெருமையற்றே

முறைமன்றம் சான்றாண்மை முற்றுப்பெற்ற
முதிர்ச்சியினார் தலைமையினால் முழுமை யாகும்
குறைகண்டு பொங்கறநெஞ் சுள்ள மேலோர்
குலையாத நெஞ்சுறுதி கொடுக்குந் தீர்ப்பு
நிறைகொண்ட பொதுநெறியை நிலைக்கச் செய்யும்
நேர்மையிலார் ஆட்சிநிலை குலையச் செய்யும்
கறைகண்ட கட்சியரசியல்கலங்க
காவல் அரணாய் விளங்கக் களங்கம் நீங்கும்

ஊழலர சாங்கங்கள் ஒழிந்துபோக
உயிராக அறம்பேணும் உலகம் ஓங்க
வாழ வகை யெதுவென்றால் வழக்கு மன்றம்
வழங்குமுறை நெறியங்கே வளையாநேர்மை
ஏழைகளும் வறியோரும் ஏற்றத் தாழ்வும்
இருக்குமிழி நிலைமையிலும் ஏக்கம் தீர்க்கும்
சூழலது வாய்க்காமல் துணைவே றேது?
தூணாகும் நடுநிலையர் துலங்க வேண்டும்.

கொலைவெறியர் பாதகர்கள் கொள்ளைக் கூட்டம்
கொடுவஞ்ச வணிகரொடு குலவிக் கொஞ்சி
நிலையுயரக் கட்சியர சியல்நிகழ்த்தி
நெடும்பள்ளத் தாக்கினிலே நேர்மை வீழ்த்தி
மலையளவு பொய்ப்புகழால் மலைக்க வைத்து
மன்னர்தள பதிவீரர் மலிந்திருக்க
நிலைகுலைந்த அறநெறியை நிமிர்த்த வல்லோர்
நெஞ்சுறுதி முறைமன்ற நேர்த்தி யாரே. (7.2.97)

மானமிகு கியூபா (அல்லது)

கியூபா தரும் படிப்பினை

வல்லரசே பகைத்தாலும் வணங்க மாட்டார்
வன்முறைக்கோ எதிர்ப்புக்கோ மருள மாட்டார்
கல்வி நலம் எளிமையறம் கடமை தங்கள்
கண்கருத்தாய்க் கியூபாவும் கண்டுழைத்து
வெல்லரசு தன்மான விளக்கமாக
வெற்றிநிலை மெய்ப்பித்தார் விவரமுள்ளோர்
செல்வழி தம் பகிர்வுணர்வு சிறிதும் தாழார்
திறங்காட்டி ஒற்றுமையால் செழிக்கின்றார்காண்.
அமெரிக்கத் தாக்குதலை அற்பமாக்கி
அறிவுடைமை பொது நலமே ஆக்கம் ஊக்கித்
தமதுரிமை தன்னாட்சி தலைசிறக்கச்
சற்றேனும் குறையில்லாத் தகுதி மிக்கோர்
அமைதிவழி அனைவர்க்கும் அனைத்துமாக்கும்
அரசாங்கம் முழுப்பயனும் அளித்துக் காக்கும்
எமைவெல்ல எவராலும் இயலா தென்னும்
எடுப்பான மானத்தார் இயங்கும் கியூபா.

அடடா ஓ! பொன் விழாவா?

விடுதலை வாங்கும் போது
　　விளக்கினார் காந்தி யண்ணல்:
''கெடுதலை மாற்று தற்குக்
　　கிடைத்தநல் வாய்ப்பை நீங்கள்
நடுநிலை வாய்மை யாலே
　　நாணயத் தொண்டாய்ச் செய்வீர்,
விடுதலை யியக்க நோக்க
　　வெற்றியின் பின்னர் 'காங்ரஸ்

கட்சியைக் கலைத்து நாட்டுக்
　　கடமையின் தேவைக் கேற்ப
நட்புநல் லுணர்வு கொண்டு
　　நாட்டுயர் வெய்தும் நோக்கால்
திட்டமிட் டுழைப்பீர்'' என்றார்
　　திருடர்பொய்த் தீயர் வஞ்சர்
விட்டிலர் சிதறும் கட்சி,
　　விளங்குமா நாடும் வீடும்?

பொன்விழா மகிழ்ச்சி யார்க்கு
　　பொங்குகண் ணீர்வெள் ளத்தில்?
துன்பமே நாடு முற்றும்
　　சூழ்மத சாதி மோதல்
இன்னமும் சாதி கேட்கும்
　　இந்தியச் சட்டம் ஏனாம்?
ஒன்றிவாழ் இந்தியாவை
　　உருக்குலைத் திடுவோர் யாவர்?

வைகறை வெளிச்சத் தின்முன்
வயல்களில் விளைச்சல் காண
வைகலும் உழன்றோர் வாழ்வு
வளமுற ஆன தென்ன?
பைகளை நிரப்பும் ஊழல்
படைபெருக் கெவரால்? ஆளும்
கைகளைத் தூய்மை யாக்கக்
கங்கையும் போதா தப்பா!

நம்மை நாம் ஆண்டு கொள்ளும்
நடைமுறை உள்ளந் தோறும்
செம்மையாய் அடையும் நாளே
திருவிழாக் காணும் நாளாம்
வெம்பினாய் வெறுண்டாய் கண்ட
வீணநாய்க் கடிமையானாய்
தம்பியோ அண்ணன் தானோ
தகவிலார் பொன்விழா தான்.

மாண்பொடு மானம் மக்கள்
மனமகிழ் ஆட்சி யில்லா
வீண்பொழுது அரட்டை ஈனம்
விண்வழி காமக் கூத்து
காண்பதும் கள்ளர் கூட்டில்
களிப்பதும் மேன்மை யாமோ?
ஆண்டுகள் ஐம்பதானால்
அடடா, ஓ பொன்விழாவா? (10.8.97)

மக்கள் ஒன்றியம்

காரண காரியக் கருத்தொற் றுமையால்
சேரணி மக்கள் சிறுமைகள் தொலைய
ஓரணி யாகும் உள்ளப் பயிற்சியால்
சீரணி யாக்கிச் செழுமை சேர்க்க.

உறுதுணை ஒழுக்கம் உணரா அடிமைகள்
சிறுசிறு குழுக்கள் சிற்றூர் பேரூர்
வறுமை யின்னல் சிறுமை, தேக்கம்
குறுமதிக் குழுவினர் கொழிக்கும் கொள்ளை

நுகர்வோர் உரிமை நுணுக்கம் பயிலா
நகர்நாடறிவு நலங்கள் சரிவு
பகையோ நகையுள் பதுங்கித் தனித்தனி
இகழ்வோர் பெருக்கம் எனும்வெளிப் பாடே

தெருக்கள் ஊர்கள் சேர்ந்த நக்ரம்
நெருக்கம் உறவு நேர்மை யன்பு
பெருக்க ஏதும் பேசுகின் றாரா?
இருக்கும் தொல்லைகள் இதனால்தானே

யாரும் பிறர்நல ஆர்வம் கொண்டால்
ஊரும் நாடும் உலகமும் ஒன்றாய்ச்
சேரும் இணைப்பு செயல்பட யியலும்
தீரும் சிறுமைகள் திரளும் வளமைகள்

மக்கள் ஒன்றியம் மகிழ்ச்சிக் கூட்டு
தக்கவை நிகழ, தக்கோர் தலைமை
பக்க பலமாய்ப் பற்றும் அன்பும்
எக்குறையும்தீர் இணையிலா மருந்தென.

ஒன்றியமாகி வென்றிடும் நோக்கம்
ஒன்றே மாந்தர் உயர்ந்திடத் தகும் வழி
நன்றே இதனை நடத்தத் தவறுவோர்
என்றும் வருந்தி இழிவர் இரந்தே.

வீண்

கல்வியே கண்கள் வாழ்வில்
    கரையிலாச் செல்வம்; மற்ற
செல்வங்களெல்லாம் போலி
    சிறப்புபோல் ஈனம் சேர்க்கும்
நல்லவன் என்றோர் மேன்மை
    நாட்டநற் கல்வி யற்றோன்
வல்லமை கோடி பெற்றும்
    வறியவன் வளமை வீணே.

விண்ணறிவியல்

அறிவியலைத் தூற்றும் அறிவிலார் அல்லேம்
குறியிலாக் கொள்கை கொடுமை – வறியநிலை
விட்டொழியா நாட்டுக்கு வெட்டவெளி ஆய்வென்ன
கொட்டிவிடும் நன்மை கொணர்ந்து?

வானாய்வு செய்ய வழியிருக்கு தென்பீரேல்
ஏனாம் வறியநிலை என்றென்றும்? – தானாய்ப்
பறக்குமோ விண்கலங்கள் பஞ்சம் இருக்கச்
சிறக்குமோ யிந்தச் செயல்?

பாடுபடுகிறாள்

தன்வரு மானம் தான்மறைத் ததனை
எவ்விதம் எவர்க்குத் தந்தாள் விவரம்
தெரிவிக் காமல் தீயவள் மறுத்துப்
பல்லாண் டாகப் பாதகம் பகைமை
பயல்களுக் கூட்டிப் பகடைக்காயாய்ப்
பசிக்குப் பயந்து பல்லிளித்து ஈனப்
பகட்டுக் குப்பணம் படைத்தாட் கடிமையாய்
உள்ளம் மகிழ உட்பகை வளர்க்க
அன்னை என்னும் அகந்தை மகிழ
ஐந்தும் ஓரணி அப்பன் தனியாள்
தந்தையை மதியாத் தான்தோன் றித்தனம்
ஒழுங்கு கெட்ட உலுத்தராகி
ஏளனப் போக்கினை எதிர்மறை உணர்வைப்
பாதுகாத்துப் பக்குவமாக
ஓங்கிவளர ஒவ்வொரு நாளும்
பாடு படுகிறாள் பத்தினி
கேடும் ஆணவக் கீழ்மையும் மிக்கே. (14.8.97)

நேரிசை ஆசிரியப்பா

வேடம் மாறும் வீம்பு மிஞ்சும்
உறவு பொய், மனம் ஒருநிலைப்
படாது தாக்கும் பாழமனம் படைத்தே.

நேரிசை ஆசிரியம்

நாளும் தொல்லை நன்மை யில்லை
கடமை செய்யாள் கண்ணியம் அறியாள்
அடிப்படை முறைமை யற்றாள்
குடும்பம் யாதெனில் குரைப்பாள் கூவியே.

இந்தியத்தை ...

கூட்டி விடும் தொழிலுக்குக் கொள்ளை லாபம்
கூச்சமிலா நாய்களுக்குக் கொண்டாட்டங்கள்
ஆட்சிகளும் உதவினவே அசிங்கம் மக்கள்
அகமதிப்பை மதியாத ஆணவத்தின்
காட்சியிவை வரலாற்றுக் கயமை; சான்றோர்
கண்டித்தும் பெண்ணியத்தார் கடிந்து எதிர்த்தும்
போட்டிநடந் தேறியதாம் புலையர் தங்கள்
பொருளீட்டம் வெற்றியெனப் பொங்கு தற்கே
உன்மனைவி மேடையிலே உடம்பு காட்ட
ஒப்புவையோ ஊனமன உலுத்தனே உன்
அன்னை தங்கை அழகுலகில் அனைவருக்கும்
அப்பட்ட மாய்க்காட்டி அப்பட்டத்தைப்
பொன்மகுடம் சூட்டி பெரும்பொருள்திரட்ட
புலைவணிக விளம்பரத்தால் புகழ்தேடிக் கொள்
என்னவகை யேனும்தன் மானமின்றி
இழிந்துகிட இந்தியத்தை இழித்திடாதே.

நேரிசை யாசிரியப்பா

ஆடு பாடு கூடு குலவு
வீடு மக்கள் வெட்கம் நாணம்
வீழ்ச்சி யில்லா மானத்தோடு
காதல் காதல் காதல் என்றே
காலை மாலை கத்தும் கயமை
வணிகர் விற்பனை வளர்ச்சி யுன்றன்
கால விரயம் கண்ணியக் குறைவு
வலிமை துள்ளும் வஞ்சியர் இளமை
செழுமை தூண்டும் தீயனல் இயற்கைப்
பாலுணர் பொழுது பாயும் விந்தை
உள்ளுணர் மகிழ்ச்சியும் ஒழுக்கம் மீறாப்
பண்பின் பாடு பார்வையோடு
பிறரறி இழுக்கிலாப் பெருமையடக்கம்
குமரர் கற்றுக்குடும்ப மானம்
காப்பது கடமை; காமக் கயமை
இம்மியும் கலவா ஏற்றம் மென்னகை
எண்ண ஒற்றுமை இயல்புகள் பிடிப்பு
சேர்ந்து வாழத் தேவை உண்மை
அன்பு கூட்டுறவு அறிவு நுட்பம்
இவையெலாம் விரிவாய்க் கற்றுத் தேறுமுன்
மேனிகாட்டும் மேல்கீழ் ஆட்டும்
பணஞ்செய் பரத்தர் படத்துறை பாட்டுகள்
கழிசடைக் காட்சிகள் காணும் பிஞ்சுகள்
தூய காதல் நுட்பம்
கற்கக் கற்பியல் கடைச்சரக் கலவே. (15.8.97)

ஏசும்

சிக்கல் யாவையும் தீர்த்துச் செழிப்பால்
மக்கள் வாழ்வு மகிழ்ச்சியாக
அக்கரை வேண்டும் அனைவர் பொறுப்பு
மக்களே அரசு மக்க ளாட்சி
தக்க பயன்தரத் தகுதி படைத்த
மக்களால் ஆகும் மாற்றுவேறில்லை
வயிற்றுப் பசியும் வறுமையும் தொலைய
பயிற்சி யாற்றல் படைத்தோ ராதல்
ஒவ்வொரு மனிதன் பெற்றால் பெருமை
மிக்க நாட்டை மேன்மை உயர்வை
இக்கணம் தொடங்கி யியக்க லாகும்
பின்வரும் தலைமுறை பெருமகிழ் வோடு
நன்மைகள் துய்க்கும் நாடிது வாகும்
நொடிதாழ்த் திடினும் ''நொள்ளை மாந்தர்
விடிவறி யாதார் வீண''ரென் றேசுமே. (6.9.97) ●

எதில் கூட்டுறவு?

கூட்டுறவு மதுபானக் கடையாம் என்ன
கூத்திங்கே காண்கின்றீர் கூடிச் செய்ய
நாட்டுறவா நலவாழ்வா நஞ்சுண்பிப்பார்
நாட்டம்பார் கூட்டுறவில்; நல்லோர் உள்ளம்
கூட்டிடுயதா கூட்டுறவை? கொள்ளைபோகும்
குடும்ப நலம் காத்திடுமா கொள்கையேற்றுத்
தீட்டிடுமா திட்டங்கள் தேர்ந்தெடுத்த
சிறந்த பொருள் குறைந்த விலை சிறப்புண்டு என்றே?
(18.10.97) ●

ஆட்சி கொடுத்தோர்க்கு ...

நாண வெட்க மில்லாத
　　நாய்கள் கூட்டம் நாடாளும்
காண மெச்சக் கட்சிகளாம்
　　கடுகள வுண்டோ தன்மானம்
கோணல் மாந்தர் குருட்டாட்டம்
　　கொலைஞர் திருடர் கொண்டாட்டம்
ஆணவ ஊழல் அதிகாரம்
　　அடடா விடுதலை அலங்கோலம்
அறமுறை அன்பு பெருந்தன்மை
　　அறவே விலக்கும் இழிகுலத்தர்
உறவுகள் ஒற்றுமை உயர்ந்தோங்கும்
　　உலகம் முற்றும் ஈனர்களின்
திறமை கூட்டு சதித்திட்டம்
　　தீங்குகள் செழித்துச் சீரழிக்கும்
சிறகுகள் உடைந்த பறவைகளாய்த்
　　திகைக்கும் நல்லோர் திறம்பெறுக
தேவைகள் யாவும் நிறைவேற
　　சிறந்தன வெல்லாம் நாமடைய
ஆவன செய்ய அரசாங்கம்
　　அமைப்போம் ஆட்சி யதிகாரம்
கேவலஈனர் பிடியினிலே
　　கிடக்குங்கேட்டைப் பிறகறிவோம்
கோவணம ஆட்சி கொடுத்தோர்க்கு
　　கோட்டை வாழ்வு கொடியோர்க்கே
மீண்டும் மீண்டும் இப்படியா?
　　மெய்யாய்ப் பொதுநலன் விளையாதா?

நீண்டு தொடரும் நிலைகேடர்
        நீக்கப் படுமுறை நீரறியீர்?
ஈண்டு பயிற்சி இணைப்பாக்கம்
        எண்ணத் தூய்மை யறநெறிகள்
வேண்டும் உள்ளம் ஒவ்வொன்றும்
        விரைந்து செயல்பட விடியாதோ?
வாய்மை தூய்மை சான்றாண்மை
        வளர்க்க பெருக்க வகையறிந்து
சேய்மை விலகல் சிறைத் தனிமை
        சிதைத்துத் திரண்டு சேர்ந்திடுவீர்
பேய்மை கீழ்மை பெருங்கேடர்
        பெருக்குங் கயமைப் பிணிநாட்டைத்
தாய்மைப் பண்பால் தகுதரத்தால்
        தலைமைச் சிறப்பால் சரிசெய்வீர். (22.8.97)

உயர்வும் தாழ்வும்

பகலிரா பாரார் ஊக்கம்
        படிப்பலால் பார்வை யெண்ணம்
அகலவோ வேறெங்கோ சென்று
        அலையவோ அணுவும் ஒப்பார்
இகழிலா உண்மைத் தோன்றல்
        என்றென்றும் அடங்கிப் பெற்றோர்
மகனென மகிழக் கல்வி
        மதிப்பினில் முதன்மை யுற்றார்
சிந்தனை நோக்கம் செய்கை
        சிதறிடா ஒருபோக் காக
முந்துக! முயல்க! வென்று
        முடிக்கவுன் மூளை தீட்டி

தந்தைதன் னறிவு நுட்பத்
 தரமுறை பகுத்துரைத்தான்
நிந்தைசெய் உடன்பிறந்தோர்
 நீகெடத் தாயும் சேர்ந்தாள்
கல்வியின் எதிர்காலத்தைக்
 கணித்திடும் காலத்தில் நீ
நல்லவர் முயற்சி யூக்கம்
 நாணமும் ஒழுக்கமும் சேர்
வல்லவர் வாய்மை மானம்
 வளர்மன நலம் செழிக்கச்
செல்வழி நட்பு மட்டும்
 தேர்ந்துகொள் திறமை வேண்டும்
தன்வழி சரியென் றாடும்
 தறுதலைத் தன்ம்உன் வீழ்ச்சி
உன்வழி உயர்வே யாக
 ஒப்புவர் மறுப்ப தேது?
பொன்மொழி தந்தை யுள்ளம்
 புரிந்துகொள் ளாது நீயே
உன்னிழி யுலகம் தேடி
 உருக்குலைந் தலைகி றாயே.

அவன் ஒரு .....

மதிகெட்டு கதிகெட்டு மாண்பேது மில்லாமல்
 மண் மீது வாழ்கின்றவன் – ஒரு
விதியென்று பழிகொண்டு வேதாந்த சாத்திர
 விலங்கினால் சூழ்கின்றவன்
மிதிபட்டு வழிகெட்டு மீளாத தொல்லையால்
 மென்மேலும் வீழ்கின்றவன் – நலம்
எதிரிட்டு நெறிகெட்ட இன்னாத செய்துலகில்
 எந்நாளும் தாழ்கின்றவன்.

பிள்ளை

என்தேவைக் குதவுபவன் என்றன்பிள்ளை
எவனுக்கோ பயன்படுவான் இவனாபிள்ளை?
தன்போக்கு தந்தைக்குத் தலையிறக்கம்
சற்றேனும் உணராது தாயின் ஏவல்
முன்னேறத் தனக்குத்தான் முட்டுக்கட்டை
முட்டாள்கள் கூட்டத்தில் முன்னே நிற்பான்
நன்னோக்கு கல்வியுயர் நலங்காணாது
நரியாகித் திரிந்திடுவான் நாட்கள் வீணே. (17.10.97)

தனிப்பறவை

எனக்குறவாய் எவரிருந்தார் இவளிழுக்கை
இடுப்பொடிக்க எடுத்துரைக்க ஈனம் தீர்க்க?
தனக்கிதுதான் சாதகமாய்த் தலைகனத்தாள்;
தவறுகளுக் கஞ்சாமல் தன்போக் கானாள்;
சினக்கிறுக்கும் சீறுவதும் சிறுவர் காண;
சிறிதளவும் உளவியலைத் தெரிந்து கொள்ள
முனைப்பில்லா முரட்டுள்ளம்; முறிவு நாட்டம்
முழுமையிலா வுறவெதற்கு முற்றும் வீணே.
உறவறுத்துக் கொண்டோடும் உடல்நோய் அந்த
உண்மைமறுக் கின்றயிழி யுள்ளக்கேடு
பிறரிடத்துப் பேச்சருமை பின்னோடிப் போய்
பிழைநெஞ்சம் திறந்தேதும் பேசிடாது
நிறைகுறைகள் நினைவருமை நெருங்கி வந்து
நேரங்கண் டுறவாடும் நிலையேன் இல்லை?
மறைமுகமாய் மணமுறிவு மனத்தள் எண்ணம்
மாகடைமை பிரிவினையை வளர்க்கும் போக்கே.
(17.10.97)

உன்றலைக் கடனே

அரசியல் இழுக்குகள் அறியா நிலைமை
நரகலைச் சந்தன மென்று நம்புதல்
நிரந்தரப் பகைமையும் நிலைத்த நட்பும்
அரசியல் உலகில் அமையா வென்பர்
கரவியல் கள்ளர், காரியப் பிதற்றல்;
கருத்து மாற்றம் கனிவு நட்பெலாம்
இருக்கை பிடிக்கும் எத்து ஏமாற்று
பங்கீடு ஒப்புதல் பாசம் ஒற்றுமை;
அங்கு மோதலா அக்கணம் பிளவு
நாணமில் நாய்கள் நடிப்பர சியலைக்
காணக் கூசும் காலம் ஏசும்
கண்ணியக் கல்வி கடமைச் சான்றோர்
எண்ணித் தேறும் இயக்கம் கண்டு
மக்கள் அறிவினால் மமதை மாய்ப்பரேல்
பொய்யர் அரசியல் பூண்டோடு ஒழியுமே
மெய்யர் வறுமை மேன்மை யுற்றுச்
செய்த தொண்டுகள் சிறந்த அரசியல்
போற்றும் தெளிவு காற்றில் பறந்தது
நாய்கள் மேடையில் நாவலம் காட்டவே
மக்களாட்சியில் மக்கள் கடமை
தக்கவா றறியும் தகுதி யடிப்படை
எள்மூக் களவும் இல்லாக் கீழ்மையால்
மந்தை யரசியல் வன்முறைத் தலைவர்
''பகைநட் பாம்காலம் வருங்கால் முகநட்டு
அகநட் பொரீஇ விட''லென்னும் மறைநெறி
பாமரர் அறியார்; பழிநிலை யரசியல்
கீழ்மகர் அறிந்தே கேடுகள் பெருக்கினர்
எத்தனைக் காலம் இப்படி
தக்க மாறுல் தலைக்கடன் உனதே.

(21.10.97)

கடமை

பண்பா டழிக்கும் பாவிகளே
    பதவியடையப் பழியேற்று
மண்மே டாகும் மக்களினம்
    மாற்றத் தருவோர் மனத்தூயர்
உண்ணா உறங்கா உழைப்புறுதி
    உண்மை தூய்மை உடையோரே
பண்பாளர் சேர்படையாகப்
    பரிந்து காத்தல் கடனாமே
உனக்கு நீயே தலைவனடா
    உயர்குண மொன்றே தகுதியடா
மனத்தே ஒழுக்க மலையாக
    மற்றவர் நலனே குறிக்கோளாய்
நினைக்கும் சிறப்பு நெடும்புகழை
    நிலைக்கச் செய்து நாடுயர்த்தும்
இனத்துத் தோன்றல் நீயாக
    இன்றே எழுவாய் உயிர்பெற்றே.

நேர்மையாய் ....

ஊருக்கு நன்மை செய்யா
    ஊதாரி விளம்ப ரத்தார்
பேருக்குப் பெருமை சேர்க்கப்
    பிடிவாத ஊர்வலங்கள்
யாருக்குச் சோறும் நீரும்
    இவரளித் தன்பு செய்தார்?
நேருக்கு நேராய்க் கேட்டு
    நேர்மையாய் விடைசொல் வீரே!

கல்கத்தா கடிதம்

கல்கத்தாவின் கடித உறையை
ஏன் உடன் தராமல் இழுத்தடித் தான்அவன்
முகவரி கதவெண் முற்றும் சரியாய்
உறுதியாய்த் தெரிந்தும் ஊழல் கயவன்
உள்ள உளைச்சல் உணர்வுத் துன்பம்
உறுத்தித் தொல்லை ஊட்டுகின்றானே
அஞ்சல் துறையா ஆணவத் துறையா?
பதிப்பகம் அறியான் பகுத்தறிவில்லான்
''அச்சகம் உளதா?'' அற்பக் கேள்வி
பணிமுறை யறியான் பண்பிலி அலுவலன்
பதிவஞ்சல் தாமதப் படுத்தும் இழிஞன்
காலதாமதம் கையூட்டு ஆவல்
கீழ்த்தரப் பணியாள் கெடுமதிக் கிறுக்கன்
அஞ்சல் பணியாம் அரசுப் பணியில்
கொஞ்சமும் பொறுத்த மில்லாக் கொடியன்
எங்ஙனம் நாமிவர் இழிகுணம் பொறுப்போம்?
பொய்யா மொழிப்பதிப் பகத்திற்கு அஞ்சல்
இதுவரை வழங்கினார் எடுத்துச் சொன்னோம்
அஞ்சல் முத்திரை காட்டினோம் முகவரி
அதுவே உள்ளதை அறிந்தும் மடையன்
இப்போது தருவது இயலா தென்கிறான்
மக்கள் நலமொரு மயிரள வில்லா
மொக்கைகள் அஞ்சல் முடக்கும் இவர்க்கு
வெட்கமுண்டோ வீணே வரிப்பணம்
செய்தித் தொடர்பின் சிறப்பை அழித்துச்
சீர்குலைப் பதனால் சிக்கல் உண்டாக்கும்
ஈன மனத்தின் இறுமாப் பல்லவோ?
பதிவு வந்து பதினைந்து நாளாய்

முடக்கி வைக்கும் மூர்க்கத் தனத்தவர்
அலுவல் போக்குகள் அசிங்கம் வேதனை
அவலம் கூட்டும் அரசுச் சம்பளம்
உரிமைக் கடிதம் உறுதிக் கடிதம்
எப்படித் தேவையோ அப்படி யளித்தும்
தாம்பரம் அனகை சலிப்புற அலைத்திடும்
மாற்றும் பேச்சு மட்டமாய் நடத்தை
நம்பிக்கை சார்ந்த நாணயப் பொறுப்பை
வம்பர்க ளிடமா வழங்கி மாய்வது
முக்கியமான கடிதங் களையிவன்
மூர்க்கத் தனமாய் முடித்துப் பகைமை
வளரத் தொடர்வான் வாழ்க்கையே பாழ்படும்
முழு நம்பிக்கை முதன்மை வகிக்கப்
பழுதிலா உறவுப் பணிவுசேர் தொண்டுப்
பணியை முரட்டுப் பாவியரிடமா
கொடுத்து மக்களைக் கொடுமைப்படுத்துவீர்?
எரிச்சல் புழுக்கம் இன்னாத்தாமதம்
இழப்பு வேதனை இன்னல் விளைக்கும்
ஊன மனத்தரை ஊருக்கு உதவும்
பணியிலமர்த்திப் பாதகம் செய்வதா?
ஈனரை எப்படி இந்தப் பணியில்
அமர்த்து கின்றாய் அரசே அறிவால்
ஆய்ந்து செய்யா அவலம் இதுகாண்
கொடுமை மாற்றும் கொள்கை இல்லையா
இந்திய நாடே இழிநிலை என்னே?
வெட்கித்தலைகுனி வேதனை அகற்றப்
பண்புடை யோரைப் பணியமர்த் தாயோ?
மக்கள் மகிழ மாறுதல் உறவே! (20.5.98)

பொன் விழா?

வளங்களைத் திருடி வறுமையைப் புகுத்தும்
        வணிக ஈனர் மருட்டும் கொடுமை
களங்கமும் கயமையும் கட்சிகளாகிக்
        கையூட்டு உறவுகள் களிக்கும் காட்சி
உளங்களின் தூய்மை ஒழிக்கும் திரைத்துறை
        ஓநாய்களுக்கே உயர்நிலை யாட்சி
இளங்கலை முதுகலை இயற்பொறி கணிப்பொறி
        எதுவும் பொருள்வெறி எங்கே அறநெறி?
முக்கால் வறுமை முழுமைப் பட்டினி
        முடங்கிப் பணிந்து மூச்சுத் திணறி
எக்காலத்தும் இளைத்துக் களைத்தோர்
        ஏக்கப் பெருந்துயர்க்கு எதற்குப் பொன் விழா?
சிக்காச் செல்வத் திருடர் கூடிச்
        செய்யும் பொன்விழா சிறப்பா? தாழ்வா?
இக்கால மக்கள் இழிநிலை ஒழுக்கம்
        எவரும் திருத்தார் ஈனம் கொழுக்கும்
கள்ளம் நீக்கிக் கனிந்த அன்பால்
        கருதும் ஒற்றுமை காணார் முறைமை
உள்ளம் காக்கும் உறுதி எண்ணார்
        உயர்தல் எங்ஙனம்? உதிரிகள் ஆனார்
வெள்ளக் கயமை வெற்றிப் பொன்விழா
        விடுதலை என்னும் பெயரால் வேண்டுமோ?
தெள்ளத் தெளிவாய்த் தீர்மானிக்கும்
        திறனும் அறிவும் சேர்ந்ததெங்கே?
விடுதலைப் பொன்விழா வீணர்திருவிழா
        வெடிகளும் கொடிகளும் வேடிக்கைப் பேச்சும்

கெடுதலை வளர்க்கும் கேடர் மகிழ்ச்சி
கீழ்நிலை வறுமை கிடக்கும் நிலைத்து
படுகொலைப் பாதகப் பாவியர் அரசுகள்
பணப்பெட் டிகளின் பரிமாற்றங்கள்
நடுநிலை கொன்று நடுப்பகற் கொள்ளை
நயவஞ் சகத்தார் நடத்தும் மின்விழா
பொன்விழா வல்ல மின்விழா புரிந்து கொள்
பொறுக்கிகள் கையில் பொருளா தாரம்
அன்றைய சோற்றை அறியா வறியவன்
அணுகுண் டாலே அடைவ தென்ன?
தின்று கொழுக்கும் தீவிரத் திருடர்
செலவுக் கணக்குத் தேவை திட்டங்கள்
என்று வறுமை இல்லையோ அன்றுதான்
எமக்கு விழாவென எடுத்துரை இரைந்தே. (11.6.98)

அறிவாளர் தோன்றுவாரோ?

மனமென்னும் அழுக்குடையை மாட்டிக் கொண்டு
மாச்சரியப் பித்தான்கள் பொருத்தி விட்டுத்
தனதென்னும் இருட்போர்வைக் குள்ளொளிந்துத்
தமிழென்பார்க் கென்பெருமை யுண்டு சொல்வீர்
இனவெறியாம் படுகுழியை இன்னுந் தோண்டி
இருங்காடாம் மடமைதனைப் பெருகச் செய்வார்
அனற்பிழம்பாய் அறிவாளர் தோன்று வாரோ?
அருந்தமிழால் அனைத்துலகும் ஆளு வாரோ?

இன்ப வாழ்வை ...

மாத்திரை விழுங்கி மருந்துகள் குடிப்பதும்
உடலை அறுப்பதும் ஊசி குத்துவதும்
பெருமையாய்க் கருதும் பேதையர் அறிக
வருபிணி யாவும் வயிற்றில் தொடக்கம்
நாச்சுவை அடிமை நலக்குறை யறியான்
கண்டதைத் தின்பது காலனுக்கு அழைப்பாம்
உடலின் நன்னலம் உயிர்வாழ் முறைமை
கெடலின் மிகுந்த கேடெதும் இல்லை
உடற்கட் டுறுதி உணவின் தேர்வால்
இடர்ப்பாடில்லா இன்ப வாழ்வை
அமைத்துக் கொள்ள ஆன்றோர் முறைப்படி
பட்டறி வுணர்த்திய பலவகை நுட்பம்
கண்டறி வுறுத்திய கடமைத் தெளிவினர்
பாடம் செய்யுள் பகுத்தறி பயன்பெறு
பச்சைக் காய்கறி பலவகைக் கீரைகள்
பழங்கள் கொட்டைகள் பட்டுத் தளிர்கள்
சிறுதானியங்கள் சிறந்த உணவுகள்
மருந்திலா வாழ்வை மக்களுக்களிக்கும்
உலகின் உயர்ந்த ஒப்பிலா மூலிகை
மருத்துவம் கண்ட மகத்துவச் சித்தர்
தீரா நோய்களைத் தீர்த்த செய்ம்முறை
அறிவியல் நுட்ப ஆய்வெனச் சிறந்தவை
மிகுமதி யாற்றல் மேலவை விந்தைகள்
தீய விளைவுகள் சிறிதும் அற்றவை
காயம் நிலைபெறக் கண்டுபிடிப்புகள்
இளமைச் செழிப்பின் இடையறாக் கொழிப்பு
வளமை உறுதி வாய்த்த உடம்பு

சாகா உயிர்நிலை தடையற வழங்கும்
புதுமை உண்மை புரிந்து கொள்வீர்
இயற்கை மருந்துகள் ஈடிலாத் தரத்தவை
செயற்கை மற்றவை தீங்குகள் பலவகை
ஆங்கில மருந்துகள் ஆய்வோர் நடுநிலை
உண்மை உரைப்பர் ஊறுகள் நூறுகள்
இன்றைய மருத்துவம் இம்மெனத் தீர்க்கும்
நோய்கள் வடிவம் சேய்கள் ஈனும்
பேய்கள் போலவை பெறுங்கேடுறுத்தும்
புதுப்புது நோய்களாய்ப் புகுந்து தாக்கும்
ஆயிரம் லட்சம் அழியும் அவற்றை
அப்புறப்படுத்த அரிய மூலிகை
மருத்துவம் நாடி மகிழ்வீர் மாந்தரே.

பாரு பாரு நல்லாப் பாரு

கூலி கேட்டுக் கூவுறாங்க வேலைக்காரங்க
குண்டாந் தடியால் தாக்குறாங்க காவக்காரங்க
வேலிபோயிப் பயிரை மேயும் விந்தையைப் பாரு
விலையிறங்கா உணவுப் பொருள் சந்தையைப் பாரு.
நாலி ரண்டை மறந்துட்டாங்க நாட்டுக் காரங்க
நாசவேலை நல்லதுண்ணு நடத்துறாங்களே
போலியான வாழ்க்கையின்னு புரிஞ்சுகிட்டீங்க
பொழுது விடியுமுன்னா நீங்க பொறுத்திருக் கீங்க?

மடையர் உலகில் மலர்வதில்லை

தந்நிலை யறியாத் தவறுசெய் மாந்தர்
இந்திய இழிநிலை இடருறும் தமிழகம்
ஒழுக்கத் தரத்தின் உயர்வுகல் லாத
இழுக்கம் தனித்தனி ஈனப் பெருக்கம்
அவனும் இவனும் அரைகுறை தற்குறி
எழுத்தறி வில்லா இருளன் மருளன்
யாவரும் மன்னர் எப்படி? செப்படி!
கடையனை யாளும் காட்டுமிராண்டி
படைநடை தமிழால் பாதுகாப்புப் பெறும்
ஆளுந் தகுதி யறிவால் பெறாத
ஆளும் ஆள அரசியல் ஆவணம்
தற்குறிகளுக்குத் தளுக்குத் தலைமை
தவறுகளுக்கும் தட்டும் கைகள்
வேதனை நீக்கப் போதனை போதை
சாதனையாகும் சாய்க்கடை யரசுகள்
வாய்த்த செல்வ வளங்கள் யாவும்
சாய்த்துக் கள்ளச் சந்தையொப்பந்தம்
ஏய்த்துக் கொழுக்கும்; இருப்பவை யனைத்தும்
தேய்த்தழிப்பதுவே திறமையென்னும்
அறுகோடி மன்னர் அணுவும் அசையார்
ஆவதும் அழிவதும் அவர்கண்டாரா?
கொன்றவன் தின்றான் கொழுத்தவன் நின்றான்
இன்றெவன் ஆட்சி இதுவெனக் கண்டான்?
அறிஞர் ஒழிய அரக்கர் வெடித்தனர்
கலைஞர் போலக் கயவர் துடித்தனர்
வெறிஞர் கூடி வெற்றியென்றனர்
நயமும் நலமும் நகையும் அருளும்
நமக்குத வாதென நயவஞ்சகம் செய்

கயவர் ஆட்சியே காலந் தோறும்
உயர்பண் பாளர்க்குண்டோ ஆட்சி
திரையுரை யாடல் தீயர் விளம்பரம்
விரையும் மக்களை வீழ்த்தும் அழிக்கும்
பாட்டாளி வறியவன் பாமரன் உழவன்
கூட்டாளி என்று குழைந்தவனெல்லாம்
வாட்டி வதைக்கும் வரிவிலை யேற்றம்
கூட்டி யரசால் கொள்ளை யடிக்கிறான்
நலந்தரு மாநில நல்லர சென்ன?
விலையால் நலன்களை வெட்டுதல் போலும்?
தலைமேல் பாரம் தாங்கொணா வண்ணம்
விலையே கொலைவாள்வீச்சென வழங்கலோ?
மக்களாட்சி மதியுடை யோர்க்காம்
மடையர் உலகில் மலர்வதில்லையே.

என்று தீரும்?

ஆயிரக் கணக்கில் மதுக்கடைகள்
அரசின் வருமானத்திற்கு
நாயினும் கேடாய் நலிந்தோரால்
நாட்டின் பொருளைக் கூட்டுவதா?
நோயிது நீக்கும் முயற்சியிலே
நோக்கமில்லா அரசுகளால்
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
அவலம் ஒழித்தல் ஆகாதே.

ஏதும் செய்திலீர்

சோற்றைப் பறித்துக் குடும்பங்கெடுத்துத் தொல்லை
கொடுக்கின்றான்
ஊற்றுக் கண்ணாய் ஒழுக்கங்கெடுக்கும் உலகம் படைக்கின்றான்
நேற்றுச் சொன்னான் நேர்மை உழைப்பு நிலமேல் உயர்வென்று
மாற்றிக் கொண்டான் மக்கள் திருடன் மன்னன் தானென்றே
ஆயிரம் ஆயிரம் அவலக் கண்ணீர் ஆலைதொழிற்சாலை
நாயினும் கீழோர் நாட்டாண்மையினால் நலிவுறுத்தப்படலால்
சீ! யிவர் ஆட்சிகள் சிறப்போ மக்கள் சீரழிகின்றனரே
வாயினில் வலிமை வாய்மைக் கொலைஞர் வறுமை புகுத்தினரே
மக்களை வறுத்தும் மடையரை நம்பி வாக்களித் திழிகின்றீர்
தக்கவர் சான்றோர் தமிழ்ப்பண்பாளர் தலைமை வளர்ப்பீரே
வெட்கமும் மான வீரமும் தூய்மை வெளிச்சமும் அறியாமல்
சிக்கலில் ஆயிரம் சிதறலில் அச்சச் சேற்றினில் அமிழ்ந்தீரே
கல்வியின் பயனால் கருத்தின் ஒளியால் காவியத் திறமையினால்
செல்வமும் வளமும் சேர்தமி ழகத்தைச் செழித்திடச் செய்யாமல்
கொல்ல வரும்பகைக் கொடியரை வளர்த்துக் கும்பிட்டழுகின்றீர்
இல்லை பயனிவர் எத்தர் அறிந்தீர் ஏதும் செய்திலிரே.

27.6.98 ●

குடிக்க மாட்டான்

குருதியில் நஞ்சைக் கூட்டிக்
கொலை செயும் மதுவை விற்பர்
குறுமதிக் கொடியர் குற்றக்
கோழையர் கூச்ச மற்றார்
இறுகிய ஈர மற்ற
ஈனமாம் இதயத் தீயர்
உறுதியும் கட்டுப் பாடும்
உள்ளவன் குடிக்க மாட்டான்.

நோய்கள்

மக்களினத்தின் மாபெரும் நோய்கள்
கொள்ளை நோய்கள் கொடிய நஞ்சு
வறுமைக் கொடுமையை வளர்த்துக் குடும்ப
வளர்ச்சி யழித்துவாட்டு நோய்கள்
உழைத்(து) உழைத்து ஓடாய் எலும்புந் தோலுமாய்
கோடி கோடி குடும்பம் குலையவும்
நடுத்தர மக்கள் நலிந்து மறுகவும்
சேமிப்பின்றிச் சிதையவும் புதையவும்
சுரண்டல் கொள்ளை சூழ்ச்சி வடிவம்
கொண்ட நோய்கள் கொலைஞர் குழுக்கள்
கட்சியாம் அரசாம் கழிசடை இவை கொடு
நோய்கள் மக்கள் நொந்திட நுழைந்தவை
ஒழி ஒழி இவற்றை ஒன்று கூடி
உன்னறி வாலும் உயர்அறி சான்றோர்
மெய்த்துணை யாலும் மீட்சி காண்க
ஆட்சிகள் மாற்றி, தலைமைகள் மாற்றி
அமைத்தும் உன்றன் அவதி மாறா
ஈன நோய்கள் எல்லா விடத்தும்
ஒளிந்து தாக்கும் ஒற்றுமைக் கயமை
தற்கா லிகமாய்த் தவிர்த்திடும் ஆங்கில
மருத்துவம் நோய்கள் மறைந்து சீறும்
கள்ளக் கயவர் கட்சி யாட்சிகள்
அறவே ஒழிய அறமுறை யரசாய்
அமைத்தல் அறிவால் ஆகும் செயலது
மூலிகை மருத்துவம் மூலம் அறிந்(து) அதைத்
தாக்கி அழித்தல் சான்(று) அதுபோல
ஆழமாய்ச் சென்று அடி வேரை அழித்து
நீக்குஉன் இனத்துடன் நிறைவாழ் வுறவே.

(9.8.98) •

தீதறு காதல்

காதலைப் பிறர்க்குச் சொல்லிக்
கபட நாடகத்தில் தேறும்
வேதனைப் பிறவி கட்கு
விளக்குவோம் காதல் வீம்பு
பாதக விளைவை யூட்டும்
பார்வையில் குடும்பம் சாய்க்கும்
தீதது காதல் அல்ல
தெளிவிலார் சபல வேட்கை
நங்கையர் அழகுக்கோலம்
நரம்புநீர் குருதி தூண்டும்
அங்கதன் அழும்பு காணான்
ஆவலால் காதல் என்னும்;
சிங்கநேர் ஆண்களுக்குத்
தீமையின் வடிவம் காதல்
இங்கதன் நுணுக்கக் கால்கள்
எவர்விரித் துரைத்தார் எங்கே?
பெற்றவர் நலங்கெடுக்கும்
பேதையர் காதல் போதை
உற்றவர் உறவு போற்றா
ஒழுக்கமில் லாதார் காதல்
குற்றமுங்குறையும் மேனிக்
கொழுப்புமே ஈர்ப்பு பின்னர்
முற்றிலும் வெறுப்பு மோதல்
முடிவிலே பிரிவு தூற்றல்
காதலால் வாழ்க்கையில்லை
கடிமனம் விலங்குப் போக்கு
வேதனை பிரிவு துன்பம்
வேட்கையின் சேர்க்கைக்குப்பின்

ஆதலால் காதல்போலி
அவசரக் காமத் தீனி
பாதகப் பெண்டிர் பார்வை
பலவிலை பகடி பாழ்மை
இளமையில் அடக்கம் எந்த
இழுக்கிலும் சிக்கிக் கொள்ளா
வளமைநல் வழக்கம் ஆண்மை
வழுக்கிடா ஒழுக்கத் தூய்மை
அளவறியாத ஆவல்
அழகுமேல் தாவல் எல்லாம்
விளைவறியாத போக்கு
வெட்கமில்லாத நோக்கு
குளிர்ந்தநல் லுடலும் ஆண்மை
கொழித்திடு கட்டுக் கோப்பும்
மிளிர்ந்திடுமேனி யுள்ளம்
மெல்லியல் நங்கை நல்லாள்
ஒளிர்விழி ஓரங்காணும்
உவகையில் ஊறி டாமல்
தெளிந்திடு குடும்பமானச்
சிறப்பினை எண்ணும் என்றும்
உடல்வெறி தணித்துக் கொள்ளும்
உடனடி வேகச் சேர்க்கை
இடம்பெறும் இளமை மிஞ்சும்
இழிநிலை ஈனம் கேடு
கிடந்தன திரையில் கண்டு
கெட்டவன் கிளர்ச்சியாலே
அடைந்தது பெருமையா சொல்?
அழுகிய கழிவா அன்றா?
துணிச்சலும் துறுதுறுப்பும்
தூண்டுவான் வணிக வீணன்

தணிக்கையும் தடுப்பும் கட்டுப்
　　பாடெனும் தரமும் கற்றோன்
பிணித்துயர் காமக் கொச்சை
　　பீடையர் காதல் என்னும்
கணிப்பினைக் கண்டு கொள்வான்
　　கண்ணியம் காத்து நிற்பான்
உணர்ச்சி நட்புண்டாக்காமல்
　　உரசிடும் வம்பு கிண்டல்
மணப்பதோ மரண மூட்டி
　　மகிழ்வது கயமைக் காமப்
குணப்பயன் பண்பு மானம்
　　கொண்ட தாய் வளர்பவர்கள்
தணப்பினில் தவிப்பதில்லை
　　தணிந்துளம் தனித்திருப்பர்
காதலாம் காதல் எனக்
　　கழிசடைக் கடைச் சரக்கு
பாதக விளைவும் பெண்ணைப்
　　படுத்தவும் பண்பு கொல்லும்
சூதக வன்முறைக்குத்
　　தூண்டுகோல் வடிகால் பொல்லாக்
காதகம் அடங்குதற்குக்
　　கட்டிலாக் கணப்(பு) அலைச்சல்
காதலைப் பேசிப் பாடிக்
　　கட்டறுந் தின்பம் தேடும்
வேதனை விளைவுகள்தாம்
　　விழுமிய உயிர்பறிப்பு
தீதறு காதல் உள்ளம்
　　செம்மையும் தெளிவு தூய்மை
ஆதரவுடையதாமே
　　அழிவினைத் தந்திடாதே.　　(3.9.98)

பலகோணம்

ஏற்றத் தாழ்வு பேசாதே
இரந்து பெற்று வாழாதே
மாற்றம் தானே நிகழாது
மாந்தன் மாற்ற மாறுவதே.
தூற்றிப் பழித்துக் கூவாதே
துணைவலி சேர்த்து மோதாதே
நாற்றச் சேற்றை விலக்காமல்
நறுமணம் உண்டோ நடிக்காதே
வாய்ப்புகள் ஆயிரம் இருந்தாலும்
வலிமை மூளை யிருந்தாலும்
நாய்ப்பயலாக அலைவதற்கும்
நரிப்பய லாக நினைப்பதற்கும்
ஏய்ப்புகள் சோம்பல் இழிகுணங்கள்
எத்தால் வயிறு வளர்ப்பதற்கும்
நோய்ப் பெருங் கூட்டம் இணைகிறது
நோக உழைத்து மேலுறுமோ?
நலங்கள் கெடுத்து நாடாளும்
நச்சர வங்களைத் தேர்ந்தெடுத்து
குலங்கள் இனங்கள் மதம்பேசிக்
கொள்ளை சுரண்டல் கொலைகளவு
திலகங் களுக்கு முடிசூட்டித்
திராவிடர் பெருமை யென்னென்பீர்
கலகங் கள்தீர் மனமுண்டா
கண்ணிய மிக்க இணைப்புண்டா?
கூட்டம் ஒன்று வாழ்கிறது
கூடிப் பேசி வாய்ப்புகளைக்

கூட்டிப் பெருக்கி யிடம் பிடித்துக்
　　கொழித்துச் செழித்து வளர்கிறது
நாட்டம் கல்வி பலதுறைகள்
　　நாளும் பொழுதும் தொய்வின்றி
கூட்டிக் கூட்டி மேலாண்மை
　　கொள்ளும் உழைப்பால் சிறக்கிறது
தாழ்ந்தோர் உயர்ந்தோர் போராட்டம்
　　தம்மை உணராப் போர்ராட்டம்
வீழ்ந்தோ ராதல் தம்தவறா?
　　வேறோர் கூட்டம் காரணமா?
வாழ்ந்தோர் முயற்சி உழைப்பென்ன?
　　வம்பர் எதிர்ப்பு வருவானேன்?
சூழ்ந்தோர் பகைமை முரண்பாடு
　　தொலையா மண்ணில் வாழ்வென்ன?
மெய்வழி யழித்து மேலேறும்
　　மிரட்டல் ஏய்ப்பு மிகுகீழ்மை
தெய்வ விருப்பம் அருளென்று
　　திருடிப் பெருக்கும் திருக்கூட்டம்
செய்வ தறியா வெறுங்கூட்டம்
　　சிறுமை பரப்புக் கிறுக்காட்டம்
உய்வழி உண்மை உழைப்பறியா
　　ஒந்திகளாயிவ் வூர்கெடுக்கும்
உன்னை நீயே உயர்த்தாமல்
　　உதவி பெற்(று) ஓர் இடம் பிடித்துத்
தன்னைக் காத்துக் கொள்வதற்குத்
　　தகிடு தத்தம் கையூட்டு
முன்னை யேய்த்துத் தனக்குத்தான்
　　முட்டுக் கட்டை போட்டுக் கொண்(டு)
இன்றைக் கழுது பேயாட்டம்
　　என்ன ஈனம் இது தருமா?

இன்று நாட்கள்?...

இருப்பதை இழந்து நாளும்
எத்தனை பாடு பட்டும்
ஒரு பயன் இல்லா ஊனம்
ஒப்பாரி புலம்பல் ஓலம்
கருவினை அழிப்பா ராகக்
கணக்கிடும் கள்ளர் ஆட்சி
ஒருவினை உயர்ந்த தில்லை
உள்ளமே யில்லார் ஊரில்
சம்பளம் வாங்கும் பின்னே
சதிவலை வணிகம் முன்னே
தெம்புளம் காணா வண்ணம்
திருடிடும் கயவர் கும்பல்
இன்பமா இன்று நாட்கள்?
எத்தனை சுமைகள் வாட்டம்?
நம்புதற் குரியர் யாவர்?
நம்மிடை உறவு தான் என்?
வருமானம் பெருக்குவார் போல்
வறுமையைப் பெருக்குகின்றார்
ஒருமானம் உண்டோ ஆட்சி
உதவுமோ விலைகள் வீழ்த்த
பருகாத நீரும் பாலும்
பயிரிலா வயலும் போல
இருளாடும் இழிவை ஏந்தும்
இனநலம் விந்தை சந்தை
எந்த ஓர் உறுதி யேனும்
ஈந்ததா நிறை மகிழ்ச்சி
நொந்தவர் மக்கள் என்றும்
நோபவர் மக்கள் பேசி

வந்தவர் போனோரெல்லாம்
வளங்களைச் சுரண்டிக் கொண்டு
கந்தலை நமக்குத் தந்தார்
கவலைநம் சொந்தம் என்றே
கொடுமைகள் மிகுவதற்குக்
கொண்டாட்டம் மாநாடென்று
படுமகிழ் வெய்தும் கட்சி
பணம்பொருள் வெள்ளம் பாயும்
குடுவையுள் குடும்பம் கோடி
கொள்ளையர் பெருக்கம் கூடி
படுகளம் மக்க ளாட்சி
படையெது மாற்றுதற்கே?
கொள்கைகள் செத்துப்போகக்
கோழைகளாகக் கூவும்
பிள்ளைகள் பெரியர் பெண்டிர்
பெருந்திரள் மந்தை யின்னும்
தள்ளியே விலகி நின்று
தனித்தனித் தாழ்ந்திருப்பர்
வெள்ளமாய் பாய்ந்து வீழ்த்த
விவரமே இல்லை போலும்.

பெருஞ்செல்வம்

குறள்வழி நடந்தால் குடும்பம் சிறக்கும்
மறப்பவர் மறுப்பவர் மதிப்பிழந்து இழிவர்
அறக்குடி யாக்கும் அறிவினார்
பெறத்தகும் செல்வப் பெரும்பொருள் மறையே.

எப்போது அறிவாய்?

உரமிருக்கும் உடல் உள்ளம் உயர்வுக்காகும்
　　உண்மையினை உறுதியினை உணர மாட்டாய்
தரமழிக்கும் தலைக்குனிவு தாழ்ச்சி ஈனம்
　　தாராளத் திரைக்காட்சி தளரா வேட்கை
பரபரக்கும் இளமையது பண்பற்றுப் போய்
　　படுகுழியில் தான்வீழ்ந்து பாழ்பட்டுப் போய்
இரவுறக்கம் துறந்து திரை இழுக்கில் சிக்கி
　　இறப்பினையே கைநீட்டி ஏற்கின்றாயே

உயிரோடு போராடும் வறுமை கோடி
　　வழிமாறா ஒழுக்கத்தில் மானங்காக்கும்
பயிராகும் பண்பாட்டைப் பாதுகாக்கும்
　　பழுதில்லா உடலுழைப்பால் பசியைப் போக்கும்
ஒயிலாக மாளிகையில் உழைக்காமல் பெண்
　　உடல் காட்டி இழிவணிக உத்தி யாலே
உயிரோடு விளையாடும் உலுத்தர் உள்ளார்
　　உண்மையினை யறியாத உள்ளம் அந்தோ!

சுவையென்று நாள்தோறும் சுரணை கெட்டுத்
　　தொடர்கதையாய் நற்பொழுதைத் தொலைத்து விட்டு
தவறுணர விரும்பாது சாக்கடைக்குள்
　　தலைமுழுகல் சரியென்னும் தாக்கம் கீழ்மை
எவரென்று புரியாமல் எதிர்ப்புக் காட்ட
　　ஈனரிடம் கலையுலகம் இயக்கும் வீழ்ச்சி
கவலையுனக் கில்லாத காரணத்தால்
　　கழிசடையைக் கண்டுமனம் களிக்கிறாயே

அரும்பொழுதை இழந்தபெரும் அழிவை என்றைக்கு
அறிவாயோ! அறியாமை அகலும் போது
பெரும்பகுதி பாழாகிப் பெருமை கெட்டுப்

பின்னேற்றக் கொடுமையினைப் பிசகைக் கேட்டை
திரும்பிவராப் பெருஞ்செல்வம் தீர்ந்துபோன
சிறுமதியை உணர்வாயோ! திறமை செம்மை
அரும்பிளமை அழுக்குமன அசடர்க்கு ஈந்தாய்
ஆற்றலுடன் அழிக்காமல் அலைகின்றாயே.

என் மகன்

முத்துப்பல் காட்டிச் சிரிக்கிறான் – பின
முகஞ்சுளித் தேகொஞ்சம் அழுகிறான்
தித்திக்கும் மழலையைச் சிந்துவான் – கடுஞ்
சீற்றமுங் கொண்டெனை மிஞ்சுவான்
தெருவினில் விற்கிற பண்டங்கள் – வேண்டிச்
சிணுங்குவான் என்னுடன் பிணங்குவான்
முறுவலை மீட்டிட வேண்டுமேல் - பெரு
முயற்சிகள் மேற்கொள வேண்டுமே
கேட்டது தந்திட வில்லையேல் – நான்
கேட்பது கேவலும் கூச்சலும்
பாட்டொடு நாட்டியம் ஆடுவான் – கொஞ்சம்
பக்குவம் பண்ணிய பின்னரே
வானொலிப் பெட்டியின் கூடவே – சில
வாணிக விளம்பரம் சொல்லுவான்
தேனொலி கூட்டுவான் என்மகன் - இவன்
திருப்புகழ் எண்ணி லடங்குமோ?

மக்களன்பு

நேயம் என்னும் நினைவு செயல்பட
ஆய காலம் ஐம்ப தாண்டோ?
நேயம் நமதா நீயுள்ளன்பைத்
தேய விட்டுச் சீரழிவுற்றுக்
காய விட்டுக் கல்லாய்க் கட்டையாய்ச்
சாய, வீழ, தலைகால் அற்றுத்
தீய வழிகளைச் செழிக்கச் செய்தாய்;
அன்பிலார் தமக்கே; அன்புளார் எவர்க்கும்;
அன்பே உயிர்நிலை, அன்பே தோற்றம்;
வாழ்முறை அன்பாய் வளர்ந்தருள் வழங்கும்
இனமாய் வளரா ஈனம் ஏனடா?
சீழ்புண் சிரங்கு செழிக்கும் அழிக்கும்
காழ்ப்பும் கபடும் கள்ளமும் பெருக்கும்
நாய்நரி சிங்கம் நமக்குக் காட்டெனப்
பேய்மனப் பேச்சு, பெருந்தனச் சவடால்
இழிந்த தலைவன் இடக்கு முடக்கு;
கழிந்த அடிமைக் கால வழக்கு
தொடரும் கேவலம், தொலையாத் தொல்லைகள்;
வாய்மை யறங்கள், வளையாச் செங்கோல்
தூய்மை நெறிகள் துலங்கும் பண்புகள்
தொலைத்து மகிழச் சொன்னவன் எவனடா?
குறள்நெறி பற்றிக் குடும்பம் நடவா
இருள்நெறி ஊர்நா(டு) ஏன் மாறாமல்?
மேன்மை பயிலாக் கீழ்மை யுற்றாய்
இன்று தொடங்குவாய் இன்னல் துரத்துவாய்
அன்புக் கடலாய் அகத்தை விரிப்பாய்
இன்பம் எவர்க்கும் எனும்நிலை யாக்குவாய்
ஒன்றை யழித்(து) இன்னொன்று வாழும்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

யார் போற்றுவார்?

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

குதிக்கின்ற கோலேறும் கழுதைக் கூட்டம்
[illegible] மேல் [illegible] குதிக்கோர் என்ன?
பதிக்கின்ற ஒழுக்குகளில் பண்பாடென்னும்
[illegible] [illegible] பட்டடை தரும்
சதிக்கயவர் [illegible] சாய்த்து விட்டால்
[illegible] பெண்மைக்குத் தரமொன்(று) உண்டு
மதிக்கத்தான் [illegible] மிகு வேண்டும்
[illegible] காட்டுவதா மங்கை மாண்பு?

[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
நிறைமனம் ஆகாது நெருப்பொழுக்கம்
நீ பயின்றால் அவர் [illegible] நின்று போதும்
அறைகுறையை அங்காடி ஆக்கிக் கொள்வர்
அறிவுண்டோ விலங்குகளோ அந்தக் கூட்டம்
[illegible] உள்ளத்தைக் கட்டுப்பாட்டால்
[illegible] ஒழுக்கத்தால் [illegible] ஆக்கம்

பெருந்தொல்லை [illegible] [illegible] மேன்மை
[illegible] [illegible] தன்மானம் [illegible] கொண்டால்
அருந்திறமை ஒழுக்கத்தை அன்பால் சொல்லும்
அன்னை தந்தைக்கெதிரான [illegible]
இருப்புள்ளம் இதுவன்றோ இருக்கலாமா?
[illegible] [illegible] என்றால் [illegible]
கரும்புள்ளி [illegible] [illegible] கூசாத
[illegible] போற்றாத கடமைப் [illegible]

திரைவணிகப் பெருங்கள்ளர் திறமையுன்றன்
சிறுமையினைக் காசாக்கும் செயலில் வெற்றி
இரையுணரும் விலங்குகளுக் கெந்த நோயும்
இல்லையவை தேர்ந்துண்ணும் இயற்கைப் போக்கில்
இரவுபகல் எந்நேரம் எண்ணம் சேறாய்
இழியின்பச் சுவையுண்பாய் இதயம் சொத்தை
உரமிருந்தால் திரையிழிவை ஒழிப்பாய் செல்வ
ஓநாய்கள் மூச்சடங்கி ஒடுங்கு மாறே.

வாராய்

சாதிகளைச் சாடித்தாம் தலைவ ரானார்
தலைமையினைச் சாதிகளால் தாங்கிக் கொண்டார்
நீதிகளைப் பேசித்தான் 'நிலைமை' கண்டார்
'நிலைமை'யினைக் காத்தற்கே நீதி சாய்த்தார்
ஆதியிலே வாக்குறுதி அள்ளித் தந்தார்
அரசாட்சி ஏற்றபின்னர் அவைமறந்தார்
சேதியிவை யெல்லாமுந் தெரிந்த வன்நீ
சிலிர்த்தெழுந்து வாவுந்தன் திறமை காட்டு.

தலைவன் முதல் தொண்டன்வரைச் சற்றும் மாறாச்
சண்டாளத் தனமிவர்கள் தகுதி யென்றே
நிலைகுலைந்து மாந்தரெலாம் நெஞ்சம் நொந்து
நெடிதிந்நாட் கட்சிகளின் நிலையுரைப்பார்
மலையளவு மோசடிகள் மலிந்த திங்கே.
மண்ணுண்டு வாழ்காலம் வருமுன் காப்பாய்
தொலைகவிவை தொகையாக தொல்லை வீழ்க
தோன்றுகநல் வாழ்க்கையெனத் துடித்து வாராய்.

சுவை பார்

செய்யுளே சிறந்தது செப்பம் உடையது
வடிவம் அழகு வாய்த்த மங்கை
வழங்கு மகிழ்ச்சி மயக்கம் நுகர்வு
நீங்கா இணைப்பு நெஞ்சில் களிப்பு
வார்க்கும் கூட்டு வண்டமிழ்ச் செய்யுள்
செஞ்சொல் தேர்ந்து செழிக்குங் கருத்து
நடைபயில் படையல் நலந்தரு மருந்து
செதுக்கிய சிலையின் தீரா அழகுக்
கலைநயம் செய்யுள் கட்டமைப்பாகும்
பலவுரு வாக்கம் பாட்டென இசைக்கும்
உலகியல் யாவும் உருவகமாகும்
சுருக்கம் அடக்கம் சுவையின் திரட்சி
நிலமிசை அறிவு நிறைவடி வாக்கம்
கட்டு தூக்கு காவியம் பாவியம்
மட்டிலா இன்சுவை மதுக்குடம் செய்யுள்
யாரும் எழுதலாம் எவரும் படிக்கலாம்
சீரும் சிறப்பும் செம்மையும் கொண்ட
செய்யுளெல்லாம் தேடிப் படித்திடு
தெரியும் எளிமை தேன்மழை இன்பம்
கால அருமை கருதும் எவரும்
செய்யுள் வடிப்பே சிறந்த தென்பர்
நிலநீர் நெருப்பு நெடுவான் காற்று
நேற்(று) இன்று நாளை நிகழ் அறிவியலெலாம்
போற்றும் கருத்துகள் பொன்போல் பொதிய
செய்யுளாக்கம் சிறந்த வடிவம்
முயன்று பார்இது முற்றிலும் இயலும்
கற்றுச் சுவைபார் கனிகளின் இனிதே. (13.9.98) ●

ஆண்கள் பாதி ஆயுளில் ...

வேளைக்குச் சோறின்றி வெம்பிச் சோர்ந்து
வீழ்ச்சியுற்று மனம் நொந்து விலகி நிற்க
ஆளுக்கோர் பேச்சாக அவல மூட்ட
அரைக்காசுக் குதவாத ஆளாய்ப் போனேன்
நாளுக்கோர் சுவையாக நரிகள் கூடி
நலந்துய்ந்து மகிழ் போதில் நாதியற்றேன்
கோளுக்கு மனக்கீழ்மை கொண்ட கூட்டம்
குடித்தனமா? பல ஆண்டுக் கொடுமை யாமே.
மனைவியென யிழிபிறவி மனதில் கீழ்மை;
மணவினையின் பொருள் மறுக்கும் மமதை யீனம்
நினைவுமுழு தும்கழிவு நேர்மை யற்ற
நிலைபகைமை உயிர்பறிக்கும் வஞ்ச நெஞ்சம்
மனையறமோ மகிழுறவோ மதியா நச்சு
மரமிவளே மதிப்பழித்து மகன்க ளென்னும்
புனையழகுப் போலிகளின் பொருந்தாப் பண்புப்
புறவளர்ச்சிக் குறுதுணையாய்ப் பொல்லாப் போக்கே.
வரவெல்லாம் பதுக்குவதும் வாய்மை யற்று
வளர் முரண்கள் வடிவாகி மகிழ்ச்சி கொன்றும்
இரவெல்லாம் உறவில்லா இழிவாய் வாழ்க்கை
இயல்பழித்து மணமுறிவைச் செயல்படுத்தும்
கரவுள்ளக் காரியிவள் கழுத்தில் தாலி
கட்டியவன் ஏமாளி காலம் போகும்
அரவெல்லாம் பெண்ணானால் ஆண்கள் பாதி
ஆயுளிலே முடிவரென அறிய லாமே.
ஒத்துழைப்பும் உடன்பாடும் ஒவ்வா வுள்ளம்
உறுதுணையாம் பொருளறியாள் உரிமை கொன்று
பத்திரமாய்த் தன்னலத்தைப் பாதுகாத்துப்
பயல்கள்நாய் கள்குரைக்கப் பயன்படுத்தும்

உத்திபல வுள்ளடக்கம் ஓநாய் பெண்ணாய்
உடனுறைய உருக்குலைந்தான் உயிர்நீத்தாலும்
இத்திறத்தார் தீண்டாமல் எட்டி நிற்க
எவரேனும் மேற்பார்வை ஏற்க வேண்டல்
உண்ணாமல் அறுபதுநாள் உலர்ந்து வாடி
ஒடுங்கியபோது உறவில்லை உருக்கமில்லை
கண்ணாளன் மண்ணாகக் களித்து ஊண் உண்டுக்
கடுகளவும் நல்லெண்ணம் கனிவி லாது
கொண்டாடிக் குறுமதியர் கொழுக்கத் தந்து
குலவிமகிழ்ந் திழிவொட்டி கோலம் காட்டித்
திண்டாடச் செய்பெருந் தீங்கு இன்னல்கேணி.
திருவாட்டி யாய்வாட்டிச் சிதைத்தாள் சீச்சீ.

நாமெல்லாம் பார்வையாளர்கள்

கட்சி மாறவும் கருத்து மாற்றவும்
கண்ட கொடிகளைக் கையி லேந்தவும்
பிச்சி வாழ்க்கையைப் பெருமை யென்னவும்
பேசு வார்தமைப் பீடையென் றேசவே (நாமெல்)

சங்கிலி வீரர் தடியர் குண்டர்
தண்ணீர்(!) பரத்தையர் தம்மொடு சூழப்
பொங்கிப் பெருகும் பொல்லாத் தலைவர்கள்
போடும் கூச்சலைப் புதைக்கப் புறப்படும் (நாமெல்)

உயர்கிற வரையில் உருக்கமாய்ப் பேசி
உள்ளதைச் சுருட்டும் உலுத்தர்க ளாலே
துயர்படும் நாட்டைச் சூழ்ந்துள இருளை
சுக்குநூ றாக்கித் தூக்கி யெறியவே (நாமெல்)

திரையிழுக்கில் ...

படம் பார்த்துப் பெரும்பொழுது பாழாய்ப் போக்கிப
பழிசுமந்து கீழ்மைகளைப் பகிர்ந்து கொண்டு
தடமாறித் தன்மானம் தவறிக் கெட்டுச்
சாக்கடையில் தன்னறிவைச் சாய்த்து விட்டு
நடமாடும் கழிசடையே நரகல் காடே
நாடுயர்த்தப் பாடுபட நாட்ட மின்றி
முடமாகித் திரையிழுக்கில் மூழ்கிப் போனாய்
மூளையிழந்து இழிவுற்றாய் முறையோ நன்றோ?
கொண்டாட்டம் மகிழ்ச்சியெது குமுகா யத்தைக்
கொல்லுமிழி கதைத் திரைகள் குமரி மேனி
கொண்டாட்டும் கூத்துகளா? கூச்சம் அற்றுக்
குலைகுலுங்க குதிப்பதுவா? கொஞ்சம் நாணம்
கொண்டாலும் மாறாதோ கொள்ளைக் கூட்டம்
குறுகுறுப்பைத் தூண்டுவணி கக்கோட்டான்கள்
பெண்டாட்டும் தொழிலுக்கா பெருமை செய்வீர்
பேதையராய்ப் பீடையராய்ப் பிழைக் கின்றீரே
குமரிகளோ சொகுசுகளைக் குறிக்கோளாகக்
கொண்டுவிளம் பரப்புகழில் கொள்ளை போனார்
குமரருக்கு வகைபலவாய்க் குட்டி வேட்டை
கொடுவணிகச் செல்வருக்குக் கோடி கோடி
அமர அறிவாண்மையின் மேல் ஆவல் கொண்டால்
அழுக்காட்சிக் காரர்களுக் கழிவு தேற்றம்
இமயமெனத் தூய்மையுடன் இந்த நாட்டை
இருவிழியாய்க் காவாமல் இழிந்தீர் அந்தோ.
கல்வி பயில் கூடங்கள் கலவிக் கூடம்
காமவிளை யாட்டுக்குக் கண்கள் தாவும்
தொல்லைசில கயவர்களின் சுறுசுறுப்பு
தொலைக்காட்சி திரைப்படங்கள் துணையிருப்பு

நல்ல மனம் தூய குணம் நாடும் உள்ளம்
　　நாட்டோர்க்குக் குறைந்ததனால் நாச வெள்ளம்
இல்லத்துள் கழிசடைகள் இழிவுக் காட்சி
　　எல்லார்க்குந் தலைக்குனிவு ஏன் இந்த வீழ்ச்சி?
இரவு பகல் ஓயாமல் இன்ப வெள்ளம்
　　இழிகாமப் பழியூற்றாய் எங்கும் பாயும்
பரவுகலை உறவுகளைப் பச்சையாக்கிப்
　　பல்கலையும் கொல்களையாய்ப் படர்ந்து மிஞ்சிச்
சிரமிழந்த தன்மானம் சிதைந்த கற்பு
　　சீச்சீ ஓர்பிழைப்பென்னும் சிறப்பு வெட்கம்
உரமிருந்தால் ஒழுக்கமெனும் உணர்விருந்தால்
　　உயிரிருந்தால் கீழ்மையிவை ஒழிந்திடாவோ?

புத்துலகு காண

இல்லார்க்கு வாழ்வுதர ஏதேனும் தொண்டுசெய்
நல்லாரைக் கண்டு நனிபோற்று – தொல்லை தரும்
பொய்யரை மெய்யால் புறம்போக்கி யென்ஞான்றும்
வையகம் போற்றிடவே வாழ்

கொத்திப் பிடுங்குங் கொடுங்கழுகுக் கூட்டங்கள்
தித்திக்கப் பேசித் திருசேர்க்கும் - ஒத்தறிவால்
இத்தீமை மாய்த்திடவே எத்துணைபேர் முன்வருவீர்
புத்துலகு காணுமுளம் பூண்டு.

எப்படித் தப்பினேன்?

முதலையும் முரடும் கொண்டது விடாவெனும்
புதைபொய் மனத்துப் பூடக இறுக்கம்
உடனிருந் தொற்றுமை யுள்ளக் கனிவின்
கடனெதும் புரியாக் கசடி யியக்கும்
ஈன எதிர்ப்பின் எரிச்சல் உளைச்சல்
அவதி அல்லல் ஆழ்துயர் இன்னல்
வெந்து வெம்பி வேதனை மிகுதியால்
நொந்து, வருந்தி நொடியில் இறுதியென்று
இறந்திருப் பேனே எப்படித் தப்பினேன்?
நூல்கள் பலதுறை நுகர்வு நோக்கிய
வாலறி வுடைமை வளர்த்துக் கொண்ட
கல்வி காரணம் கலக்கம் நீக்கம்
இறத்தல் தீர்வா? இருந்து வெல்வதே
சிறத்தல்; அறிவு தெளிந்தான் செயலென
ஒவ்வொரு தற்கொலை உணர்த்தும் எனவுரை
விளக்கம் செய்தி விவர உளவியல்
படித்துப் படித்துப் படிந்ததனாலே
இறக்கத் துணிந்தே இயங்கிய எண்ணம்
துறக்க; உறுதி துலங்க, மரணம்
பறக்க விரட்டிப் பயன்தரு படையல்
ஆக்கி யளிக்க அகவலிகூட்டி
ஊக்கம் உழைப்பில் உயிர்பெற் றேனே.

இப்படிப் பட்டம் என்னே?!

ஏனென எண்ணிப் பார்க்கும்
இயலறி வெங்கே நீயும்
மானென மான முள்ள
மாந்தனாய் வாழ்ந்தி டாமல்
தேனென நஞ்சை யுண்ணும்
திரையிழி சுவையி லாழ்ந்தாய்
வானென வளர்ந்திடாது
வழிமறந் தென்ன வேட்கை?
காளையை அடக்கு கின்ற
கலைத்திறம் வலிமை யுள்ளம்
நாளைய நாட்டை வாய்மை
நாணய வழிநடத்தும்
ஆளென வளர்ந்திடாமல்
அழிவதா? அறிவு தேறும்
மூளையை விற்று விட்டு
முரண்படும் இளமை வீணே
கூடுதல் மதிப்பெண்ணேவுன்
குறியெனத் தொடங்கிப் பின்னர்
கேடுறு தொலைக்காட்சிக்குக்
கீழ்ப்படிந் திழிந்து கெட்டாய்
நீடுயர் வெய்து தற்கு
நீமுயன் றிடைமுறிந்து
வாடுதல் இழுக்கு நீயுன்
வளமையை இழந்து விட்டாய்
உயர்நிலை பெற்றுத் தேற
உழைப்பதாய் உறுதி செய்து
துயர்நிலை அடைந்ததென்ன
தோல்வியின் சாயல் வெற்றி

பெயர் பொறிப் பட்ட தாரி
பேசவே மதிப்பெண் வெட்கம்
பயனிலை பதவி தேடி
படிநிலை கடைசி தானே
எவனுமுன் அறிவை வீழ்த்த
இருளினில் திரைவெளிச்சம்
கவனமாய் எதிர்த்துக் காலக்
கருத்துணர்ந்து உயர்வு றாமல்
விவரமற் றழுந்திக் கீழ்மை
விழைவினில் மூழ்கி விட்டாய்
அவனெலாம் உயர நீயோ
அழுகுதல் யாருக் காக?
விஞ்சிமுன் னிலைக்குச் சென்று
வெற்றியின் சிகரம் நின்று
மிஞ்சிய மகிழ்ச்சி தந்து
மேனிலை பெறுவா யென்று
கொஞ்சமோ எதிர்பார்ப் புன்றன்
கூர்மையேன் குறைந்ததந்தோ!
எஞ்சியது உனக்குக் கிட்டும்
இப்படிப் பட்டம் என்னே?!

பொய்

எல்லார்க்கு மெல்லாமு மென்றுரைப்ப தெத்துணைபொய்?
செல்வஞ் சிலருக்கே; சீரழிவு – பல்லோர்க்கு
நீளக் குழிபறித்து நேர்மையிலா வாணிகர்கை
ஆளக் கிடந்த தறி.

(கலியுகன்) - மா.கி.ரமணன் M.A., M.Phil, M.Ed.
தலைமையில் 24.8.97 - பாடிய செய்யுள்

சுதந்திரப் பொன்விழாச் சுவடுகள்

சொல்லும் பொருளும் சுவையும் மெச்ச
வல்ல தலைவரை வணங்குகின்றேன்
நல்லோர் பெரியோர் நடத்தும் நண்பர்
எல்லாருக்கும் இருகை கூப்பினேன்
மாங்காடு உறையும் மதிநல மக்கள்
பூங்கா மனத்தினர் போற்றி வணங்கினேன்
விடுதலைப் பொன்விழா விழைவுகள் என்றோ
விடுதலைப் பொன்விழா விளைவுகள் என்றோ
வடுவறு தமிழில் வழங்கி நாமெலாம்
நெடுவழி தமிழை நிமிர்த்தல் சிறப்பு
நாடு முற்றும் கேடு தீர்க்க
மாடு மனைகள் வளங்களை யிழந்தார்
வீடு தோறும் விடுதலைப் பெருந்தீ
பீடு பெருமை பிறர்நலத் தொண்டே
கொடுமைகள் தாங்கிக் குடும்பம் குடும்பமாய்ப்
படுகொலைப் பட்டனர் பணிந்தொதுங்காமல்
நெடுவழி தொடர்ந்தனர் நெஞ்சுரம் கொண்டவர்
விடுதலை விதைத்தனர் விளைந்தது விடுதலை
தனியொரு மனிதனும் தனக்குத் தானே
தலைமைப் பண்பைத் தகுதியைப் பயின்றான்
இனியொரு நாளும் இப்படி யடிமை
இந்திய மண்ணுக் கில்லா தாக்குவோம்
மனிதமும் அருளும் மலரக் காண்போம்
மாந்தர் விடுதலை மானம் காப்போம்
எனவெழுந் தார்த்தார் இன்னுயிர் வார்த்தார்

இவையெலாம் பொன்விழா எண்ணச் சுவடுகள்
நேற்றைய மானம் நிகழ்த்திய நெடும்போர்
போற்றி விடுதலைப் பொன்விழா நடத்தியோர்
ஊற்றாய் ஊழல் ஊர்நா டெங்கும்
நாற்ற மடிப்பதை நன்குணர்ந்தோரே
மாற்றியமைக்கும் மாத்திறம் வலிமை
வாய்த்த அமைப்பாய் மக்கள் ஒன்றியம்
ஏற்ற உறுதியால் இணைந்தியக் காவிடில்
ஏற்ற முண்டோ யிளந்தலை முறைக்கே
நல்லவன் கெட்டவன் நாய் குரங்கு அரிமா
செல்லக் கிளியைத் தின்னும் பூனை
கொல்லும் வேங்கை குறுமதியீனன்
பல்வகை வேடப் பக்ல்திருட் டாட்சிகள்
கண்டனை எனினும் கண்டனம் செய்து
தண்டனை யளித்துத் தடுத்திட வில்லையே
உண்டுகொழுக்கும் ஊழல் ஓநாய்களைக்
கண்டுபிடித்துக் கசையடி கொடுக்கக்
கற்றா லல்லது களங்கம் தீருமோ?
மண்டு கயமைகள் மாய்க்க வள்ளுவன்
வகுத்த தமிழ்மறை வழிப்படி யறநெறி
கொண்டு செலுத்தும் கொள்கை பயின்று
கொள்ளை வணிகக் கூட்டுக் காவல்
அண்ட விடாமல் அழித்திடும் ஆற்றல்
அமைத்தெழ விடுதலை அரணா கட்டுமே
''அறிவியல் தொழில் முன்னேற்றம் ஆலைகள்
ஆக்கப் பணிகள் அனைத்திலும் வளர்ச்சி
பொறிகள் எந்திரம் போர்ப்படை அணுவுலை
புதுப்புது திட்டம் பொருள்வள மேன்மை
நிறையவே மெச்சும் நிலையடைந்துள்ளோம்
நீவிர் இந்தியர் பெருமிதம் கொள்வீர்''
நெறியிலார் இப்படி நிறையப் பேசுவர்

நேர்மைக்கின்று நிலைதடு மாற்றமே
விதைப்பது விளையும் விரும்புவது கிடைக்கும்
விதைத்தல் ஊழல் வேறெது விளையும்?
விரும்புவது ஊழல் வேரூன்றி விட்டது
பதைப்பவர் பலபேர் பசப்பினில் தேர்ந்தோர்
கதைப்பன பலவும் காரிய மாவவோ?
நாடு பெற்ற நன்மை தீமைகள்
நாடி யறிந்தால் நரித்தனம் குடித்தனம்
கோடிகோடிகள் கொள்ளை தடுத்திலர்
பேடிக ளோவெனில் பேசுதற் கில்லை
முடிவறியாமல் முயல்வ தீனம்
விடிவறி யாதோர் விதிவழி யென்பர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
ஓதும் கருத்தை உள்ளத்து என்றும்
இருத்திக் கொண்டால் இன்னல் போக்கும்
மருந்தது வாகும் மனதில் ஏற்போம்
கோகா கோலா பெப்சி நேசனல்
சோனி ஹோண்டா சொந்தமா நமக்கு?
பிச்சைக் காரர்கள் உள்நாட்டுப் படைப்புகள்
பிறவெல் லாமும் வெளிநாட்டுச் சரக்குகள்
கோகினூர் வைரமும் வேண்டாம் நமக்கு
கொண்ட விடுதலைக் கொள்கையே சிறப்பு
நூறு கோடிப் பேர்கள் இந்தியா
ஆறு கோடிப் பேர்கள் தமிழகம்
வேறுபாடுகள் வேதனை வறுமைக்
கூறுபாடுகள் கோடி கோடி
பதினைந்து இலக்கம் கோடி பாதகப்
பணம்புரள் கின்ற போதை வணிகம்
இந்தியக் கடனைத் தீர்த்திரு மடங்குபின்
இருக்கும் மீதி; எல்லை கடந்த
உலக வணிகம் ஊடுருவ லாலே

நம்நாட் டிளைஞர் நாசம் நடைப்பிணம்
இம்மாதிரியா இருக்கும் விடுதலை?
அரை, கால் வயிறாய் ஆயிரம் குடிசைகள்
ஐந்துடு உணவகம் ஆரேழு மாடி
இரைகுறை வறுமை எத்தனை கோடி?
இறைவேங் கடவனுக் கெத்தனை கோடி?
வரையேன் இல்லை? வல்லடி வழக்கு;
மாந்தர் அல்லல் மாற்றுவார் யாவர்?
கறையான் புற்றில் கருநாகங்கள்
கண்ணிய நாடு கயவர் பிடியில்
அரசியல் தரகர் ஆதிக்கத் தரகர்
விரவி வளங்களை விற்ப தறிந்தும்
உரமும் உண்மை உழைப்பும் இல்லா
நரகல் மாந்தர் நாடுயர்ந் திடுமா?
வன்முறை அமைப்புகள் வளரும் கட்சிகள்
இன்முகம் நேர்மை இல்லாத் தலைமைகள்
அன்றொரு விடுதலை அடிமை யறுத்திட
இன்று தொடர்வதோ இழிஞர் விடுதலை
ஒற்றுமையற்றே உடைந்து சிதறும்
குற்ற இந்தியக் குடிமைப் பயிற்சி
பெற்ற விடுதலை பேணுகின்றாரா?
விற்று மகிழும் வேகம் என்னவோ?
விடுதலை பறிக்கும் வேக வணிகம்
கெடுதலைச் சுமத்திக் கெக்கலிப் போடு
திடுதிடு வெனநமைத் திணர அடிக்க
கிடுகிடு வெனவரும் கேட்பார் யாரே?
தற்சார் பென்னும் தனிச்சிறப் பாற்றல்
உற்றாலல்லது உண்மை வளர்ச்சி
அற்றோம் என்ற அலறல் செத்ததா?
விற்போம் என்றிவர் விரைகின்றனரே?
கொடுக்கல் வாங்கல் குற்றம் ஊழல்

அடுக்கல் மாந்தர் அழுக்கு மனங்களே
வெடுக்கென வேலை முடிந்திட வேண்டுமா?
படுக்கென அடியில் பணத்தை நீட்டென
ஈன இடைத்தரகு இனமே வளரும்
மான மாந்தராய் வாழ விரும்பாக்
கூன இந்தியர் கொழிக்கவா விடுதலை?
ஆன நேர்மை அடங்கிப் போவதா?
விடுபடு மதவெறி வீணர் விலக்கி
கெடுமதி சாதிக் கேடு தொலைத்திடு
நடுநிலை அறமுறை நாடுருவாக்கிடு
விடுதலைப் பொன்விழா விளைவிவை யெனவே.
விழாவில் கூடுவோம் மீண்டும் எங்கே?
விழாமல்; வறுமை விரிவடை யாமல்
அழாமல் அவலம் அதிகரிக்காமல்
விழாவின் தொடர்ச்சியாய் விளைவுகள் வேண்டுமே!
ஓரணியாகி உருப்படுவோமா?
சேரணி யாகிச் சிறப்படை வோமா?
பாரணி சிதைந்து பலப்பல மோதல்
ஊரணி யுண்டா? உண்டா விடுதலை?
போலி விடுதலைப் பொன்விழா நடத்தி
மேலிருப்பவர்தாம் மினுக்கிக் குலுக்கலாம்
வேலிநாமடா; வீறு கொள்ளடா;
என்றென் செய்யுள் இத்துடன் முடித்தேன்
நன்றி வணக்கம் நல்லோர் உமக்கே.

காணான் கடன்

ஆளவந்தோ ரெல்லாம் அறக்கொடிய வாணிகரின்
தாளத்திற் கேற்ப தலையசைத்தார் – கேளடா
தன்னெஞ்சு விற்றுத் தலைமைநிலை காத்திடுவோன்
கன்னெஞ்சன் காணான் கடன்.

மேலினமா?

நல்லெண்ண மில்லா நயவஞ் சகர்கள்
மனந்திறந்து உதவா மர்ம வணிகர்
மொழியினப் பற்று முன்னிலை யாக
வழிவகை காவல் மதிப்புநல் லிணக்கம்
வர்வேற்பு ஊக்கம் வளர்ச்சிக்கு உறுதுணை
ஏதும் செய்யா இறுமாப்புள்ளோர்
தன்பதிப் பகத்துப் படைப்புக் கல்லால்
என்படைப் பேனும் ஏலாது. இவர்க்கெலாம்
வன்படை யிருள்மனம் வாய்மொழி கரும்பு
நன்னிலை நோக்கி நம்போல் நூல்வெளி
யிட்டுத் துன்புறும் எழுத்துயர் உழைப்பின்
முளைப்பயிர் அழிக்கும் மூர்க்கத் திறமை
மிக்கோர் எங்ஙன் மேலினமாவர்?
நூல்வெளி யீட்டின் நுணுக்கம் விற்பனை
கால்கொண்(டு) இவர்கள் காலங் காலமாய்
விரிவடைந் தென்ன? வேரோர் படைப்பை
பரிவுடன் ஏற்க பயன்வழி காட்ட
அஞ்சுவர் நெஞ்சத்து அன்புடையோரா?
வணிகக் கள்ளம் வசதியில் பற்று
புதுமுக நுழைவைப் புழுதியாக்குவர்
உதவ விரும்பார் உயர்வு பெருமையா? (4.9.97) ●

நல்லரசாமோ?

வாய்ப்பூட்டு போட்டு வழிபிறழந் தாளுகின்ற
வாய்ப்பினைக் கொள்வார்; வடு நீக்கத் – தூய்மனத்தர்
இல்லையென் றாக்க இதுவுதவும் என்றெண்ணும்
நல்லர சாமோ நவில். ●

ஒளியாய் இளைஞர் உயர்வடைய
ஒப்பார் காமம் ஊட்டிடுவார்
தெளிவாய்க் காதல் திறமறிந்தோர்
திரையில் கதையில் தீட்டாரே. (2.8.97)

ஆட்சி

மானமில் லாத மந்தைகள் ஆட்சி
ஈனமிக்(கு) இழிவுசெய் எருமைகள் ஆட்சி
பொதுநல மில்லாப் புலையர் ஆட்சி
எதுநல மென்பதே யியலா ஆட்சி
கைகளைத் தட்டும் கருத்திலார் ஆட்சி
பைகளைப் பறிக்கும் பரத்தர் ஆட்சி
வையகம் வைய மையிருள் ஆட்சி
தையலர் வாழ்வைத் தகர்க்கும் ஆட்சி
தக்கோர் மதிக்கத் தவறிய ஆட்சி
சிக்கல் விளைக்கும் தீயர் ஆட்சி
சாராயம் விற்கும் சாக்கடை ஆட்சி
பேராயம் அறியாப் பேதையர் ஆட்சி
மாறினும் மீண்டும் மடையர் ஆட்சி
ஊறிடும் கயமை ஊழல் ஆட்சி
மாற்று ஏமாற்று மாற்றி அறிவினால்
ஏற்று சான்றோர் ஏற்புடை ஆட்சியே. (6.2.96)

கடை எழுத்தர்

ஆயிரம் பின்னல் காதல்வலை
அற்பக் கயவர் கற்பனையாம்
தீயினை மூட்டிச் சூடேற்றித்
திருட்டுப் பிழைப்பைத் தொடர்கின்றார்
நாயினும் கீழாய் நாகரிகம்
நரகல் உண்ணும் பெருங்கூட்டம்
சீயிது தவிர்த்திடத் தெரியாதா?
சீர்ப்பட எழுத்தைத் தேர்ந்தெடுத்தே!
மொழியறி யாத முண்டங்கள்
முதலீ டில்லா வாணிகமாய்ப்
பழிநிறை சொற்கள் பண்பீனம்
படியப் பரப்பிப் பணம் பண்ணும்
இழிவழி யறிவார் இளைஞரிடம்
எடுபடும் கிளுகிளுப் பேற்றுவதால்
கழிவறைக் கதைப்பாட் டரங்கேற்றிக்
கழிசடை எழுத்துல காள்வாரே
காதல் தூண்டு கடையெழுத்தா
கண்ணிய எல்லை கடந்துணர்ச்சி
போதை யேற்றிப் பொருள் பறித்தல்
பொழுது போக்கு வெகுயெளிதாய்ப்
பாதை மாற்றும்; படுகுழியில்
பண்பை மூடும் பண்பாளர்
தீதல் லாமல் வேறென்ன?
தெரிந்தோர் தெளிந்தோர் தேர்வாரோ?
எளிதாய் வீழ்த்தி இழிவூட்டும்
ஈனம் இன்பக் கிளர்ச்சி யிவர்
துளியும் மானம் இல்லாதார்
துரோகச் செல்வம் ஈட்டிடுவார்

ஒளியாய் இளைஞர் உயர்வடைய
ஒப்பார் காமம் ஊட்டிடுவார்
தெளிவாய்க் காதல் திறமறிந்தோர்
திரையில் கதையில் தீட்டாரே. (2.8.97) ●

ஆட்சி

மானமில் லாத மந்தைகள் ஆட்சி
ஈனமிக்(கு) இழிவுசெய் எருமைகள் ஆட்சி
பொதுநல மில்லாப் புலையர் ஆட்சி
எதுநல மென்பதே யியலா ஆட்சி
கைகளைத் தட்டும் கருத்திலார் ஆட்சி
பைகளைப் பறிக்கும் பரத்தர் ஆட்சி
வையகம் வைய மையிருள் ஆட்சி
தையலர் வாழ்வைத் தகர்க்கும் ஆட்சி
தக்கோர் மதிக்கத் தவறிய ஆட்சி
சிக்கல் விளைக்கும் தீயர் ஆட்சி
சாராயம் விற்கும் சாக்கடை ஆட்சி
பேராயம் அறியாப் பேதையர் ஆட்சி
மாறினும் மீண்டும் மடையர் ஆட்சி
ஊறிடும் கயமை ஊழல் ஆட்சி
மாற்று ஏமாற்று மாற்றி அறிவினால்
ஏற்று சான்றோர் ஏற்புடை ஆட்சியே. (6.2.96) ●

மதிக்கத்தகு செயல்

செய்யுள் பாட்டு தூக்கென்னும்
சிறந்த பொருள்மிகு தமிழ்ச் சொற்கள்
மெய்யாய் எமக்கு மிகப் பிடிக்கும்
மேன்மை பெறுவீர் மகிழ்வுறுவீர்
செய்யுள் பாட்டுத் திறனூல்கள்
சிறியர் பெரியர் யாவர்க்கும்
நெய்யும் பாகும் நிறையினிப்பாய்
நெஞ்சம் கமழ நிறைப்பனவே

பொய்யும் புளுகும் கயமைகளும்
பொழியும் இதழ்கள் புறந்தள்ளிச்
செய்யும் நலத்தைச் சிந்திப்போர்
செய்யுள் நூல்கள் தெரிந்தெடுத்துப்
பெய்யும் பெருமழை பெருங்குப்பை
பிறமாசுகளை புரண்டோடச்
செய்யுந் தூய்மை யதுபோலச்
செய்தல் மாந்தச் சிறப்பன்றோ?

நல்ல யிதழ்கள் நூல்களெலாம்
நற்றமிழ்க் காவல் பணிசெய்ய
வல்ல வகையினுக் குதவுவதே
மதிக்கத் தகுசெயல் மதியுடையீர்
கொல்ல யிதழ்கள் குவிக்கின்ற
குறுமதியினர் வணிகத்திற்கு
அல்ல உமதுழைப்பு அறிந்தீரோ
அழுக்கு உம் கைகளில் அகற்றீரோ?
கவர்ச்சி நடிகைப் படங்களுடன்
கருத்தை மயக்கப் பரிசுகளும்

கவற்சியற்றுக் களிக்கின்ற
　　காமக் கயமை கதை பாடல்
எவர்க்குத் தேவை இளைஞர்க்கா?
　　இழிகழி சடையேடுகள் எங்கும்
அவர்க்குத் தேவை அறிவறமா?
　　அறிவழித்து ஈனம் பெருக்குவதா?
கடுமையாக உழைத்துப்பின்
　　களைப்பு தீரச் சிறுபொழுது
விடுதலையாக ஓய்வெடுத்தல்
　　வேண்டும் என்ற தேவைக்குக்
கொடுமைத் திரைவணி கக்கூட்டம்
　　கொடுக்கும் கழிசடைக் குப்பைகளை
விடுத லறியா வெறிபோதி
　　விரும்பும் இழிநிலை வேண்டுவதோ?
திறமை தகுதி பெறுதற்குத்
　　திரைப்பொழு தழிப்பு பயன்படுமா?
கறைமலி கயவர் களியாட்டம்
　　கன்னியர் காளையர் நுகர்கலையா?
முறைமை பண்பு மொழிச் சிறப்பு
　　முறிக்கும் வணிக மூர்க்கரிடம்
சிறையிடப் பட்டுச் சீர்கெட்டுச்
　　சிறப்பிழந் தென்ன தித்திப்போ?
இல்லந் தோறும் இன்பமுற
　　இலக்கிய உணர்வு பெறவேண்டும்
முல்லை பிச்சி மணத்தோடு
　　முழுமதி யழகுப் பெண்டிரெலாம்
சொல்லி மகிழச் செந்தமிழால்
　　சுவைமிகு செய்யுள் பயின்றிடுவீர்
சில்லி விழுந்த குடமானோர்
　　சின்னத் திரைமுன் இழிவாரே!

நல்ல செய்யுள் ஏடுகளால்
        நாணம் மானம் நமதாக
செல்வம் இவையே யெனும் சிறப்பும்
        செந்தமிழினத்தின் பெரும் புகழும்
மெல்ல உணர்வில் மிகுந்தூற
        மெய்ம்மை யொழுக்கம் மிகுபண்பு
வெல்ல விளங்க விழுதூன்ற
        விரும்பிப் பயில வேண்டாவோ? (30.8.97)

தமிழர் எங்கடா?

முடமாய் அடமாய் மூளை விற்று
நடமா டும் பிண நாற்ற நாட்டை
மான உயிர்ப்பு மறுபடி யூட்ட
ஊன மனங்களை உசுப்பி உரம்பெறக்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
மடமை மாற்றும் மாசிலாக் களப்பணி
சிற்றூர் பேரூர் சீரிலா நகரம்
சுற்றிச் சுழன்று சொற்போர் நிகழ்த்தி
கற்ற உலகியல் கருத்தும் செம்மையும்
அற்ற மாந்தருக்கு அருந்தொண் டாக்கி
மக்களுக் காகவே மனம்மொழி மெய்யுயிர்
எக்கருத் தெண்ணம் ஏற்றம் தருவவோ
அக்கறை விண்ணுயர் அன்பு நிறையுளம்
ஓயா வுழைப்பு பாயும் வெள்ளமாய்
வழங்கித் தேய்ந்த மாபெரும் நல்லோர்
வழிமறந் திழிமனம் வளர்கலை ஈனத்
தொழிலர் அரசியல் தோன்றிய தெப்படி?
பழிநிறை ஆணவப் பயல்களை நம்பும்

இழிநிலைக் கெப்படி யிவர்ஆளாயினர்?
வெட்கம் வெட்கம் வேதனை கொடுமை
தாழ்ச்சி வீழ்ச்சி தகுமோ முறையோ?
ஆட்சிப் பொறுப்பை அரிய கடமையைக்
கயவருக் களித்துக் கண்மூடிக் கொண்ட
நயத்தை மெச்சவோ? நாணயக் கேடரை
வியந்து போற்றவோ? வீரர் சூரராய்
உயர்ந்த விளம்பர உலுத்தரை ஏற்கவோ?
திரும்பும் திசையெலாம் சீரழிவு எதனால்?
மாணவர் வாயிழி மமதை வெறித்தனம்
ஆசிரியப்பணி அழுக்கு சேறு
பல்கலைக்கல்வி பண்பிலார் படைப்பு
வணிகப்பண்டம் வஞ்சகம் கொள்ளை
கணிகையர் போற்றிக் கலையெனும் இழுக்கு
பணிச்சுமை ஏற்றி பணப்பயன் உறுஞ்சி
மக்கள் மனநலம் மாய்க்கும் வன்முறை
அந்தோ! அந்தோ! அறக்கேடு அவலம்
நொந்தோம் மாற்றம் நோக்கித்
தந்தோள் தூக்கு தமிழர் எங்கடா? (14.9.97)

கோபம்

நெஞ்சமெலாம் அன்பே நிறைந்தோர்க்குக் கோபநிலை
கொஞ்சமே வந்தாற் குறைசொல்லோம் – எஞ்ஞான்றும்
அச்சுறுத்துங் கோபம் அடைக்கலமாய்க் கொண்டோரை
மெச்சுவமோ சாய்ப்போம் மிதித்து.

சொத்து

தூய தமிழ் அறியாமல் துப்புக் கெட்டுச்
சொற்கலப்புப் பழிசுமப்பீர் சுரணை யற்றீர்
தாயமிழ்தத் தமிழ்ச் சொற்கள் தங்கம் வைரம்
தனித்தமிழின் வேர்ச் சொற்கள் சற்றே தேடிப்
போயமிழ்தம் பருகாமல் பொன்னின் மேலாம்
பொழுதழிப்பீர் புகழ் அழிப்பீர் புழுக்கள் ஆனீர்
தீயதமிழ் பேசாதீர் செந்தமிழ்த்தேன்
தித்திப்பில் தனிச்சுவையில் திளைப்பீர் தேர்ந்தே.

மொழிப் பயிற்சி முன்னேற்றம் முயற்சி யாலே;
முனைப்பில்லார் கலப்பு மொழி உதவும் என்பார்
செழிப்பதற்கு சிறப்பதற்குத் தேவை யான
செந்தமிழ்வேர்ச் சொல்தேடும் விருப்ப மில்லார்
அழிப்பவரை ஆதரிப்பர் ஆற்றல் வேட்கை
அத்தனையும் முறியடிப்பர் அருந்த மிழ்க்குக்
குழிப்படுக்கை மாற்றார்க்குக் கோட்டை வேட்டை
குன்றியளவு இனமானம் இல்லாக் கூத்து

செந்தமிழுக் கன்றாடம் சிறப்பு கூட
செய்முயற்சி தேடியெடு தேர்ந்து பேசு
முந்துமொழிக் குன்னாலே முடிந்த தென்ன?
முதன்மைக்குத் தளராத முயற்சி காட்டு
சொந்தமொழி அறிவாண்மைச் சொத்து மானம்
தொலைத்தவனே தாய்மொழிக்குத் துரோகம் செய்வான்
மந்தநிலை இனமழிக்கும் வரலாற்(று) உண்மை
மாத்தமிழைப் போற்றிவளர் மணக்கும் நாடே.

(27.9.97) ●

எதிர்ப்பு

நாணழிக்கும் நடைநரகல் நாளும் போதும்
நடுக்கூடம் நாய்க்கூட்டம் நாடும் இன்பம்
காணழிக்கும் கண்ணியத்தை கலையென்று ஈனக்
காமுகரோடு இழிமகளிர் கண்டுமெச்சும்
பூணொழுக்கம் புரிந்ததனைப் போற்றென் றாலோ
பொல்லாதான் வேண்டாதான் போலெதிர்க்கும்
ஆணொழுக்கம் பெண்கற்பென்று அளவு வைத்த
ஆன்றோர்கள் முறைபயிற்றி அறிவுறாதோ?

பக்தியா?

வேலையற் றறிவு தாழ்ந்து
விழுமிய நேரம் வீணாய்
ஆலயம் தேடிப் போவீர்
அகத்திருள் அகன்ற துண்டா?
காலமெல் லாம்தொடர்ந்து
கண்டதென் கவலைதீர?
நூலகம் செல்வதுண்டா
நுண்ணியம் கற்ப துண்டா?
சாலையில் தெருவில் சந்தில்
சாமி(!)யை வைத்து மூளை
மூலையில் எறிந்து கண்கள்
மூடியே முணுமுணுத்து
காலையில் மாலை இராவில்
கைதொழுது அவலம் மிஞ்சும்
பாலையில் சுருண்டு நாளும்
பக்தியா பரிதவிப்பா?

மேல்கீழ் மோதல்

உயர்ந்தோர் தாழ்ந்தோர் போராட்டம்
உதவா தெவர்க்கும் உணராமல்
முயன்றோர் கலவரம் மோதல்களில்
முரட்டுப் போக்கைத் தொடர்வோரே
இயன்ற அறிவால் திருந்தாமல்
எப்படி உயர்வை எட்டிடுவீர்
உயர்ந்தோர் என்னும் கூட்டத்துள்
ஒருவனை ஒருவன் தீண்டானே
நயந்தோர் தேவை நாடுவதும்
[illegible] றொருநாள் சாடுவதும்
வியந்தோர் உதவி போற்றுவதும்
வெறுப்போ டவரிடம் மோதுவதும்
பயன்றான் நோக்கம் பற்றன்று
பண்பும் உறவும் மலர்ந்து திடுமோ?
இயங்கும் அறிவில் கீழ்மேலாய்
இருப்போ ரெவ்வாறிணையாவார்?
தத்தம் நிலையும் தகுதிகளும்
தாமறிந் தடங்கி ஒற்றுமையின்
மொத்தம் விளங்கிக் கொண்டவர்கள்
மோதல் தவிர்க்கும் முறைகண்டார்
ஒத்துப்போதல் தாழ்வென்னும்
உணர்ச்சி யெவனோ ஊட்டிவிட
பித்தம் ஏறிப் பிதற்றல்களால்
பிரிவினைமேல் கீழ் பேயாட்டம்
மக்கள் ஒற்றுமை மதியாமல்
மதங்கள் சாதி மோதல்களால்
சிக்கல் பெருகிச் சீரழிந்தால்
தீயர் அரசியல் செழிப்பாகும்

அக்கம் பக்கம் தெருவூர்கள்
அறிவா லிணைந்தால் ஆகாதோ?
தக்க வ்ழிகாட் டும்சட்டம்
தாழ்வுயர் வெல்லாம் தகர்க்காதோ? (2.10.97) ●

தந்ததும் பெற்றதும்

பதவிகளைக் களவாடிப் பாமரர்க்குப்
பழஞ்சோறும் கிடைக்காமல் பண்ணுகின்ற
முதலைகளை முதலிடத்தில் தூக்கி வைத்து
மூக்கறுந்து நாக்கறுந்து முனகும் மக்கள்
பதறிமனம் பதைத்தலறிப் பணிந்தே மேலும்
பயனிழந்து வாடுவதே பழக்கமாகிச்
சிதறியழி கின்றநிலை *சீச்சீ* இன்னும்;
சிறிதேனும் மானமறம் சீற்றம் உண்டா?
உரிமையுடன் உறவானான் உடனிருந்தான்
உழைப்பாலே சிறுபயன்கள் ஊருக் கென்றான்
அரியணைக்கென் னடியாட்கள் அமைச்சுபோல
அமர்ந்திடவொத் துழைப்பீரேல் அள்ளி அள்ளி
உரிமையுமக் குள்ளதெலாம் உடன் வழங்கி
ஒப்பில்லா நலன்களெலாம் உவக்க ஈவேன்
தெரியுமுமக் கென்னுள்ளம் செய்வேன் தொண்டு
''செய்''யென நீர் பணித்திடுவீர் கேட்டான் செய்தீர்
கோடிகளால் மாடிகளா கோபுரங்கள்
கொழுப்பேறி வழுக்குகிற குடும்பக் கோட்டை
பேடிகளே மக்களெனும் பேயர் ஆட்சி
பிறப்பிக்கும் ஆணைகளால் பெருத்த கொள்ளை
நாடிநரம் பெல்லாமும் துடிக்கும் நாட்டோர்
நான்கைந்து நாட்களிலே நாடி செத்து

வாடிவதங் கிக்கொடுங்கோல் வணங்கி யேற்று,
மானமெனும் ஒரு சொல்லை மறந்தே போனார்
பதினெட்டு வாக்குரிமை பல் துலக்கும்
பயனறியா, பதமறியா, பாதுகாவல்
மதியற்று, வழிகெட்டு மனம்போல் போக்கு
வரலாறும் வாழ்முறையும் வழக்கும் ஈனர்
சதியெற்றித் தன்மானத் தற்சார்பாண்மை
தலைமைப்பண் பாட்சிமுறை தக்க கல்வி
கதியற்ற சிறுவர்களைக் கண்ணி வைத்துக்
கைப்பற்றும் கடையர்களால் கண்டதென்ன?
நாற்பதிலும் ஐம்பதிலும் நைந்து நொந்து
நரியாட்சி நாயாட்சி நடுவில் சிக்கி
ஏற்புடைய ஆட்சியிலா இழிவைப் போக்க
எத்திறமை யாலியலு மென்றன் றாடம்
ஆற்றலறி வாண்மையருள் அகத்தூய்மை மிக்
கமைதொண்டர் அரசமைய அலைந்து தேடும்,
ஊற்றெடுக்கும் ஊழல்களை ஒழித்துக்கட்டும்
உயர்தரச் செல்வாக்குண்டோ உரைப்பீர் சற்றே
இளைஞரறி யாமையிவர்க் கின்பக் கோட்டை
ஏதிலிகள் இவர் வலையில் எளிதில் வீழ்வர்
வளைபறிக்கும் பெருச்செலிகள் வல்லூ றெல்லாம்;
வஞ்சித்து வளங்காணும் வணிக வம்பர்
களைகளையே பயிரென்று காட்டிக் கூச்சம்
கடுகளவும் இல்லாத கபட வேடர்;
முளைகளையும் மரமென்று முழங்கி யேய்த்தார்
முதலில்லாப் பெருவணிக முதல்வ ரென்றே.

நொண்டி மனத்தர் உலகத்தில் ...

தொண்டின் பெருமை யறிந்தோரே
துயரம் நீக்கத் துடித்தெழுவர்
அண்டி வருவோர் அவலங்கள்
அறவே போக்கும் அருள் உள்ளம்
கொண்ட மனத்தில் குடியிருக்கும்
கொள்கை உயர்வு போற்றாத
நொண்டி மனத்தர் உலகத்தில்
நூலோர் சான்றோர் அரசுண்டோ?
ஒழுக்கம் ஏற்க மறுத்திழிவை
ஒப்பி மதித்துப் பொன்பொழுதை
இழக்கும் அனைவர் இல்லத்தும்
எவ்வா றறிவின் நிலையிருக்கும்
பழிக்கும் அழிக்கும் பணிவுடைமை
பண்பின் பெருமை யுணராது
கொழிக்கும் ஈனப் பெருவணிகக்
கொடுமைக் கடிமைக் கூட்டமிதே
ஆட்சித் தூய்மை அறமேன்மை
அளவும் பாங்கும் அறியாது
காட்சி மிடுக்கில் களிப்படையும்
கருத்தும் திறனும் காணாது
நீட்சி அரக்கர் நிலையூழல்
நீங்கா தென்றும் பெருங்கேடு
மாட்சி மைக்குத் தன்னாட்சி
மானங் காவா மந்தைகளே
தகுதி திறமை தரக்கல்வி
தலைமைப் பண்பு தன்னாண்மை
மிகுதி மேன்மை யுடையோரை
மெச்சும் அறிவு மிகுந்திருந்த

தொகுதி மக்கள் தொண்டுள்ளம்
　　தொல்லையற்ற வாழ்வியலின்
பகுதி யறிந்து பழகினரே
　　பழமை உயர்வின் பயனென்றே
எல்லாம் சமமென் றீனர்களே
　　இடக்கும் முடக்கும் எதிர்ப்புகளும்
பொல்லாங் கெல்லாம் புரட்சியெனப்
　　பொறுக்கித் தனத்தால் வெறுப்பூட்டி
செல்வாக் கென்னும் அழுக்காறு
　　செலுத்தும் ஆணை அதிகாரம்
வல்லார் வருப்பே வாய்க்காலா?
　　வரம்பு மீறிய பேய்க்கோலம்.

செழிப்புறும் நாடு

மயக்கிலா அறிவு பெற்ற
　　மாந்தரைக் கொண்ட நாடு
வியத்தகு மேன்மை கொண்டு
　　விளங்கிடும் பெருமை யோடு
கயமையும் காழ்ப்பும் மிக்க
　　கருத்தினர் கலைஞ ராக
உயர்ந்திடு நாட்டில் எங்கே
　　உயர்வினைக் காணக் கூடும்?
செயல திறம் உள்ளவர்போல்
　　தினந்தினம் பேசிப்பேசி
இயல்பெருஞ் செல்வம் தாமே
　　ஈட்டிட முனைந்துள்ளாரை
அயல்படத் தள்ளி நல்ல
　　அறிவினார் துயர் கண்டுச்
செயல்படத் துணைசெய் வீரேல்
　　செழுப்புறும் நாடு நல்வீர்.

குடிகெடுக்கும் வருமானம்

மதுவெள்ளம் தெருவெங்கும் பெருக்கெடுக்க
    மந்திரிகள் [illegible] பெயரெடுக்க
மதுவெல்லும் மதியல்ல மதுவெள் ளத்தில்
    மல்லாந்த சடலங்கள் சாலை யோரம்
இதுகொல்லும் என்றெழுதி இன்னும் விற்பான்
    எவன்கண்ணும் எழுத்தறியா இந்த மண்ணில்
புதுவெள்ளம் மேடையிலே புலையன் உள்ளே
    பொருளரசை இருளரசைப் போக்குவீரோ ?

கொலைக்களத்து வல்லூறுக் கூட்டம்போலக்
    குருதிசதை வெறிமிகுந்த கும்பல் கோடி
வளைத்தெடுத்துத் தம் குழுக்கள் வளப்படுத்தும்
    மதுவிற்றுக் குடிகெடுக்கும் வருமானத்தில்
திளைத்தாக்கக் களிப்புற்றுச் செருக்கும் மானம்
    சிறிதுண்டோ அரசியலைச் செருப்பாய் மாட்டும்
இளைத்திரக்கும் மாந்தவினம் என்ன செய்யும்?
    என்செய்வேன் எனப்புலம்பும தீர்வெண்ணாதே.

படுகுழிகள் பலவெட்டிப் 'பார்த்துப்போ'வுன்
    பாதையிது வெனப்பாசப் பசப்பு காட்டும்
கெடுமதியர் மதுத் தொழிலில் கிளைபரப்ப
    கிளுகிளுப்பென் றன்றாடம் கெட்டழிந்தாய்
இடுகுறியாய் அரசியலில் இருக்கின்றாயே
    எவ்வளவோ படிப்பறிவால் என்ன மாற்றம்?
கடுகளவு தன்மானம் காட்டு போதும்
    கறையேறித் தன்குடும்பம் காக்கலாமே.

காகித அம்புகள்

ஏக்கம் என்பதா இழிவென் றுணர்வதா?
காகிதக் கணைகள் கண்ணியக் குறைவென
இளைஞரிடையே எடுத்துரைத்திருந்தால்
திருந்த வாய்ப்பு; தெரியும் ஒழுக்கம்;
ஒழுக்கக் குறைவை ஒப்புக் கொண்டால்
மாணவர் கூட்டம் மதிக்கும் போலும்
கட்சித் தலைமை கடமை யறிந்ததா?
வெட்டிக் கொண்டால் விருப்பம் கூடுமா?
ஒப்போலை இரக்கும் ஒந்திக் கட்சி
எந்தத் தலைவனும் இழிஞனே இக்கால்
உந்து மான உணர்வு மாண்பு
வந்தா லல்லது வாழ்வு சிறக்குமா?
காகிதக் கணைகளைக் கண்டு மகிழ்ந்து
கல்லூரி நாட்களில் காணா இவற்றைக்
காளைகள் செலுத்தக் களிப்புற் றாளாம்
அமைச்சர் அம்மையார் அதற்கேங்கி னாலது
வேதனை யல்லவா? விழுப்ப மில்லையே
சிந்து கீழ்மை சீர்ப்படுத்தாது
தானும் பார்வையாளர் பக்கம்
இருந்து கணைகள் ஏவி மகிழ
இதயம் துடித்ததாம் எப்படித் தடவல்
ஐயகோ நீவிர் அமைச்சர் வெட்கம்
அற்ற அரசியல் அகநெறிகெட்டே.

ஊழல் ஒழியுமா?

நீ தேர்ந் தெடுத்தாய் கீழ்மகன் அவனோ?
 நெருங்கிக் கேட்கும் நெஞ்சுரம் உண்டோ?
நாதேர்ந்து அவையில் நடிப்போ னெல்லாம்
 நாடுகாக்கும் நல்லவ னல்லன்
தீதே நினையாச் செயல்மறத் தொண்டு
 திறந்த மனத்துச் செம்மை கண்டு
நீதேர்ந் தெடுத்து நிலைமை மாற்று
 நின்னறி வாற்றலை நீமே லேற்று
மேடைப் பேச்சை மெச்சிக் கயவர்
 மேனிலைக் குன்னை விற்று விடாதே
பீடைக் கூட்டம் பின்னிருந்தாட்டப்
 பேதையாகிப் பிழைசெய் யாதே
கூடைப் பொய்யர் கூசாக் குடியர்
 கொள்ளைக் கூட்டம் குவிக்கும் உறுதிகள்
பாடைக் கிட்ட பன்மலர் ஒக்கும்
 பார்த்து நடப்பதுன் பகுத்தறி வாமே
ஊழலை ஒழிக்க உன்னால் முடியும்
 உடனே நீயுன் ஊருடன் கூடு
பாழடைகின்ற பண்பு நலன்களைப்
 பார்த்தும் பதுங்கிப் பயந்து நடுங்கித்
தாழலைத் தொலைத்துத் தலைநிமிர்ந் தெழுந்து வா
 தரணியில் உனக்குத் தகுந்ததைப் பெறுவாய்
வீழலை ஒப்பி விலகிப் போனதேன்?
 விருப்ப மறைமுகம் விளங்கத் தானோ?
பின்புலக் கயமைப் பேயர் தேவை
 பெற்றுத் தந்திடப் பேசும் பேரம்
தன்னல வேட்கை தணியா வேகம்
 தானிவ் வூழல் சாகா மருந்து

உன்னையும் ஊரையும் உட்பகை யாக்கும்
உணர்ந்து ஒது க்காததால் உள்ளது தீமை
என்று தகுதி எடுபடுமோ அன்று
இரக்கும்வழுவல் இல்லாதொழியுமே.

ஒளி துளியில்லையா?

பார்த்தாயா உண்மை பளிச்சிடு கின்றதை
நேற்று குடியரசுத் தலைவர் இன்று
கூற்று தன்மனக் கூட்டைத் திறந்து
''நாட்டரசியலை நம்பியும் அதனால்
நடந்த ஆட்சிகள் ஆணைகள் நம்பியும்
கெட்டுப் போனோம் கீழ்மையுற்றோம்;
நானும் ஆணையிட் டரசு நடத்தினேன்
ஆயினும் தப்புகள் தப்புகளேயாம்
ஒப்புக் கொள்வதில் தப்பே யில்லை''
வெங்கட ராமன் வேதனை யுள்ளம்
பொங்கும் உண்மை புறப்பட்டு வரும்
ம.பொ.சி. நினைவுநாள் உரையில் தெளிவு
பதவி துய்த்தோர் பயன்கண் டானபின்
உதவி வார்த்தையோ? உருக்கம் போல
குற்றம் புரிந்தும் குறுமணி நேர்மை
சற்றே வெளிப்படும்; தகவ லானது
தவறுகள் மலியத் தலைகவிழ்ந்திருப்பதோ?
ஒப்புக் கொண்டே ஒப்பாரி தொடருமோ?
எள்ளத் துணையும் ஈனம் கொல்ல
உள்ளத் தூண்டல் ஊக்கம் மானம்
ஒளி துளி யில்லையா உடன்செயல் படவே
மாற்றியமைக்க மாசு துடைக்க
எண்ணமே இல்லையோ என்ன மாந்தரோ?

தமிழச்சி மானம்

இனமும் கொடியும் இல்லா இந்தியர்
எனஇழி வாக எள்ளல் துள்ளல்
ஆப்பிரிக் காவில் ஆதிக்க வெறியன்
வெள்ளையன் கேலியை வீழ்த்தினாள் ஒருத்தி
தன்னுடல் தழுவிய சேலைத் தலைப்பை
மின்னல் வேக மிடுக்கின் கிழித்தாள்
நாட்டுக் கொடியென நாட்டினாள் குமரி
மூவண்ணச் சேலை முன்றானை யதுதான்
விடுதலை யியக்கக் கொடியாய் எழுந்தது
தென்தமிழ்ச் செல்வி தில்லை யாடி
வள்ளி யம்மை வரலா றானாள்
எண்ணம் இமயம் ஈடிலா மானம்
பதினாறு அகவை பாட்டாளி யவளுக்
கெதிராய் வெள்ளை ஆதிக்க வெறித்தனம்
கிறித்தவ முறைப்படி நடவாத் திருமணம்
செல்லா தென்ற தீர்மானம் எதிர்த்துப்
போராட்டம் நடத்தப் பொங்கி யெழுந்த
தமிழர் இந்தியர் தலைவர் காந்தி
போராட்ட வீராங்கனை வள்ளியம்மை
கைதாகிச் சிறையில் கடுந்துயர் உற்றாள்
நோய்வாய்ப் பட்டு நூலாய்த் துரும்பாய்
மீண்டாள் காந்தி மிகத் துயருற்று
''மகளே கொடுஞ்சிறை வாட்டிட இளைத்தாய்
வருத்தமோ?'' எனலும் மறுத்துக் கொதித்து
''மீண்டும் கைதெனில் சிறைப்படத் தயங்கேன்''
வீர வள்ளி வேங்கையாய் நிமிர்ந்தாள்
தமிழச்சி வள்ளி தன்மான எழுச்சி
தமிழக மாந்தரைத் தட்டி யெழுப்புமோ?

அரசியல் கொள்ளை ஊழல் ஆணவ
வெறியரை வீழத்தி விடுதலை பெறவே?

பழி

பைந்தமிழைப் பாழ்படுத்திப் பணக்கொள் ளைக்குப்
படப்பாடல் பிறமொழிச் சொல் பலகலந்து
நைந்திழியும் சுவைஞரெனும் நாணமற்றோர்
நாடோறும் நாடெங்கும் நரகல்துய்ப்பு
மைந்தரிவ ராவாரோ மாசில்லாநின்
மடிமீது திரைக்குப்பை மறுத்துத் தூய்மைப்
பைந்தமிழ்ப் பற்றுறுதற்குப் பழகிடாது
பலவீன ரானபழி படரலாமோ?

சிறந்தோர்

தமிழும் தமிழனும் தழைத்திடத் தக்க
சலியா வுழைப்பு தருவோர் பெருக
நமது பணியை நாளும் செய்வோம்
நற்றமிழ் இல்லம் நாடிச் செல்வோம்
அமிழ்தென வாய்ச்சொல் அருள் மனம் கொண்டோர்
அறிந்தவர் தொடர்பால் ஆக்கம் காண்போம்
தமிழுயர் வென்பது தமிழர் உயர்வு
தம்பொருள் தருவோர் தலைசிறந் தோரே.

மீண்டும் மேனிலைக்கு

தமிழர் ஓரினம் தமக்குள் ஒற்றுமை
அமைதி மகிழ்ச்சி அருளற அகத்தார்
ஏற்றத் தாழ்விலார் இணைந்தோர் குடும்பமாய்த்
தொழிற்பிரி வறிந்து துணைபுரிந் துயர்ந்தார்
பண்டைய தமிழகப் பண்பா டப்படி
என்றும் தமிழர் இதயத் தூய்மையால்
யாதும் ஊரே யாவரும் கேளிராய்த்
தோதறிந் துதவி துயர்களைந் தன்பால்
ஆதர வளிக்கும் அருட்கொடைப் பாங்கினர்;
எள்ளலும் தள்ளலும் எப்போ தெவரால்?
ஆரியர் வருகைக் கப்புறம், அழுக்கால்
பின்னர் தன்னலப் பேதைமை யச்சம்
நன்றி கொல்லும் நரித்தனம்; நாளை
என்னிலை வறுமை யாகுமோ தாழுமோ
எதிர்காலத்தை எண்ணிப் பொன் பொருள்
சேர்க்கத் தொடங்கச் செத்தது ஈகை
மறைக்கவும் நடிக்கவும் மனச்சான்று கொல்லவும்
குரைக்கவும் கடிக்கவும் கொல்லவும் துணிந்தபின்
குழுக்கள் கட்சிகள் கொள்கைகள் பிரிவுகள்
ஈன மாயிரம் இப்போர்துள்ளன
நானும் நீயும் நலிவுறுகின்றோம்
மாற்ற முனைந்து மனத்தால் ஒன்றுவோம்
மீண்டும் தமிழினம் மேனிலை யுறவே.

உரிமையில்லா ஊரார்

முன்னோக்கு முழுநோக்கு முயற்சி ஊரார்
முகமலர அகமகிழ முடிவு செய்கை
நன்னோக்கு நடைமுறைகள் நாடிக்கூடி
நன்மைகளைச் செயல்படுத்த நாட்டுச் சட்டம்
ஒன்றேனும் பயனில்லை உண்மையாக
ஊராட்சி உரிமையெதும் ஊரார்க்கில்லை
தன்னாட்சி யில்லாத மக்களாட்சி
தலைகவிழ்ந்து கிடக்கின்ற தாழ்ச்சி யின்னும்
காவடி தூக்கிக் காலம் கழித்து நன்மை
கடுகளவும் காணாது கலங்கும் சிற்றூர்
நாவடியார் நாட்டுநலம் நாளும் பேசி
நடத்தரசு தம் குடும்ப நலனே யன்றி
நீ வடிக்கும் துயர்க் கண்ணீர் நீங்கா தென்றும்
நெடுங்கொடுமை தொடர்வதனால் நெஞ்சம்
புண்ணாய்த்
தீவடிக்கும். தீர்வெதிலும் தெரியவில்லை
திரண்டெழுந்தால் கட்டாயம் சிறுமை தீரும்.
எவரென்று காத்திருந்தால் இல்லை தீர்வென்று
என்றறிவாய் நீமுதலாய் எழுந்து வா! வா!!
தவரென்று கண்டவெலாம் தகர்த்துச் சாய்க்கத்
தமிழ்மறையை உறைகல்லாய்க் கொள்ளல் சால்பு
கவலைகளைத் தீர்த்தொழிக்கக் காலம் வேறா?
கட்டமைப்பும் செயல் திறமும் காட்டும் வெற்றி
சுவரென்று கிடக்கின்றாய் சுரணை கொண்டு
சுழன்றெழுவாய் சூழ்குறைகள் தொலைப்பதற்கே.

ஒளி வழங்காது எரிகின்றாய்

போதையின் பாதை போட்டு வைத்துப்
பொழுதும் இரவும் 'போட்டு' அழிய
சூதணி கயவர் பின்தொடர்ந்து
தொடங்க மயக்கச் சுவை காட்டி
ஏதறியாத இளங்குருத்தை
எரித்தழிக் கின்ற இழிவணிகம்
வேதனை விரித்திவ் வுலகெங்கும்
வெறிவிளை யாட்டில் கொழிக்கின்றார்
கயவர் வணிகக் கஞ்சாவில்
கன்னியர் காளையர் கருத்தழிந்து
மயங்கிக் குடும்ப மதிப்பழித்து
மரணம் தேடி யணைக்கின்றார்
தயக்கமின்றித் தடுத்தொழிக்கத்
தம்மன வலிமை கூட்டுவதே
உயரத் தகுந்த உரமென்றே
உணரா தென்ன உயிரிருந்தே?
கவலையாயிரம் இருந்தாலும்
காசில்லாமல் திகைத்தாலும்
அவலம் நொடியில் தீர்த்து விடும்
அறிவும் உழைப்பும் இருப்புடையீர்!
தவறு போதைச் சண்டாளர்
தவிர்ப்பீர் உறுதி தான் மருந்து
பவழம் முத்து போல் ஒளிரும்
ப்பால் முகம் காக்கப் பயில்வீரே.
மயக்கும் குடியால் மதிகெட்டு
மனைவி குடும்பம் கதிகெட்டு உன்
இயக்கம் இழிவாய் இருப்பதுமேன்?
ஏன்ஒளி வழங்காது எரிகின்றாய்?

கயவர் மதுவிற் பனைக்காகக்
கடின உழைப்பைக் கரைக்கின்றாய்
மயக்கம் தெளிய மது மறுப்பு
மாற்றுப் பாதை தன்மானம்
ஈனர் ஆட்சி போதை தரும்
எல்லாப் பொருளும் சந்தையிடும்
மானமற்று மகிழ்ந்திருக்கும்
மற்றவ ரழிவில் மாச்செல்வம்
ஊனமழிக்கும் ஓராட்சி
உடன்படு மோடா மதுவிற்க?
ஆளவரைக்கும் அறிவுரைத்தும்
அசிங்கம் மாற்றாது அலைவீரோ?

எடுத்தாள்வேன்

மனமல்ல உள்ளந்தான் மறுவில் சொல்லாம்
மறப்பேனோ உள்ளத்தை மதிப்பேன் என்றும்
நினைவெல்லாம் மொழித்தூய்மை நிலைக்க இன்னும்
நெடிதுவளர் ஆர்வத்தின் நிலைவிளங்க
இனம்வெல்ல, தூய தமிழ் இயக்கம் வெல்ல
எங்கறிந்த போதினிலும் எடுத்தாள் கின்றேன்
கனவல்ல மெய்யுயர்வுக் கலைகள் யாவும்
கனித்தமிழின் கடலாக விரியக் கண்டே.

குறுக்கம்

நிழலாடும் திரைமுன்னர் நிறையழிந்து
நெடுநேரம் இழிகாட்சி, நிலைமறந்து
பழநாட்டுப் பண்பாட்டுப் பாங்கிழந்துப்
பன்னாடை பிண்ணாக்காய்ப் பழிநிறைந்து
விழவாவுன் இளமை நலம் வெறுமையுற்று
விரிவணிக விளம்பரங்கள் வீட்டுக்குள்ளே
பிழையாகும்; நன்னெறிகள் பிறழ்ந்து தாழும்
பெரும்பான்மை யென்பதெல்லாம் பேதமைக்கா?

செயற்பயனும் சேர்ந்தநலச் சிறப்பு மற்று
செலவழிந்த நேரத்தைச் சேர்த்தெண்ணிப்பார்
முயற்சியெனும் பயிற்சியினால் முன்னேற்றத்தின்
முகங்காணாய் முறைகேட்டின் முகட்டில் ஈனர்
மயக்குதிரைக் களியாட்டம் மானமற்ற
மகளிரைச்சேர்த் திழிவூட்டும் வணிக ஒநாய்ப்
பயல்களிடம் படங்களிடம் பார்வை எண்ணம்
படிப்பறிவா மேற்படிப்பா பயனற்றாயே.

அறிவாண்மை மெச்சாத அசடனானாய்
அப்பன்சொல் மதியாத ஆணவம் ஏன்?
நெறியாண்மை இலக்கியங்கள் நிழலும் காணாய்
நிறையொழுக்க நினைவற்று நெருப்பில் வீழ்ந்தாய்
செறிவாண்மைச் சீர்மையிலாத் திரைக்களங்கத்
தீங்குகளைத் தீர்த்தழிக்கும் திறமையென்னும்
குறியாண்மை அற்றவனாய்க் கூனிக் கொண்டாய்
கொள்கையெதும் மேன்மையிலாக் குறுக்கம்தானே.

நம்பலாமா?

நன்னாய்வு செய்யாமல் தரங்கெட்டுப் போய்த்
தலைகவிழ்ந்து கிடக்கின்ற தவறு நீளும்
அன்றாடக் கேவலங்கள் அங்கும் இங்கும்
அண்டையிலும் இல்லத்தும் அவலம் கேடு
வென்றாளத் தன்னடக்கம் வேண்டும் மக்கள்
விளைவறியா விருப்பத்தால் வீழும் பண்பு
நன்றாகும் நாடாகும் நடத்தை யாக்கும்
நற்பணிக்கு நம்மவர்க்கு நாட்ட முண்டோ?
விற்பனைக்குப் பின்புலத்து விவரமற்றோர்
விளம்பரத்துக் கடிமை. யுடன் வேகம் எல்லாக்
கற்பனையும் வாணிகனின் கள்ள நெஞ்சும்
கண்டறியும் கருத்தில்லாக் கணக்கற்றோர் தம்
நற்றுணையாய் நல்லறிவை நாடா ஈனம்
நன்காய்ந்து தேர்ந்தெடுக்கும் நாட்டம் அற்று
பெற்றுநுகர் பேதைமையைப் பெருமையென்னும்
பிழைமாற்றப் பேரறவு பெறுவ தென்றோ?
பல லட்சம் கோடிகளாம் பரிசு சொல்லும்
பாதகரை நம்புவதா? பச்சைப் பொய்யர்
தலைதடவி மூளையுறிஞ் சும் எத்தர்க்குத்
தம்மைமறந்து இறையாகும் தவறு தாழ்வு
வலைவிரிக்கும் வணிகமன வஞ்சகர்க்கு
வருந்தியுழை வருமானம் தாரை வார்ப்பீர்
அலைமோதும் விலைமானம் அறிவில் கூட்டம்
அரைநொடியும் முறையறியா அவலம் அந்தோ!

கலையின் செழிப்பா?

கயமைகள் வளர்த்துக் கருத்தைக் கெடுப்போன்
கலைஞன் என்றால் காரித்துப்பு
மெச்சத் தகுந்ததை மெச்சத் தெரிந்தால்
கொச்சை மலியக் கூச்சம் துறந்து
பச்சை யாகப் பரத்தமை பரப்பும்
பாதகர் கூட்டம் பல்கிப் பெருகுமோ?
பணத்திமிர் பகட்டு பரவி மினுக்குமோ?
ஏன் ஒலி நாடா இழிவுப் பதிப்புகள்
இல்லந் தோறும் ஈனம் பாய்ச்சும்?
கயமைப் பிழைப்பா கலையின் செழிப்பு?

யாரால் மேன்மை?

நாட்டினை நடத்து தற்கு
        நல்லதோர் தலைமை யில்லை
கூட்டமுங் கூச்ச லுந்தான்
        குடியர சாட்சி நாட்டை
வாட்டிடும் போலும் என்றும்
        மகிழ்ச்சியே வாய்த்தி டாதோ?
போட்டியும் பூசலுந்தான்
        பொழுதெலாம் வளரும் போலும்?
பளிங்கெனத் தெளிந்த நெஞ்சும்
        பாறைபோல் கொள்கைப் பற்றும்
உளியெனக் கூர்த்த சொல்லும்
        உண்மையே உருவ மாக
வெளியுல கமைக்க வந்தால்
        வியப்புறு மேன்மை கிட்டும்
அளியரே மக்கள் மன்றில்
        அமர்க்களம் செய்தா ரின்று.

நோக்கம்?

பகுத்தறி பண்பு பட்டங்கள்
பணத்தின் குவிப்பு திட்டங்கள்
தொகுத்துணராது துயர் தாங்கும்
தொடர்கதையாகும் வறுமையிலை
மிகுத்துயிர் வதையாய் விலை யேற்றும்
மேட்டுக் குடியர் கயமைகளைப்
புகுத்திடும் கொலைஞர் பொதுவாழ்வில்
போலிச் சமத்துவ புரம் என்னே!
சாதியும் மோதலும் அரசியலின்
தலைமை பறிப்போர் கருவிகளாய்ப்
பீதியும் அழிவும் பேரிழப்பும்
பெருக்கு கயவர் ஆட்சிகளின்
சேதியும் சமத்துவம் அடடாவோ
சிலிர்க்கும் களிக்கும் சில கூட்டம்
மேதினி சான்றோர் பண்பாளர்
மேற்பார்வைக்கேன் வரவில்லை?
தாழ்த்தப் பட்டோர் என்னுஞ்சொல்
தாழ்வை நிலைக்கச் செய்யுஞ்சொல்
தாழ்த்தப்பட்டோர் யாராலே?
தாழ்வையுடையார் எதனாலே?
தாழ்த்தப்பட்டோர் தலைநிமிரத்
தகுதி பொருளா தாராமெனில்
தாழ்த்தப்பட்டோர் தம்முழைப்பால்
தாமே யுயர்த்திக் கொளல் பொறுப்பு
தன்னுழைப் பொன்றே முன்னேற்றம்
தன்னுளத் தூய்மை அமைதிவழி
தன்னறி வுடைமை தான்வுடைமை
தகுதியிலாரைத் தலைவரெனத்

தன்னழிவுக்குத் தன்னுழைப்பைத்
தாரைவார்க்கும் தாழ்ச்சிகளை
என்றழிப்பாரோ அன்றேதான்
ஏற்றம் காண்பர் இரப்போரே
தன்னுழைப்பாலே முன்னேறத்
தகுந்த அடிப்படைப் பின்னணிகள்
நன்குணர்ந் தமைத்தல் நாடாமல்
நாட்டின் அரசியல் நாய்க் குரைப்பு
பின்னிருந் தாட்டும் பேதமைகள்
பெருவிருப்பாம் பல பீடைகளை
நன்றெனப் பழக்கும் நரிக்கூட்டம்
நாடகச் சமத்துவம் நலந்தருமோ?
சமத்துவ புரமென் றெவர் சொன்னார்
சமத்துவமில்லாச் சடைத்தலைவர்
சமத்துவத் தினிலும் விழுக்காடா
சமமில்லாத சமத்துவமா?
சமச்சீர் வழங்கல் தடைகண்டும்
சரிசெய்யாத சண்டாளர்
சமத்துவ புரமா செய்திடுவார்?
தளுக்கு மெலுக்கு தன்னலமே
கோடிகள் எத்தனை கோடிகளோ
கொள்ளையர் பொய்யர் ஆட்சிகளால்
நாடிது கேடுறும் நாள் தோறும்
நடிப்பால் நயப்பால் கீழ்மையுறும்
தேடிய யாவும் தீங்குகளாய்த்
திருடர் கூட்டம் ஓங்கிவளர்
காடிது சமத்துவ புரமாமோ
கயமை புரிவார் காவலரோ?
கூவம் மணக்கக் கோடிகளைக்
கொட்டியழித்துக் குறுமதியர்

ஆவல் தணிந்த அலங்கோலம்
அமைத்த படகுத் துறைகளெலாம்
தேவை யென்ன? திருடர்களே
தின்று தீர்த்தார் தெரியாதோ?
காவல் கண்காணிப்பறியார்
கவலை யக்கரை யற்றோரே.
இப்படி திட்டமிட் டிழிவூட்டும்
ஈனர் மீண்டும் எளியோரைச்
செப்பிடு வித்தையால் ஏமாற்றச்
செய்யும் சாகசம் சமத்துவமா?
அப்படிச் சொல்லி யிப்படிச் செய்(து)
அடியாள் குண்டர் அரண் அமைப்போடு
எப்படியேனும் திசை திருப்பும்
ஏமாற்றாலே நாடாளும்
அடிப்படை யிழிமனம் மாறாமல்
அறமுறை தூய்மை யடையாமல்
படிப்பொடு பண்பும் பயிற்சிகளும்
படிந்துளப் பாங்கு சிறக்காமல்
தடிப்பயல் ஈனன் சண்டாளன்
தலைவன் எனப்படும் சழக்குகளை
முடிப்பதற் கவரவர் முயலாமல்
முடியும் சமத்துவ புரம்போலும்!
இரந்துயிர் வாழும் இழிவேபோல்
இவர்சமத் துவபுரம் ஏற்படுத்தல்
தரந்தலை யாகத் தமிழினத்தைத்
தத்தம் அளவில் தகுமுறைமை
புரந்தர முயலார் பொதுவுடைமை
பொல்லாத் தரதர் பொருள்குவிப்போர்
உரம்பெறும் உத்தி; உள்ளதெலாம்
உண்டு கொழுக்கும் உள்நோக்கே.

தலையேன் நமக்கு?

விலைகளை ஏற்றவும் வெறுப்பூட்டிடவும்
தலைமைகள் வேண்டித் தவங்கிடந் தோமா?
அலைகடல் துரும்பாய் ஆக்கும் ஆட்சிகள்
நிலைகுலைந் தோட நிகழ்த்தா விட்டால்
தலையேன் நமக்கு சற்றும் பயனிலை
நிலமாள் தகுதி நிறைமதி யுடையோர்
உலகில் மக்க ளாட்சி உகந்ததாம்
வலைப்படு மீன்களாய் வகையற் றாட்சி
புலையர் கைகளில் போட்டுளம் கலங்கிப்
புலம்புவோம் ஈனப்போக்கிரிக் கூட்டம்
மக்களாட்சி மதிப்பறி யாத
மக்குகள் ஒப்பில் மறைந்திருப் பதனைப்
பக்குவமாகப் பறித்துப் பகல்திருட்டு
உரிமை பெற்றதால் ஒவ்வோர் ஆணையும்
மக்கள் நலனை மாய்க்கும் தீய்க்கும்
நக்கலாய்ப் பேருந்துக் கட்டணம் நாளை
மிக்குயர் வாகும்; மென்று விழுங்கி
அல்லல்பட்டே அள்ளிக் கொடுத்துப்
பல்லைக் கடிப்பீர் பயனொன் றுண்டோ?
தன்மான முள்ளோர்தகுதி சேர்த்து
முன்வரா விட்டால் முற்றும் இழிந்து
கேவல ஆட்சிக் கீழடி பணிந்துக்
கோவணான் டிகளாய்க் குறுகும் அவலமே.

காதலோ காதல்

காதலெனும் மேன்மைக் கருப்பொருளைக் கண்டோரைக்
காதலராய்க் காணின் களிப்படைவோம் – வேதனையே
பாதையிலே கைகோத்துப் பல்சுவையும் கண்டதற்பின்
வீதியிலே நின்றோர் விறல்.

தொட்டுவிட்ட காலம் சுவைகண்டு சூல்கொண்டு
விட்டுவிட்ட காலம் விழிபொழிய – கட்டிளமை
கெட்டொழிய வாழ்கின்ற கீழ்மையினைக் காதலெனின்
சுட்டெரித்தல் அன்றோ சுகம்

நேற்றொருத்தி இன்றொருத்தி நாளை எவளுடனோ
போற்றவோ இந்தப் புதுக்காதல் – சாற்றிடுவீர்
கைபற்றி நிற்பார் கடற்கரையில் பின்வேறோர்
மெய்பற்றிக் கொள்வார் மினுக்கு.

காதலை வாழவிடக் கற்றோமே தோல்வியினால்
சாதலையும் காணச் சகித்தோமே – வேதனையில்
வீழபலைப் பெண்டிர் விடுதிகளும் செய்தோமே!
தாழ்ந்திலையோ காதல் தரம்?

காமம் மதிமயக்கக் கட்டிளமை உள்ளெரிக்கச்
சாம மறியாது தாள்நீக்கி – நாமணைவோம்
என்றிழிந்த எண்ணம் இனிமையோ காதலுறம்
கொன்றழிக்கு மிந்தக் குணம்.

பண்டிருந்த காதல் பயன்நோக்கின் ஊரார்முன்
கொண்டு வந்து சேர்க்குங் குணமுளதே – நண்பரும்
தோழியரும் அன்னையும் சுற்றமுஞ் சூழ்ந்திருந்து
வாழியவே யென்றார் வளம்.

தொலைபேசிக் காதல் துணைநாடிக் காதல்
நிலைமாறிக் காதல் நினைவின் – அலைவழியே
நேர்மையிலாக் காதல்பல நீளுலகில் கண்டுள்ளம்
நீர்வழிய நேர்ந்த நிலை.

''காதலித்தல் எம்முரிமை கண்டித்தல் நுஞ்சிறுமை''
பேதலித்துப் பேசுகின்ற பிஞ்சகளே – பூதலத்தில்
ஒட்டுகின்ற உள்ளங்கள் உட்பொருளைக் கண்டனவோ
கட்டுகிறீர் காதல் கதை.

இளைஞரெலாம் வாழ இடர்ப்பாடு பெற்றோர்
விளைக்கின்றார் என்றுரைப்பர் வீணர் – களைநடுவே
நற்பயிரும் மாய்ந்திடவே நாடுவரோ நல்லுழவர்
குற்றமிலை பெற்றோர் குணம்.

தொல்லையுறக் காதலோ தோல்வியுறக் காதலோ
செல்வழியே சேர்வதுவும் காதலோ – சொல்லை
மதியா மதியில் மயக்குறு காதல்
எதிலே முடியும் இயம்பு?

படையமைத்திடு

உன்னலம் விரும்பார் தன்னலம் விரும்பி உரைக்கும்
பொய்களெலாம்
நன்னலம் போல நம்பிக் கெடுவாய் நல்லறிவுண்டோடா?
பன்மடங் கழிவு பண்பிழி பகட்டு பரப்பும் பழிகாரர்
முன்செலும் கேடு முற்றிலும் தீர முயற்சிகள் உண்டோடா?
மாங்குயில் இன்னிசை மருந்தாம் அறநெறி மறுக்கப்படக் கண்டாய்
தீங்குகள் ஆயிரம் செல்வத் திருட்டு திறமைகள் எனப்படவே
ஏங்குவ தேன்மன இன்னலும் வீண் இவை எதிர்த்தழித் திடலாகும்
பாங்குடன் பண்புகள் பரவுவ தற்குப் படையொன்றமைப்பாயே

கை நழுவப் போக்கிடாதீர்

நேற்றிருந்த அடிமை நிலை நீக்கி நெஞ்சம்
நிமிர்த்தித்தன் னாட்சியதி காரம்பெற்றோம்
ஏற்றமுற வேண்டுமெனில் இனியெப் போதும்
எல்லாரும் ஒற்றுமையாய் இருத்தல் வேண்டும்
வேற்றுமையோர் துளியேனும் வேண்டாம் நாடு
வேரோடு வீழ்ந்து விடும் விட்டிடாதீர்
போற்றிடும மகாத்மா அப்போதே சொன்னார்
போக்கற்றீர் கைநழுவப் போக்கிடாதீர்
பிரிவினைகள் பலவாகப் பேசுகின்றீர்
பேயாட்டம் மோதல்களால் பெருமை யாமோ?
அரியதொரு பெருநாட்டை ஆளப் பெற்றோம்
அமைதியுடன் ஒருமைப்பாடறியா விட்டால்
உரிமையெலாம் பறிபோகும் ஓநாய்க் கூட்டம்
ஓடிவந்து கைப்பற்றும் உணரா விட்டால்
எரிமுன்னர் வைத்தூறாய் இழப்போம் இன்னும்
எதிரிகளாய்ப் பகைமையுணர்வு இருக்க லாமோ?
ஒரு மரத்தின் பல கிளைகள் உண்மை உள்ளம்
உடையோரோடு ஒரெண்ணம் உறவு நெஞ்சம்
பெருகுமுறை ஒற்றுமையைப் பேணிக் காப்பீர்
பீடைகளின் நுழைவுக்குப் பேரம் பேசி
இருளுறவே இந்தியாவை இழந்திடாதீர்
எண்ணத்தில் தூய்மைநெறி யேற்று வாய்மை
அருமையுயர் ஆற்றலுடன் அசைக்க வொன்னா
ஆட்சி நிலை பெறச் செய்வீர் ஆண்மை அஃதே.
காத்துயர்த்திக் கண்ணியத்தைக் கடைக்காலாக்கிக்
கனிவிரக்கம் வாய்மைவளர் கடமை யாற்று

பூத்துயர்வு பொங்கறிவுப் புலமாய் மக்கள்
பொறுப்புள்ளம் பொருந்துறவு போற்றக் கற்பி
மூத்துயர்வு கொண்டாண்ட முன்மை வீழ்ச்சி
முடிவுறவே செயலாண்மை முனைப்புக் காட்டு
காத்துயரும் கருதுதில்லாக் காலம் பாழாய்க்
கடந்தேகும் முன்னுரிமை கடமைதானே
பேதமையே பெருக்கெடுக்கப் பிழைகள் செய்வார்
பெருஞ்செல்வக் கயமைகளே பெருமைகொள்ளும்
வேதனைகள் வெற்றியெனும் விவரமற்றோர்
விரைந்தோடி யிழிவுகளை விரும்பியேற்பார்
மேதையரை மேன்மைகளை மெச்சார் ஈனர்
மிகுதியிழி கலைகளெலாம் இன்ப மென்பார்
பாதை யெது சான்றாண்மைப் பயிற்சி உண்மைப்
பற்றுதமிழ் பழகருமை பழிக்கின்றாரே!
வன்காதல் கொலைமோதல் வளர்காமத்தார்
வலைக்குள்ளே கலைப்போதை மானக்கேடு
நன்னாண்மை ஒழுக்க முறை தகுதி நாணம்
தவற விட்டுத் தாழ்ந்தோரைத் தாங்குகின்றார்
பொன்னேட்டைப் போற்றாது போலிக் கொள்கைப்
புளுகரிடம் தமிழகத்தைப் புதைத்து விட்டு
முன்னேற்றம் எனஎவற்றை முழங்குகின்றார்?
முடிவில்லாக் கீழ்மைகளே முயல்கின்றாரே
ஆய்ந்தறிந்து மக்களின அமைதியின்ப
ஆக்கத்திற் காற்றலறி வமைப்பொன்றுண்டோ?
தேய்ந்திழிந்துத் தோய்ந்தமுந்தும் திரைக்கீழ்மைகள்
தெருவெங்கும் இல்லத்தும் திரண்டு தீமை
பாய்ந்தறிவை பண்பையறப் பாங்கை வீழ்த்திப்
பாழ்படுத்தும் எருமைகளாய்ப் பதற்ற மின்றி
ஓய்ந்திருக்கும் இழிநிலைமை உயிரை வாட்டும்
உணர்ச்சியிலா மந்தையிவர் உள்ளம் எங்கே?

சகதிக் குட்டைகள் சாலைகள்

கோடி குழிகள் குலைநடுக் குறுத்தும்
மூடிய மழைநீர் மூளை யதிர்ச்சி
யானைத் தலைகல் சாலைக் குழிகளில்
அச்ச வுணர்வில் அசையும் வண்டிகள்
சக்கரம் சிக்கித் தடுமாறிக் கவிழ்ந்து
முழுக்கால் சட்டை முழுகி வெளிவர
நீரில் நாட்டியம் நிலைகுலைந் தாட
வெள்ளுடை காவியாய் வேதனை முகங்கள்
சேற்றுநீரைத் தெறிக்கும் பேருந்து;
வாய்பிளக் காத வலிமை திண்மை
வாய்க்க யிடுபொருள் வகையறிந்து அமைத்திடார்
பொத்தல் தடுக்குபோல் போட்ட சாலைகள்
அரசியல் இழுக்கர் அகன்ற வாய்கள்
அதிகாரக் கேடர் அகப்பள்ளங்கள்
கோடி கோடிகள் குழிகளில் மண்ணில்;
நீடிக்காது நெகிழும் விழுங்கும்;
மழைத்துளி விழுந்ததும் மலர்ந்து மயங்கும்
இழையும் குழையும் இளிக்கும் குலையும்
மழையும் சாலையும் மணந்தோர் போலும்
சாலைகள் சிதைந்து சகதிக் குட்டைகள்
எத்தனை ஓடைகள் யிடையிடை பெருகும்
தூர்ந்தசாக் கடைகள், தொல்லை நோய்கள்
கார்காலக் குமுறல் கதறல் ஏசல்
ஆண்டாண்டு தோறும் அலறிப் புலம்பல்
மீண்டும் அமைதி மெத்தனம் செலவு
புதுக்கல் எனும் பெயர் புரட்டர் கொள்ளை
தக்கவை செய்யத் தகுதியற்ற
மக்கள் கரத்தைக் காட்டும் சாலைகள்

எக்குறை யேனும் ஏசிப் பேசி
எளிதில் மறந்துஇழி கேடுகள் சகிக்கும்
திக்கித் திணறும் சீற்றம் என்பயன்?
திறன்வளர்த் தாக்கச் சிறப்புச் செயல்களைப்
பிறப்பிக் காத பிதற்றல் கூட்டமே.

நாகரிகம்

நாகரிகம் பெருந்தேவை நாட் டமல்ல
நம்முடைமை விரிவாக்கும நாட்டபுமல்ல
போகவுல காக்குவது பொய்யின் வேட்கை
பொருந்தாத பொருள் விருப்பம் போக்கி, உண்மை
யாகவுழைத்து எளிமையுடன் அரிதாயத் தேவை
அடக்கித்தம் மனநிறைவை அமைத்துக் கொள்ளல்
நாகரிகம் வாழ்வியலின் நயமும் பாங்கும்
நகர நர கங்களிலா நாகரீகம்?

கடவுள் ஏன்?

தொலைவினில் அறிவை வைத்துத் தொழுவதால்
கோயில் சாமி
நிலைபெறும் படையல் பூசை நினைவினில் கள்ளம் கோடி
அலைவது காலந்தோறும் அணுவள வேனும் மாறாப்
புலையரே உண்மை யற்றீர் போக்கெலாம் புன்மை யுற்றீர்
சாலைகள் தோறும் கோயில் சடையரே நேரம் கொன்று
மாலைகள் பூக்கள் தேங்காய் மடமையோடு அணிவகுத்துச்
சேலைகள் உடைகள் மேனிச் செழுமைகள் வசதி ஊர்தி
காலமெல்லாம் செருக்குக் காட்டுவீர் கடவுள் என்றே.

மறியல்

குறைமிக்குத் தம்முரிமைக் கூச்சல் போட்டுக்
கூசாது பிறருரிமை கொல்லும் கூட்டம்
சிறை வைக்கும் வீட்டுக்குள் சிதையும் மானம்
சிலகட்சி குழுக்களினால் சிறுமை ஈனம்
முறைமைக்கு மாறாக முடிவெடுக்க
முடியுமென முயல்வாரோ மூளையுள்ளோர்?
நிறைமிக்கோர் முறையாய்ந்து நிறுத்த ஆணை
நெஞ்சுயர்த்தி வழங்கியதால் நெஞ்சம் ஆறும்
மறியலினால் மக்களுக்கு மகிழ்ச்சி யாமோ?
மணப்பயணம் நோயுற்றார் மருந்துத் தேவை
அறியாதார் திரள்கூட்டம் அரக்கக் கட்சி
ஆர்ப்பாட்டம் அலங்கோலம் அற்றுப் போக
நெறியுரைக்கும் முறைமன்றம் நெஞ்சில் நேர்மை
நிறைந்தோரே பாராட்டி நிலைமை தேர்வார்
வெறியுரிமை தொழிலாளர் வீட்டையுந்தான்
விழிநீருக் காட்படுத்தும் விழிப்புண்டாமோ?

உலகம் அறியாதோ?

ஒப்புக் கொளள மனமில்லாமல் ஒதுக்க முயலலாம்
உண்மையான மதிப்பிருந்தும் உள்ளம் மறுக்கலாம்
சிப்பிக் குள்ளே முத்துபோன்ற சிறந்த பாக்களைத்
தேர்ந்து துய்க்கத் தெரிய வேண்டும் திறமை வேண்டுமே
அப்பிக் கொண்டு சேற்றை மணக்கும் சந்தனம் என்னும்
அற்பர் ஆர வாரமெல்லாம் அரிய செய்யுள் என்(று)
உப்புச் சப்பில் லாத கூட்டம் ஒப்பிலாததாய்
உயர்த்தும் ஆயின் உண்மை என்ன உலகறியாதோ?

அகத்துறை

வலிமை வாலிப வாயிலிலே
　　வஞ்சியர் காளையர் வரவேற்கும்
பொலிவும் எழிலும் பூரிப்பும்
　　பொருந்தும் மனத்துப் பொஙகியெழும்
மலியும் வேட்கை மணவுறவில்
　　மகிழ்ச்சி யூட்டும் இயற்கையிவை
அலிகள் காதல் விலையாக்கி
　　அகத்தை யிகழ்வார் அறிவென்னே?

எவரும் அறியா வுறவதனை
　　எடுத்துச் சொல்லும் இழிகாமம்
கவரும் காட்சி கழிசடைகள்
　　கடைநடை பாதை விடுதியெலாம்
தவறும் எழுத்து தரக்கீழ்மை
　　தன்மானத்தைத் தகர்த்தாலும்
உவகை கொள்வீர் அகத்துறையின்
　　உயுர்வு கெடவும் ஒப்புவதோ?

காதல் தூய்மை கடைச்சரக்கா?
　　காசுக்கயவர் களித்துறையா?
பேதைக் கூட்டம் பெருவிருப்பம்
　　பேசுந்திரையொளி பித்தாட்டம்
ஓதல் விருப்பம் முயற்சியிலா
　　ஊர்திரி நாய்கள் உருவாக்கம்
சாதல் நன்று சற்றேனும்
　　தன்னறி வற்ற சுவை நாட்டம்.

அரும்பே!

குறுவாய் திறந்து குலவும் கொஞ்சும்
சிறுவாய் மலர்ந்து சிரித்துத்தாவும்
முளரி முகமும் முடிவிலா மகிழ்வும்
குழவி வடிவம் குவிப்பது; மெய்யெலாம்
இனிக்கும்; உயிரை இயக்கும்; இணைக்கும்
எல்லையில் களிப்பின் இருப்பிடம், செம்மலர்த்
தளிரின் சிறுவிரல் தடவக் குளிரும்
மென்பட் டரும்பு மிகுமணச் சென்டு
செவ்வல்லி மலர்களைச் சேர்த்தெடுத் தாற்போல்
இவ்வல்லி யிருக்கும் இல்லம் மணக்கும்
பிச்சி மணமோ பிஞ்சுக் கைகளில்
எச்சிற் பாலில் எல்லா மணங்களும்
உள்ளம் மயக்கும் உள்ளங் கால்கள்
வெள்ளி நெற்றி வெண்ணிலாப் பாதி
பன்னீர் சந்தனம் பரிசுகளாமே
உன்னைப் பெற்றோர் உறவுக்கு வழங்க!
வாரியெடுத்து வலமிடம் ஒற்றிப்
பூரிப்பதற்குப் பூத்தசெங் காந்தள்
குடும்பத்து அனைவரும் குழந்தைகளாக
அரும்பே பேரருள் அள்ளி வந்தாயே

நமர்

அச்சம் விலக்கி அறிவாண்மை கைக்கொண்டு
துச்சமெனத் தீயோர் துணைநீங்கி – மெச்சரிய
பீடுமிகக் கொண்டு பெருங்கருணை நெஞ்சினராய்
நாடுயர வாழ்வோர் நமர்

இணையில்லாப் போர்க்கருவி

(அகிம்சைப் போராட்டம்)

குலையாத மனமென்னும் சாணைக் கல்லில்
கூரேற்று போர்வாளின் முனையைப்போல
நிலைகூர்மை கொண்டது கொல்லாமைப் போர்தான்
நிலைகுலைத்து வல்லரசும் நீக்கும், மாந்த
தலைநிமிர்ந்து தன்னாண்மை தகுதி காட்டத்
தகுந்தநெறி வாய்மையறஞ் சான்றோர்க் காகும்
உலகிலிதற்கீடாய்ப்போர்க் கருவியில்லை
உரமுடையார் ஒப்புவரிவ் வுண்மைதானே

உலகம் கலங்குவதேன்?

மக்கள் மகிழ மருந்தென்ன?
மற்றவர் நலனில் அக்கரையே
சிக்கல் வந்திடக் காரணமோ
சிறுமை தன்னலக் கேடுகளே
பக்குவமில்லாப் பணக்கிறுக்கன்,
படுகொலை, இரக்கம் நற்பண்பு
தக்ககண்ணோட்டம் இல்லாமை
தாழ்ந்த தரணி தலையிறக்கம்
திருடர் கூட்டம் சிறப்புறவே
சிறுமை தாங்கும் நடுத்தரமாம்
ஒருவர் நெஞ்சும் உறுதியிலை
உயர்நெறி நாடும் உணர்வில்லை
பெருகும் அழிவைத் தடுக்காமல்
பேச்சில் வீரம் பெருகுவதால்
அருகும் மகிழ்ச்சி அனைவர்க்கும்
ஆண்மை வாய்மை ஆகாதோ?

இன்ப இளமை

சிலநல் லவைக்குத் தீயவை பலவாய்
கலைநல மழிக்குங் கயவர் களித்திரை
கலைஞர் பெயரால் சூழ்ச்சி சூது
வயிறும் வசதியும் மான அழிப்பில்
உள்ளுளவு அறியா உயர்கலை புரியா
சள்ளை சப்பை சாய்க்கடைப் புழுக்கள்
தூய்மை நாட்டம் துளியும் உண்டா?
உண்டெனில் கீபமைக் கலைக்குடன் படுமோ?
நடிகன் மன்றம் நடத்த விரும்புமோ?
கடிவாளமில்லாக் காட்டு விலங்குகள்
துடிப்பாம் இளமையாம் துய்க்கும் காலமாம்
ஈனர் விருப்பிற் கிவரெலாம் 'பலிகடா'
தானடங் காத தறுதலைக கூட்டம்
இன்ப இளமை இயல்பெனப் பிதற்றித்
தன்னையே விற்றுத் தாளடி நக்கி
பொன்பொருள் மேலாம் பொழுதழி பூரியர்
தமரியர் குமரர் குருட்டுத் தாவல்
தமதிழி நிலையைத் தாமே அழைக்கும்
அறிவிழப் பினிலே ஆர்வம் வேகம்
நெறிமுறை யாதென நினையார்
வெறிதணிகாலம் வேதனைப் பட்டே.

நீதி தனக்குதவி நீட்டாதேல் நீயிறங்கிப்
போதி யெனப்புகலும் புல்லறிவால் – தோதிலையேல்
எல்லாம் அழிந்தொழிய என்மகிழ்வே வாழியெனும்
நல்லர சாமோ நவில்.

முடிந்தேன் என்று ....

துன்பத்தில் கைவிட்டுத் துடிக்க வைத்தார்
 தூவெனவும் சீ!யெனவும் துடுக்காய்ப்பேசி
அன்பற்றார் அற்பரென அறிய வைத்தார்
 அவர்க்கன்றோ அத்தனையும் அளித்துக் காத்தேன்!
முன்பெற்ற நலமெண்ணார் முடிந்தேன் என்று
 முரண்பட்டார் மோதியெதிர் முரட்டுப் போக்கு
தன்பெற்ற தந்தைக்குத் தளர்ச்சி யென்றால்
 தனியாகும் பேதைகளைத் தாங்கலாமோ?

உள்ளத்தில் தூய்மையிலா உறவு கற்றார்
 ஒரு துளியும் பயனில்லார்; ஒப்புக்கேனும்
பிள்ளைகளாய் எண்ணுவதே பிசகு; மெய்யாய்ப்
 பிறரிடத்துப் பெயரெடுக்கப் பேயாய் நாயாய்த்
துள்ளுவதும் அலைந்தலைந்து சொல்கேட்டாடித்
 தொண்டனென ஓடுதற்கும் சோறுபோட்டு
நொள்ளைகளை ஊக்குவிக்கும் நோயே தாயாம்
 நோக்காடு தந்தைக்கு நொடிப்பிவர்க்கே

வளர்ந்துபயன் வழங்காது வாய்மை யற்று
 மறைத்து உள்ள வஞ்சகமே மனைவி மக்கள்
அளந்துஇட்டு என் தேவைக்கு என்று அமைத்திடாமல்
 அவர்போக்கில் மகிழ்ச்சியுற அமைதி காத்தேன்
உளந்தொட்டுப் பணிந்துஉதவாது உண்டு உடுக்க
 உறவென்ன சீழ்மனங்கள் உருவாக்கித்தன்
களங்கத்திற்கு உரமேற்றும் கயமை நீட்சி
 கடுகளவும் மாண்பற்றாள் கைப்பாவைகள்.

மருட்சி

மேன்மை யழித்து மிகுநஞ் சூட்டி
தான்தோன் றிகளைத் தலைவர்களாக்கி
நாண்துளி யில்லா நாய்ப்பிழைப் புக்கு
மாண்புக ளென்று மகுடி யூதி
பண்பிலாச் செல்வப் பாதகக் கீழ்மையை
வண்ண வாழ்க்கை மதிப்பென வாழ்த்தி
இழிகுல மாகும் இளையர் பெரியர்
வழியறி யாமை மானக்கேடே
இனநலம் குணநலம் ஏதும் போற்றா
கனவுலகு இவர்க்குக் கண்ணில் மின்னும்
ஈனம் அஞ்சார் எழில்மாளிகைகள்
சேனை செழிப்பு சேவகம் ஏவல்
மக்களாட்சி மருட்சி
தக்கவை நாடும் தகுதியின்மையே.

சமதர்மம் காத்திட

பொதுத்தீமை புரிகின்றோன் புதுவாழ்வு வாழ்கின்றான்
இதுகண்டு மகிழ்கின்றான் இன்றாட்சி நடத்துபவன்
பதுக்கலையும் கொள்ளையையும் பாராள்வோன் அறியானா?
புதுக்கரடி விடுகின்றான் பொதுமக்கள் தொண்டென்றே.

கோடைக் கனலாகக் கொதிக்கின்ற உள்ளங்கள்
மேடைச் சொற்பொழிவால் மிரள்வனவோ இன்னமும்
வாடவிடும் சண்டாளர் வாய்திறக்கு முன்னமே
சாடிடவே வேண்டும் சமதர்மம் காத்திடவே.

தோற்றவன்

பயன்கலை யாதெனப் பகுத்துணர்ந்தறியார்
பரத்தைமை கலையெனப் பயிலும் இளையர்
உயர்கலை ஒழுக்க உள்ளப் பயிற்சி
ஒருநொடி விலகினும் ஊனம் ஈனம்
மயக்கிசை பாடல் மாசுமதியால்
மதிப்பது கீழ்மை வரவேற்பது வீண்
இயக்கறி வின்திறம் எப்படி மானம்
இருப்பதற் கடையாளம்தான் என்னவோ?
சுவைக்கலை அறியாச் சுவைஞன் சொத்தை
தொலையொளி யழுகலைத் தொடர்வது கொச்சை
கவைக்குத வாத காதல் கற்பனை
கழிசடைச் செல்வக் கயவர் விற்பனை
சுவைக்கவோ கீழோர் சொத்து சேர்க்கவோ?
தோற்றவன் சுவைஞன் மாற்றம் உண்டோ?
சுவைத்தரம் தேர்ந்து தூய்மை மதிப்பாய்
சூது கயமை சூழ்கலை ஒழித்தே (28.12.97)

கல்விப்பகை

கல்லாமைக் காரிருளில் கண்ணில்லார் வீழ்ந்திருக்க
எல்லாமும் கல்வியென ஏற்றமுறும் ஓர் கூட்டம்
பொல்லாத செல்வத்தைப் போற்றியெழும் போராட்டம்
கொல்லாது கொல்பகைமை கோலோச்சும் தான்மறைந்தே.

மழையே! மழையே!

அன்றாடம் இவ்வாறே ஆற்று வெள்ளம்
அதிகரித்துக் கரைபுரள அனைத்தும் தூய்மை
குன்றாத படி, யிழுக்கர் கூட்டம் காய்ச்சும்
கொடுநாற்றக் கழிவுகலக் காத வண்ணம்
நின்றேபெய் கயவர்தொழில் நீங்குமாறு
நீ தொடர்ந்து பெய்ஈனர் நிலை குலைத்து;
நன்றாகும் மனமில்லார் நாணமில்லார்
நாற்றமடிக் கின்றயிவ்வூர் நன்மைகாண;
குடிகெடுக்கும் குடியெருக்கும் கூட்டம் மானம்
குன்றியள வற்றகய வர்கள் கொட்டம்
முடிவதற்குப் பெருமழையே ஆண்டு முற்றும்
முடிவின்றிப் பெய்திடுவாய் மூளை கெட்டு
மடிவதற்கிவ் வூர்வருவோர் வழிமறக்க
மனைவி மக்கள் குடும்பத்தை மனம் நினைக்க
விடிவியற்கைத் தடுப்பாற்றல் விளைவாய் வந்து
வெறியர் தொழில் விட்டொழியப் பெய்தல் வேண்டும்
ஆற்றோரம் அடுப்பெரியும் அங்கே பெய்க
ஆங்காங்கே நெடியடிக்கும் அழுக்கில் பெய்க
காற்றோடு மாசுகலக்காமல் பெய்க
கட்டைவிற கெரியாமல் கனத்துப் பெய்க
மாற்றாது திருந்தாது மமதை கொண்டு
வன்முறையால் வளர்கயவர் வளவில் பெய்க
வேற்றூரார் கூசுகிறார் மாற்றப் பெய்க
வெட்கமிலார் தொழில்ஈனர் வீழுமாறே;
காவலரைக் கயவருடன் கலக்க விட்டுக்
காய்ச்சுபவன் ஏவஅவன் கையாளாகிச்
சேவகஞ்செய் இழிவீனர் சிறுமைதீர
தெருவோரம் பிறப்புறுப்பு தெரிய வேட்டி

போவதறியாக்குடியர் புத்தூர் வாராப்
 பொழிவாகப் பொழிந்திடுவாய் பொழுதும் நாளும்
தேவையிது நிறைவேற்றிச் சீர்ப்படுத்து
 தீயர்தொழில் நடவாது தீர்ப்பதற்கே.

எல்லையிலா வெறியாட்டம்

மக்களிடம் மானமிலை மறுத்தெதிர்த்து
 மாய்த்துவிடும் வலிமையிலை வஞ்சக் கீழோர்
கக்கிழிவு விளம்பரங்கள் கண்டும் தங்கள்
 கண்ணியத்தைத் துளியேனும் காத்துக் கொள்ளார்
எக்கழிவும் விலைபாக்கும் ஈனர்; வெட்கம்
 எள்ளளவும் இல்லாதார் இடுப்பொடிக்க
தக்க செயல் கூடாதார் தலையேன்? இன்னார்
 தவிடு உமியோ? பிண்ணாக்கோ சாணந்தானோ?
இதுதகுமா? பொதுநல்மா? எவர்க்குத் தீங்கென்று
 எண்ணுவதற்கு என்னதடை இவற்றாலெல்லாம்
புதுமெருகேற்றிக் கொள்ளும் பொல்லாச் செல்வப்
 புலையருக்குக் காவலரண் புல்லர் கூட்டம்;
எதுபொருந்தும் வாழ்க்கைக்கு என்றில்லாக் காட்சி
 எல்லையிலா வெறியாட்டம் ஈனச் செல்வம்
மதுவருந்து விளம்பரங்கள் மனைகள் தோறும்
 மரண அடி கொடுக்காமல் மயக்கம் அந்தோ!

போகும் பொய்யாட்சி

நாமே நமக்கென் றாள்கின்றோம்
நரிகள் எப்படி நடுவினிலே
தாமே அறிவால் தாந்தேறும்
தகுதி பயிலாச் சரிவேதனால்?
ஆமே அரசும் அமைச்சுகளும்
ஆன்றோர் சான்றோர் அமைப்புகளால்
போமே கள்வர் பொய்யாட்சி
பொதுநலம் புரிந்து போற்றிடினே.

தக்கோர் சான்றோர் தலைமைகளில்
தாழ்வும் உயர்வும் கிடையாது
மக்கள் இணையம் மகிழ்ச்சிக்கு
மதிப்பும் குறையும் மதிதெளிவால்
சிக்கல் அறுத்து நிலையறிந்து
சிறுமை பெருமை தாமுணர்ந்து
மிக்க மகிழ்வாய்க் கடனாற்றி
மேன்மை காண்பர் உழைப்பாலே.

யாருக்காக?

வறுமை வாட்டம் மாறாது
வளமை இவர்க்கு வாராது
சிறுமை தாழ்வு தீராது
செழுமை முழுமை சேராது
பொறுமை சொத்து; பொருள்ளல்ல;
பொருளாள் வோர்க்குப் பொருளாவார்
வெறுமை யுழல்வார் இவராலே
வீணர் மகிழத் திட்டங்கள்.

உயர்கலை

செய்யப்படுவது செய்யுளாதலால்
செய்ய வேண்டும் சிறப்பின்வடிப்பாய்
சொல்லுக சொல்லையச் சொல்லை வேறோர்
சொல்லெல் லாதசொல்லால் என்றார்
தேடித் தேடித் தேர்ந்தெடுக்காமல்
கோடிக் குப்பைகள் குவித்துப் பயனென்?
பாடல் புனைய பயிற்சி நுணுக்கம்
கூடல் உயர்வு கூட்டும் மதிப்பு !
தேர்ந்த சிற்பி செய்த சிலைபோல்
காணும் கன்னி கருத்தைக் கவர்வாள்
எட்டுக் கோணல் இளையள் ஆண்மை
தொட்டும் தேய்த்தும் தூண்டல் அரிதெனல்
அறியார் அவலம் அந்தோ எழுத்துக்
கந்தல் பொந்தல் கடைநிலை கழிசடை;
கொட்டிய பூக்களின் கட்டிய பூக்கள்
கொண்டைக் கழகு கூட்டும் காட்டும்
கண்டபடி சிதறிக் கலைந்தவை குலைந்தவை
கண்டழ கென்னும் முண்டம் முழுக்குறை,
உயிர்பெற் றெழுந்த ஓவியம் என்பார்
உயர்கலை உயிர்க்கலை ஒப்பிலா நுட்பத்
தூரிகை வண்ணம் தோய்கலைத் துய்ப்பு
வடிப்பின் முடிப்பு வளைவுகள் நெளிவுகள்
இறுதித்தொடுகை என்றெலாம் மெச்சுவர்
பாட்டுக் கவின்கலை படைப்பின் திறத்தால்
ஊட்டும் இன்பம் உணர்ந்தறி பாங்குளம்
அரிய செய்யுள் அருமை
உரிய முறையான் உயர்த்திப் போற்றுமே.

பாதக நாடு ...

எதுநலம் அறியா எளியர் கூட்டம்
பொதுநலம் பேசும் பொய்யரை நம்பும்
பதுமைக ளாகப் பாதகம் ஒப்பும்
எதுவரை வறுமை ஏற்றுத் தவிக்கும்?
கயமை ஈனம் கண்டும் உள்ளம்
அயர்ந்தே வெதும்பி ஆறிப் போவதேன்?
துன்பம் இழப்பு தொடரும் தொல்லை
வன்முறை யாட்சி மறைமுகச் சுமைகள்
தொலைக்கும் செய்ம்முறை தோன்றா நிலையேன்?
அலைக்கும் மாற்றும் அறிவு குறைவோ?
புதிராய்ப் பொதுநலம் எதிராய்ப் புல்லர்
அலுவ லாட்சி அதிகாரங்களில்;
அழுது அழுது அடங்கும்; அல்லல்தாங்கும்
பழுதுகள் பரவும் பண்புகள் தேயும்
மாந்தர் உள்ள மாசு அடிப்படையிலா
வெறுப்பு எதிர்ப்பு அவரவர் வீட்டுக் குள்ளும்
கருத்தொற்றுமையிலாக் கசப்பு பகைமை
வீடலங் கோலம் நாடது போலவே
தெளிவும் நோக்கும் திறமும் கொண்டு
சீர்ப்பட சிறப்புற செயல்பாடென்ன?
ஒளிவு மறைவிலா உறவு வலுப்பெற
ஏதும் நடைமுறை இயங்குதல் உண்டா?
தீது தொலைக்கத் திறம்பெற் றீரா?
வேதனை வேதனை வேகும் நெஞ்சம்
பாதக நாடு பயன்பெறல் உண்டோ?

நாடு நாடாக

நல்லுள்ளம் ஒருசீராய் நம்மெல் லார்க்கும்
நம்பிக்கையாய் அமைதல் நமது தேவை
நல்லுடைகள் அனைவர்க்கும் கிடைத்து விட்டால்
நாகரிகம் மேன்மையென நம்பலாமா?
செல்வவளம் பெருமகிழ்ச்சி திருடருக்கு
தீங்கில்லா மக்கள் நலம் சீர்மைகாண
நல்லவரால் நாடமைதல் நாடின் வீணர்
நடிப்புலகை நாடாத நாணம் நன்றே.

உருக்குலைந்த உன்முகம்

தெருக்கால்வாய் மின்விளக்கு சிதைந்த சாலை
சினமூட்டும் குண்டுகுழி சேறுகுப்பை
இருக்கும் இழி நிலைகண்டாய் என்ன கற்றாய்?
இவையாவும் உனக்குரைக்கும் செய்தியென்ன?
உருக்குலைந்த உன்முகத்தின் உண்மை காட்டும்
உன்னாட்சித் திறமின்மை உணர்த்தும் ஈனச்
செருக்குடைய கீழோரைத் தேர்ந்தெடுத்துச்
சிறுமையுறும் காட்சியினைத் தெரிந்துக் கொள்வாய்.

யார் வருவர்?

எண்ணியாக் கோடி கோடி
இருப்பினும் வாடி வாடி
மண்ணிலோர் மகிழ்ச்சி யில்லா
மாந்தரும் கோடி கோடி
அண்ணலார் அன்பு நாடி
அனைவரும் ஒன்று கூடி
பண்ணலாம் பணிகள் யார் யார்
பரிவுடன் வருவர் ஓடி?

தமிழின் வாழ்வு?

எந்தமிழ் அன்னை யென்றும்
இன்னுயிர் நீதான் என்றும்
வந்ததோர் தீங்கென் றாலென்
வாழ்வையே முடிப்பேன் என்றும்
சிந்திடும் வீரத் தாலே
சிறந்ததோ தமிழின் வாழ்வு?
செந்தமிழ் உலகை யாளச்
செய்திடும் முயற்சி என்ன?

அறிவியல் ஆய்வு நுட்பம்
அளவிலா வளர்ச்சி வேகம்
பொறியியல் கோள்கள் போக்கு
புதுப்புது படைப்பு பார்வை
செறிவொடு நாளும் நாளும்
சேர்வன மிகுதி ஈடாய்த்
துறைதொறும் தமிழ் வளர்ச்சி
துலங்கிடச் செய்த துண்டோ?

மொழிவளர் முயற்சி ஒவ்வோர்
மூளையும் கொள்ள வேண்டும்
பழிவளர் நிலைமை காட்டிப்
பலபடி தாழ்ந்திருப்பீர்
அழிவினில் மொழி கிடக்கும்
ஆர்ப்பரித் தென்ன ஆகும்?
செழிதமிழ் உண்மை நாட்டம்
தெரிய நீ செய்த தென்ன?
செலவுகள் மகிழ்ச்சி சின்னத்
திரையொடு கலந்து சீர்மை

குலைவது பொழுது போக்கு
கொலைபடும் மொழியின் வாழ்வு
தலைதர எழுந்த வேகம்
தணிந்து நீராகிப் போனாய்
விலை தமிழ் மானம்; எங்கே
விளைந்திடும் மொழியின் வேட்கை?

மொழியிலான் இனமே வீழ்ந்து
முடிவதுகாணான் காலம்
கழிவது கழிவில் உள்ளம்
கடமையைக் கண்ட துண்டோ?
அழிவது செல்வ மானால்
அதுமொழிக் கென்பார் யார் யார்?
பழிவரப் பார்த்திருப்பான்
பண்பிலான் பணமெதற்கு?

அன்றாடம் மொழிக்கு நீசெய்
அரும்பணி என்ன? உன்றாய்
நன்றாக நலம் புரிந்த
நாள், அளவு என்ன? கூடி
நின்றே நல்லெழுத்து மேன்மை
நிலைபெற வழங்கி னாயா?
தின்று, தூங்கிக் கொண்டேவுன்
'திரு'அழிந்து ஒழிதல் நன்றோ?

செல்வரே!

பண்புடை செல்வர் பரிந்து காத்து
மண்மிசை மொழிக்கு மகுடம் சூட்டுக
வண்டமிழ் செழிக்க வாய்ப்புகள் பெருக்கித்
தண்டமிழ்ப் பாவலர் தழைக்கச் செய்கவே.

மகாத்மா

அச்சம் பெண்அவா அடங்காப் பேதைமை
கூச்சம் குழப்பம் குறிக்கோ ளின்மை
இளமையில் பொதுவாய் இருக்கும் குறைகள்
கொண்ட ஒருவர் கொள்கைக் கோட்டையாய்
அசையா அரசுகள் அசைக்கும் அண்ணலாய்
வளர்ச்சி யடைந்து வைரமாய்த் திண்மை
பெற்ற நிகழ்ச்சிகள் பெருமைக்குரியன
வாய்மை காக்கும் வரலா றெழுதித்
தன்னை யெவரும் தவறாய்க் கடவுள்
ஆக்கி விடாமல் அடியும் முடியும்
விரிவாய் விளக்கி வெளியும் உள்ளும்
மக்கள் அறிய வழங்கிய பேருயிர்
மகாஆத்மா உலக மாந்தர் தந்தை
உள்ள உறுதியே உயர்ந்த கருவி
அஞ்சாமையேதான் அழியா ஆண்மை
ஒற்றுமை மட்டுமே ஒப்பிலா வலிமை
முறைமை ஒழுக்கம் முன்னேற்றக் கொள்கை
கல்நெஞ் சங்களைக் கரைத்து உடன்படுத்திட
உண்ணா நோன்புதான் ஒப்பிலாக் கருவி
ஈடிலா நெறிகள் இறுதியில் வெற்றி
பெற்ற செய்ம்முறை பெருமை அருமையே. (14.1.98)

மக்களாட்சி?

மக்கள் அமைப்புகள் மலர வேண்டும்
மக்கள் உணர்வுகள் மனநிலை எண்ணம்
மக்கள் தங்கள் மனம் விட்டுப் பேசிச்
சிக்கல் தீர்க்கும் தெளிவு கூர்மை
பக்குவம் பாங்கு பணித் திறம் வேண்டும்
பழுது பட்டுப் பாழாய்க் கிடக்கும்
மக்களாட்சி மறுமலர்ச்சிக்கு
மக்கள் - மக்கள் மனைதொறும் கூடி
அக்கம் பக்கம் அனைவரும் சேர்ந்து
நாளும் நாட்டு நடப்பும் நிகழ்வும்
அன்றாட நடைமுறை ஆக்கம் அவலம்
நாட்டாட்சியினால் நல்லவை கெட்டவை
அல்சி யவ்வழி அமைச்சன் அதிகாரி
நிறைகுறை தேர்ந்து நிலைமை ஆய்ந்து
மேலாண்மைப் பொறுப்பு மிகுதியுணர்ந்து
நாடாள் தகுதி நாடுக மாந்தர்
தேர்ந்தெடுத் தானதும் தீர்ந்ததோ பொறுப்பு?
நேர்ந்தவை நேர்பவை நிறுத்துப் பார்க்கும்
கூர்ந்தறிவு இல்லார் குற்றம் புரிவோர்
இவ்வகை மாந்தரால் இழிநிலை யாட்சி
அறிவுள் ளோரும் ஆற்றல் அமைப்புச்
செறிவில் லாது தீங்கு தொடருமே.

ஈனம் தொலைப்பாயோ?

அறிந்தே கெடுக்கும் அரக்கர்களை
அழிவே தொழிலாம் அமைப்புகளை
சிறந்தோர் தலைவர் சிறுமையெலாம்
தீர்க்கத் தகுந்தோர் முதல்வரெனப்
பரிந்து போற்றும் பாமரரைப்
பகுத்தறிவாளர் எனத்தகுமோ?
நரந்தேர் அறிவு தன்மானம்
தாழ்ந்த தமிழகம் சரிப்படுமோ?
சிக்கல் தீர்க்கத் தெரியாது
திருட்டும் புரட்டும் மிகு திறமை
அக்கம் பக்கம் அடியாட்கள்
அவையே அரசியல் அடிப்படையாம்
மக்கள் உழைப்பு மரியாதை
மண்ணாய்ப் போக்கும் மமதையரைத்
தக்கோர் சான்றோர் படை கொண்டு
சாய்க்கும் திறனில் லாத்தீங்கே
கைப்பொருள் திறமை காலமெலாம்
கடமை தொண்டெனக் கழித்தவர்கள்
மெய்ப்பொருள் மாந்தர் மகிழ்ச்சியென
மிகவுழைத்து உயிரும் விலைதந்தார்
பைப்பொருள் சொத்து பலவேலி
பதவியாட்சி பகட்டுடனே
கைப்பற்றுவதில் கைகாரக்
கட்சித் தலைவர் ஏன்வந்தார்?
வெட்கம் மானம் அற்றோராய்
வெறியர் தீயர் செல்வவளம்
பெற்றுப் பயனுறப் பின்செல்லும்
பேதைப் படைகள் நன்னெறியை
விட்டுக் கயமை விரிவணிக
வேகச் சுழலில் ஆழ்ந்தன, வோர்
சொட்டுப் பகுத்தறி வெங்கேடா?
சொல்நீ யீனம் தொலைப்பாயோ?





மாறாத புதுவாழ்வுடன் வளர்ந்து பெருகுவது மது. ஒழிக்கப்பட்ட குதிரைப் பந்தயம் மீண்டும் ஓங்கி வளர்ந்து ஒரே கொண் டாட்டம். எண்ணற்ற குடும்பங்களுக்கு திண் டாட்டம். குடியிலும், சூதிலும் ஈடுபடுகிற இந் நாட்டு மன்னர்களில் படித் தவன் படிக்காதவன் வேறு பாடு கிடையாது. மிகப்படித்தவனும்; அலுவலக வேலை செய்பவனும்; தற்குறியாக அல்லது அரைகுறைப் படிப்பாளியாகத்தான் ஆட்டோ ஓட்டுபவனும், உடல் உழைப்பால் வருமானம் ஈட்டி பலதரப்பட்ட அன்றாடங் காய்ச்சியாக இருப்பவனும் ஒற்றுமையாகச் சூதாடு கிறார்கள்.

''கையில வாங்கினேன் பையில போடலே; காசு போன இடம் தெரியலே'' என்ற நிலை இன்னமும் தொடர்கிறது. வறுமையை ஒழித்து வளங்கொழிக்கச் செய்வோம் என்று வாய்கிழியப் பேசுவோர் வன்முறை யைக் கொழிக்கச் செய்து மக்களை அச்சத்தின் பிடியில் அவதியுறச் செய்திருக்கிறார்கள். மக்கள் நன்மைதான் ஒரே குறிக்கோள் என்றால் எல்லாரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டியதுதானே? எவ்வளவு பகைமை? எத்தனை மோதல்? எண்ணற்ற வழக்குகள்; இழிவான கூட்டணிகள். இது மக்கள் வாழிடமா? மாறுதல் யாரால் வரும்? மதியுடை மக்கள் கூடி மதிப்பை மீட்பார்களா? இது நடைபெற வேண்டும் என்பது எனது பேரவா. அதற்கே இந்நூல்.

அன்புடன்

அனகை நா. சிவன்